24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

பக்கங்கள் - 24
விலை - 30 ரூபா

சுடர் 34 கதிர் 207 ஆனி 09 ஆம் நாள் திங்கட்கிழமை 24 ஜூன் 2019 வள்ளுவர் ஆண்டு 2050

## 18,19 ஆவது திருத்தங்களை இல்லாது ஒழிக்க வேண்டும்

### பின்னடைவுக்கு அவையே காரணம் அரச தலைவர் மைத்திரி தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 24

சிறந்த நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டுமாயின் அரசமைப்பின் 18ஆவது, 19ஆவது திருத்தச் சட்டங்களை இல்லாது செய்ய வேண்டும் என்று தெரிவித்துள்ளார் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன. கொழும்பில் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று நடத்தப்பட்ட தேசிய வீடமைப்பு அதிகார சபையின் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இந்த நிகழ்வில் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவும் கலந்து கொண்டிருந்தார். 19





## கல்முனைப் போராட்டங்கள் நேற்றுடன் முடிவுக்கு வந்தன

கொழும்பு, ஜூன் 24

கல்முனை வடக்கு உப பிரதேச செயலகத்தை முழுமையான நிர்வாக அதிகாரமுள்ள பிரதேச செயலகமாகத் தரமுயர்த்த வேண்டும் என வலியுறுத்திக் கடந்த ஒரு வார காலமாக முன்னெடுக்கப்பட்டு வந்த பட்டினிப் போராட்டமும், அதற்கு எதிராக முன்னெடுக்கப்பட்டப் பட்டினிப்.போராட்டமும் நேற்று ஞாயிற்றுக்கிழமை நண்பகலுடன் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டன.

கல்முனைப் பிரதேசசபையை தர 19

## உணவு சுவாசத்தை தடுத்ததால் மூன்றரை வயது குழந்தை சாவு!

யாழ்ப்பாணம், ஜூன் 24

வலிப்பு ஏற்பட்ட மூன்றரை வயதுப் பெண் குழந்தை உணவுத் துணிக்கை சுவாசக் குழாய்க்குள் சென்று சுவாசம் தடைப்பட்டதால் நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சி, கோணாவில் யூனியன் குளத்தைச் சேர்ந்த பா.சஸ்மிதா என்ற குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடந்த 20ஆம் திகதி பிற்பகல் 4 மணிக்கு குழந்தைக்கு வலிப்பு ஏற்பட்டுள்ளது. அக்கராயன் மருத்துவமனையில் குழுந்தை சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

மறுநாளும் பிற்பகல் 4 மணிக்கு குழந்தைக்கு வலிப்பு ஏற்பட்டுள்ளது. அது சரிப்படுத்தப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக அன்றிரவு 8.30 மணிக்கு 19



## தாக்குதல் புகட்டிய பாடங்களை விளங்காது செயற்படுகின்றனர்

### சாடுகின்றார் ஞானசார தேரர்

கொழும்பு, ஜூன் 24

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்களை மேற்கொண்ட அடிப்படைவாதிகள் புகட்டிச் சென்ற பாடத்தைப் பொறுப்பு கூற வேண்டியவர்களும், அதிகாரத்தில் உள்ளவர்களும் இன்னமும் விளங்கிக் கொள்ளவில்லை. 19

## கிரிந்த கடலில் மூழ்கி தந்தை, மகள்கள் சாவு

### தாய் ஆபத்தான நிலையில் நேற்றுக் காலை சோகம்

கொழும்பு, ஜூன் 24

கிரிந்த பொலிஸ் பிரிவுக்குட்பட்ட திஸ்ஸமாராம கிரிந்த கடலில் நீராடச் சென்ற ஒரே குடும்பத்தை சேர்ந்த தந்தை மற்றும் இரண்டு பிள்ளைகள் உயிரிழந்துள்ளனர் என்று கிரிந்த பொலிஸார் தெரிவித்தனர். தாயார் ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை 7 மணியளவில் 19



## அரசதலைவர் வேட்பாளரால் ஐ.தே.கவில் கருத்து மோதல்

கொழும்பு, ஜூன் 24

அரச தலைவர் வேட்பாளர் விவகாரத்தால் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன என்று தெரியவருகின்றது.

இந்த முரண்பாட்டால் அரச தலைவர் வேட்பாளர் யார் என்பதைக் கட்சியின் மத்திய குழு அதிகாரபூர்வமான அறிவிக்கும்வரையில் அது தொடர்பான கற்பனை அடிப்படையில் கட்சி உறுப்பினர்கள் 19

## 14 ஆண்டுகள் சிறைவாசம்: தமிழ் அரசியல் கைதி சாவு

யாழ்ப்பாணம், ஜூன் 24

14 ஆண்டுகளாகச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியல் கைதி ஒருவர் நேற்றுமுன்தினம் சிறையில் உயிரிழந்துள்ளார். கொழும்பு, தெமட்டகொடவைச் சேர்ந்த மு.சகாதேவன் (வயது-61) என்பவரே உயிரிழந்துள்ளார். 19

யாழில் பிரமாண்டமான வளாகத்தில்

One year Top Up Degree

UGC Recognized International Degree

www.blccampus.edu.lk

- Bachelor of Information Technology
- Bachelor of Business Administration
- BSc in Psychology
- Bachelor of Business in Banking & Finance
- B.Ed (Teaching of English as Second Language-TESL)


✓ தனித்துவமான உயர்கல்விச் சேவை.
✓ தேர்ச்சியும் அனுபவமும் மிக்க சிரேஷ்ட விரிவுரையாளர் குழாம்

For more information: 0777 174 443

Entry requirement
HND / any Equal Qualification in the similar study

BLC CAMPUS

4th Lane, Brown Road, Jaffna.
T - 021 493 5555, 021 437 4443 E - info@blccampus.edu.lk



# சனிப்பெயர்ச்சி பலன்கள் 2020 - 2023





தை மாதம் 10ஆம் திகதி ஜனவரி 24, 2020ஆம் ஆண்டு சனி பகவான் தனுசு ராசியில் இருந்து மகரம் ராசிக்கு நகர்கிறார். இந்த சனிப்பெயர்ச்சியால் தனுசு மகரம் கும்பம் ராசிக்காரர்களுக்கு ஏழரை சனி காலமாகும். விருச்சிக ராசிக்காரர்கள் ஏழரை சனியில் இருந்து விடுபடுகிறீர்கள். சிம்மம் ராசிக்காரர்களுக்கு பூர்வ புண்ணிய ஸ்தானத்தில் இருந்து ருண ரோக சத்ரு ஸ்தானத்திற்கு சனி பகவான் நகர்கிறார். ஆறாம் இடத்தில் சனி பகவான் அமர்வது அற்புதமான இடம்.

சிம்மம் ராசிக்காரர்களுக்கு வேலை, கல்வி, திருமணம், குழந்தை பாக்கியம் எப்படி என்று பார்க்கலாம். சனியானவர் உங்களது ராசிக்கு 6 மற்றும் 7ஆம் வீட்டிற்கு அதிபதி அவர் 6ஆம் இடத்தில் ஆட்சி பெற்று சஞ்சாரம் செய்வது அற்புதமான அமைப்பு. 30 மாதங்கள் உங்களுக்கு ராஜயோகம்தான். கண்ணுக்கு எட்டிய தூரம் வரை எதிரிகளே இல்லை என்ற நிலை உருவாக இனி சஞ்சரிக்கவிருக்கும் 6ஆம் இடம் என்பது ருண ரோக சத்ரு ஸ்தானம். நோய்களை அடையாளம் கண்டு தீர்ப்பீர்கள். கடன் பிரச்சினைகள் முடிவுக்கு வரும். சனிபகவான் உங்கள் ராசிக்கு ருண ரோக சத்ரு ஸ்தானத்தில் அமர்ந்து கொண்டு உங்கள் ராசிக்கு முயற்சி ஸ்தானமான 3ஆம் இடம், ஆயுள் ஸ்தானமான 8ஆம் இடம், மற்றும் உங்கள் ராசிக்கு 12ஆம் இடமான விரைய ஸ்தானத்தையும் சனிபகவான் பார்வையிடுகிறார். இந்த சனிப்பெயர்ச்சியால் தொழில், கல்வி, வேலைவாய்ப்பு, வருமானம், குடும்ப வாழ்க்கை எப்படி இருக்கிறது என்று பார்க்கலாம்.

**நல்ல காலம் பிறக்கப்போகுது**

இதுவரை போராட்டமே வாழ்க்கை என்று வாழ்ந்து வந்தீர்கள். காரணம் அர்த்தாஷ்டம சனி ஆட்டி வைத்தது. ஐந்தாம் இட சனி அச்சத்தை அதிகரித்தது. இனி வெற்றிக்கனியை ருசிக்கப் போகிறீர்கள். சோதனைகளை தாங்கிக் கொண்டு வைரம் பாய்ந்த மனதுடையவராக மாறியிருக்கிறீர்கள். இனி தொட்டதெல்லாம் ஜெயமே. தடைபட்ட காரியங்கள் எளிதில் கைகூடும். நண்பர்களால் எதிர்பார்த்த அளவு அன்பும் ஆதரவும் கிடைக்கும்.

**மன மகிழ்ச்சி அதிகரிக்கும்**

இதுநாள்வரை வேலை இல்லாமல் இருந்தவர்களுக்கு வேலை கிடைக்கும். வேலையில் இருப்பவர்களுக்கு சம்பள உயர்வுடன் கூடிய புதிய வேலை அமையும். வேலைக்கு ஏற்ற சம்பளமும் கிடைக்கும். சிலருக்கு புதிய வேலை நல்ல சம்பளத்துடன் கிடைக்கும். வேலை விசயமாக வெளிநாடு செல்ல வாய்ப்பு கிடைக்கும். சிறு தொழில் உற்பத்தி சார்ந்த துறைகள் சற்று சுமாராக இருக்கும்.

**வருமானம் அதிகரிக்கும்**

இதுநாள்வரை வராமல் இருந்த பணமெல்லாம் தேடி வரும். சமுதாயத்தில் கவுரவம், புகழ் அந்தஸ்து அதிகரிக்கும். சொத்து சேர்க்கை அதிகரிக்கும். பெண்களுக்கு நகை, ஆடை ஆபரணச் சேர்க்கை அதிகரிக்கும். புதிய தொழில்கள் தொடங்க சந்தர்ப்பமும் சூழ்நிலையும் அமையும். கூட்டு தொழில் சாதகமாக இருந்து வரும். முன்னோர்கள் சொத்து மூலம் எதிர்பாராத தனவரவு பொருள் வரவு அமையும்.

**ஆராக்கியத்தில் அக்கறை**

உடன்பிறந்த சகோதரிகளால் எதிர்பாராத நன்மை ஏற்படும். குழந்தை பாக்யம் இல்லாதவர்களுக்கு புத்திர பாக்யம் ஏற்பட வாய்ப்பு அமையும். குடும்பத்தில் சுபகாரியங்கள், சுப நிகழ்வுகள் நடக்க வாய்ப்புகள் தானாக வந்து சேரும். அடிக்கடி சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள வாய்ப்பு ஏற்படும். குழந்தைகளின் அன்பும் ஆதரவும் அதிகரிக்கும். அவர்களால் எதிர்பாராத நன்மைகள் ஏற்படும். தாயாரால் எதிர்பாராத உதவிகள் கிட்டும். அதே சமயம் தாயாரின் உடல் நலத்தில் அதிக கவனம் தேவை.

**வம்பு வழக்குகள் முடிவுக்கு வரும்**

தாய் மாமன்களின் அன்பும் ஆதரவும் நிறைந்து காணப்படும். வழக்குகள் உங்களுக்கு சாதகமாக அமையும். வழக்குகளால் எதிர்பாராத நன்மைகள் ஏற்படும். இதுநாள் வரை இழுத்தடித்த வழக்குகளில் ஜெயிப்பீர்கள். கேட்ட இடத்தில் கடன் கிடைக்கும். கடன்கள் அதிகரிக்கும். எதிரிகள் பிரச்சினைகள் முடிவுக்கு வரும்.

**குழந்தை பாக்கியம் கைகூடி வரும்**

காதல் கணிந்து திருமணத்தில் முடியும். குடும்பத்தில் சுபகாரியங்கள், சுப நிகழ்வுகள் நடக்க வாய்ப்புகள் தானாக வந்து சேரும். உங்களது உழைப்பு மற்றவர்களுக்கு லாபகரமாக அமையும். அடிக்கடி சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள வாய்ப்பு ஏற்படும். குழந்தைகளின் அன்பும் ஆதரவும் அதிகரிக்கும். அவர்களால் எதிர்பாராத நன்மைகள் ஏற்படும். குழந்தை பாக்யம் இல்லாதவர்களுக்கு புத்ர பாக்யம் ஏற்பட வாய்ப்பு அமையும்.

**சமூகத்தில் மதிப்பு மரியாதை கூடும்**

பெண்களுக்கு வேலைசெய்யும் இடத்தில் புதிய வாய்ப்புகள் கிடைக்கும். சிலர் வெளிநாடு, வெளியூர் செல்ல வாய்ப்பு ஏற்படும். சமுதாயத்திலும் வீட்டிலும் வேலை செய்யும் இடத்திலும் மதிப்பும், மரியாதையும் கூடும். விருந்து, சுற்றுலா என உற்சாகமாக இருப்பீப்கள். பெண்களுக்கு புத்திரபாக்கியம் கிடைக்கும்.

**பணத்தை சேமித்து பழகுங்கள்**

சனிபகவான் 7ஆவது பார்வை விரைய தானத்தைப் பார்ப்பதால் தேவையற்ற பண விரையம், பொருள் நஷ்டம் ஏற்படும். சிலருக்கு வெளிநாடு யோகம் கைகூடி வரும். 3ஆவது பார்வையாக 8ஆம் வீட்டை பார்ப்பதால் எச்சரிக்கை தேவை. எதிர்பாராத பணம் வந்தாலும் அதனை கவனத்தோடு செலவு செய்யவும். சிலருக்கு எதிர்பாராத பிரச்சினைகளும், அவமாணங்களும் ஏற்படும். கணவன் மனைவியின் உறவில் சில உரசல்கள் வரும். பாதிப்புகள் குறைய சனிக்கிழமைகளில் சனிபகவானை வணங்கவும். பாதிப்புகள் குறைந்து நன்மைகள் நடைபெறும்.

# ராசிகளும் அதிர்ஷ்ட நிறங்களும்

**மேடம் :**

செவ்வாயின் ஆதிக்கம் கொண்ட மேட ராசிக்காரர்கள் தைரியம் மிக்கவர்கள். சூரியன் உச்சம் பெற்று அமர்ந்துள்ளார். இவர்களுக்கு குருதிச் சிவப்பு நிறம் அதிர்ஷ்டத்தைக் கொடுக்கும். சிவப்பு நிற ஆடை அணிந்து சென்றால் அதிர்ஷ்டம் உண்டாகும்.

**இடபம்**

இடப இராசிகாரர்களுக்கு சுக்கிரன் ராசி அதிபதி. சந்திரன் உச்சம் பெற்று அமர்ந்துள்ளார். வெண்மை, சில்வர் நிறம் உகந்தது. இந்த ராசிக்காரர்கள் இந்த நிறம் கொண்ட ஆடைகளை அணிந்து செல்வது அதிர்ஷ்டத்தை அளிக்கும். இந்த ஆண்டு வெளிர் நீல நிறமும் உங்களுக்கு அதிர்ஷ்டத்தை அள்ளித்தரும் நிறமாகும்.

**மிதுனம்**

மிதுனம் ராசியின் ஆட்சி கிரகம் புதன். புதனுக்கு உகந்த நிறம் பச்சை. இந்த ஆண்டு நீங்கள் பச்சை நிற ஆடை, பச்சை நிறம் கொண்ட பொருள்களைப் பயன்படுத்தினால் அதிர்ஷ்டம் கிடைக்கும். வெற்றி தேடி வரும்.

**கடகம்**

சந்திரனை ஆட்சி வீடாகக் கொண்ட கடக ராசிக்காரர்களே. உங்களுக்கு வெண்மை, நீலம், கடல் பச்சை நிறம் அதிர்ஷ்டத்தை அள்ளித்தரும். இந்த நிற ஆடைகளை அணிந்து சென்றால் வெற்றி நிச்சயம்.

**சிம்மம்**

சூரியனை ஆட்சி வீடாக கொண்ட சிம்ம ராசிக்காரர்களுக்கு பொன்நிறம் ஏற்றது. முக்கியமான நபர்களை சந்திக்க செல்லும் போது, முக்கியமான தேர்வு, நேர்முகத்தேர்வுக்கு செல்லும் போது பொன்நிற ஆடைகளை அணிந்து செல்லலாம்.

**கன்னி**

கன்னி ராசிக்காரர்களின் ஆட்சி, உச்ச கிரகமாக புதன் திகழ்கிறார். அவருக்குப் பிடித்தமானது பச்சை. புதக் கிழமை பச்சை ஆடை அணியலாம். பிற நாட்களில் இளம் ஊதா, இளம் மஞ்சள் அணியலாம்.

**துலாம்**

துலாம் ராசிக்காரர்களுக்கு சுக்கிரன் ஆட்சி கிரகம். வெள்ளிக்கிழமைகளில் கிரீம் நிற ஆடை அணியலாம். சனி உச்சம் பெற்ற வீடு என்பதால் பிற நாட்களில் நீல நிற ஆடை அணிவது அதிர்ஷ்டத்தை தரும்.

**விருச்சிகம்**

விருச்சிகம் செவ்வாய் பகவான் ஆட்சி வீடு. இந்த ராசிக்காரர்கள் செவ்வாய்கிழமை சிவப்பு நிற ஆடையும், பிற நாட்களில் ஊதா, பச்சை நிற ஆடையும் அணியலாம். அதிர்ஷ்டம் தேடி வரும்

**தனுசு**

தனுசு குருபகவானின் ஆட்சி வீடு. இந்த ராசிக்காரர்கள் மஞ்சள் நிற ஆடை அணிவது அதிர்ஷ்டத்தை அளிக்கும். முக்கியமாக வியாழக்கிழமைகளில் மஞ்சள் நிற ஆடை அணியலாம்.

**மகரம்**

மகரராசியில் சனி பகவன் ஆட்சி பெற்று அமர்ந்துள்ளார். செவ்வாய் பகவான் உச்சம் பெறுகிறார். சாம்பல் நிறம், கருநீலம், நீல நிறம் ஆடைகள் அணிவது அதிர்ஷ்டத்தை தரும்.

**கும்பம்**

கும்பம் ராசியில் சனி பகவான் ஆட்சி பெற்று அமர்ந்துள்ளார். இந்த ராசிக்காரர்கள் பொதுவாக ஊதா நிறம் அணியலாம். சனிக்கிழமைகளில் கருநீல ஆடை அணிவது அதிர்ஷ்டத்தை அளிக்கும்.

**மீனம்**

மீனம் ராசியில் குருபகவான் ஆட்சி பெற்று அமர்ந்துள்ளார். சுக்கிரன் உச்சம் பெறுகிறார். வெண்மை, இளம் மஞ்சள் அதிர்ஷ்டத்தை அளிக்கும் நிறமாகும். இந்த நிற ஆடைகளை அணிவது கூடுதல் சிறப்பு.

உ
சிவமயம்
அம்பாள் துணை



நயினாதீவு
ஆரம்பம் - 1973

## இந்து கலாசார அபிவிருத்திச் சபை

நாற்பத்து ஏழாவது வருட

## விசேட அறிவித்தல் – 2019

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் வருடாந்த மகோற்சவம் நிகழும் மங்கலகரமான விகாரி வருடம் **ஆனித்திங்கள் 17 ஆம் நாள் (02.07.2019) செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஆடித்திங்கள் 01 ஆம் நாள் (17.07.2019) புதன்கிழமை இரவு தெப்பத் திருவிழாவுடன் நிறைவுபெறுகின்றது.** அம்பிகையின் திருவருளால் கடந்த வருடங்களைப் போல இவ்வருடமும் எமது சபையினால் ஆலய முன்றலில் (ஆலய முன் வாசல் கோபுரத்தின் வடக்குப் பக்கமாக) தாக சாந்தி மண்டபம் அமைத்து கொடியேற்றம் தொடக்கம், தெப்பைத் திருவிழா வரைக்கும் பகல் இரவாக குடிநீர், குளிரேற்றப்பட்ட குளிர்பானம், கோப்பி, பால்கோப்பி ஆகியனவற்றை அடியார்களுக்கு வழங்குவதெனவும் தேர்த்திருவிழா அன்று (15.07.2019) திங்கட்கிழமை காலை அம்பாள் வீதியுலா வந்தடைந்த பின்னர் சிறப்பான முறையில் தயாரிக்கப்பட்ட அருட்பிரசாதம் பிளாஸ்ரிக் கிண்ணத்தில் பொதி செய்யப்பட்டு அடியார்களுக்கு வழங்குவதெனவும் தீர்மானம் செய்து அதற்கான சகல ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதைப் பணிவன்புடன் அறியத் தருகின்றோம்.

அம்பிகை அடியார்களே, தர்மசீலர்களே, வர்த்தகப் பெருமக்களே, அரச பணியாளர்களே, வங்கிச்சேவையாளர்களே, கல்விச்சேவையாளர்களே மற்றும் தபால், மின்சாரம், சுகாதார சேவையாளர்களே, பிரதேச செயலகம், மாநகரசபைப் பணியாளர்களே, சகலருக்கும் எமது பணிவன்பான வேண்டுகோள் : எமது சபையினால் மேற்கொள்ளப்படவுள்ள சகல பணிகளுக்கும் பெருநிதியும், பெருந்தொகை பொருள்களும் தேவைப்படுகின்றன. எனவே தாங்கள் தங்கள் நிறுவனங்கள், திணைக்களங்களில் வழமைபோல் நிதி சேகரித்து எமது பணிகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் வழங்குமாறு வேண்டி நிற்கின்றோம். **சபையின் அறப்பணிகளுக்கு நிதி வசூல் செய்வதற்காக வழங்கப்பட்டுள்ள நிதி வசூல் அட்டையில் வசூல் செய்த நிதியைத் தாங்கள் விரும்பின் யாழ் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள வர்த்தக வங்கியில் சபையின் பெயரில் உள்ள வங்கிக் கணக்கில் ( NAINATIVU HINDU CULTURAL DEVELOPMENT SOCIETY ) வைப்பில் இடலாம். (க/கு : இல. A/C NO: 80600 77643)** நிதி கிடைத்ததும் **அதற்கான பற்றுச்சீட்டு அனுப்பி வைக்கப்படும்.**

நயினாதீவு இந்து கலாசார அபிவிருத்தி சபைக்கென : சபையின் ஸ்தாபகர் அமரர் R.R.பூபாலசிங்கம் அவர்களின் பெயரால் அவரின் குடும்பத்தினரால் அன்பளிப்புச் செய்யப்பட்ட காணியில் : நயினை நாகபூஷணி அம்பாளைத் தரிசிக்க வரும் யாத்திரிகர்களின் நலன்கருதி கலாசார மண்டபம் ஒன்று அமைப்பதற்கான ஒழுங்குகளைச் சபை மேற்கொண்டுள்ளது என்பதனை மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கின்றோம். அந்தப் பாரிய பெரும்பணியை நிறைவு செய்வதற்கு தங்களின் பேராதரவினையும் பங்களிப்பையும் பெரிதும் வேண்டி நிற்கின்றோம்.

### விசேட உற்சவங்கள்

| | | |
|---|---|---|
| 02.07.2019 - கொடியேற்றத் திருவிழா | 14.07.2019 - சப்பரத் திருவிழா | 16.07.2019 - தீர்த்தத் திருவிழா |
| 11.07.2019 - மஞ்சத் திருவிழா | 15.07.2019 - தேர்த் திருவிழா | 17.07.2019 - தெப்பத் திருவிழா |

| | | |
|---|---|---|
| தலைவர்<br>**ஆர் . பி. ஸ்ரீதரசிங்**<br>( உரிமையாளர், பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ் - கொழும்பு ) | பொருளாளர்<br>**பொ.வீ.மகாலிங்கம்**<br>( முகாமையாளர் , பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம் ) | செயலாளர்<br>**வே.ச.வி.சபாநாதன் JP**<br>( ஓய்வுநிலை குடியேற்றத்திட்ட அதிகாரி ) |

*நங்கடம்பனைப் பெற்றவள் பங்கினன்*
*தென்கடம்பைத் திருக்கரக் கோயிலான்*
*தன்கடன் அடியேனையும் தாங்குதல்*
*என்கடன் பணிசெய்து கிடப்பதே.*

**நயினாதீவு**
**இந்து கலாசார அபிவிருத்திச் சபை.**



# மரண அறிவித்தல்

## வைத்தீஸ்வரன் குணாளன்

**(ஓய்வுபெற்ற கிராம அலுவலர்)**



**தோற்றம்**
**21.02.1947**

**மறைவு**
**23.06.2019**

வித்தகபுரம் தெல்லிப்பழையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு வைத்தீஸ்வரன் குணாளன் நேற்று (23.06.2019) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்தீஸ்வரன் - கனகம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான குமாரசாமி மங்கையற்கரசி தம்பதியரின் அன்பு மருமகனும் கமலேஸ்வரியின் அன்புக் கணவரும், டிலீப்அமுதனின் (இணைச்செய்தி ஆசிரியர்-உதயன்) அன்புத் தந்தையும், நிலஜாவின் (தாதிய உத்தியோகத்தர் - கொழும்பு தேசிய வைத்தியசாலை) அன்பு மாமனாரும், ரஞ்சன் (கனடா - ஓய்வுபெற்ற நில அளவையாளர்), தயாளன் (லண்டன்கிங்ஸ்ரன்மாநகரமுன்னாள்மேயர்), ஜெயபாலன் (லண்டன்) ஆகியோரின் அன்புச்சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (24.06.2019) திங்கட்கிழமை காலை 10 மணிக்கு அவரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கீரிமலை செம்மண் வாய்க்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**வன்னியசிங்கம் வீதி,**
**தெல்லிப்பழை மேற்கு,**
**தெல்லிப்பழை.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 749 9697**

# விடுகதைகள்

1) வெள்ளை ராஜாவுக்கு கறுப்பு உடை அது என்ன?
2) தொட்டுப் பார்க்கலாம் எட்டிப் பார்க்கமுடியாது அது என்ன?
3) பற்கள் இருக்கும் கடிக்கமாட்டான் அவன் யார்?
4) ஐந்து வீட்டிற்க்கு ஒரு முற்றம் அது என்ன?
5) தொப்பொன்று விழுந்தான் தொப்பி கழன்றான் அவன் யார்?
6) தட்டச் சீறும் அது என்ன?
7) காற்றைக் குடித்து காற்றில் பறப்பான், அவன் யார்?
8) பச்சை நிற அழகிக்கு உதட்டுச் சாயம் பூசாமலே சிவந்தவாய் அவள் யார்?
9) அம்மா படுத்திருக்க மகள் ஓடித்திரிவாள் அது என்ன?
10) ஒருவனுக்கு உணவளித்தால் ஊரையே கூட்டுவான். அவன் யார்?
11) ஊரெல்லாம் சுத்துவான், ஆனால் வீட்டிற்குள் வரமாட்டான் அவன் யார்?

1. உழுந்து 2. முதுகு
3. சீப்பு 4. உள்ளங்கையும் விரல்களும்
5. பனம்பழம் 6. தீக்குச்சி
7. பலூன் 8. கிளி
9. அம்மி குளவி 10. காகம்
11. செருப்பு

ஓம் விராட் விஸ்வ பிரம்மனே நமஹ

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

ஸ்ரீ காமாட்சி சன சமூக நிலையத்தின் 50 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் (23.06.2019) நடந்த கலைஞர் கௌரவிப்பு நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் **திரு. மாவை சோ. சேனாதிராஜா** அவர்களால் **வே. க. நவநீதன்** ஆகிய எனக்கு **"கலைச்சூரியன்"** விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது

நிகழ்வில் என்னை கௌரவித்த மாநகர சபை உறுப்பினரும் சமாதான நீதவானுமாகிய **இ. கணேசராசா** அவர்களுக்கும் சனசமூக நிலைய நிர்வாகத்தினருக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கின்றோம்.

**நவபவனம்**
**நாச்சிமார் கோவிலடி**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 18 . 11 . 1944
மறைவு 05 . 07 . 2018

### நாகலிங்கம் சிவபாதசுந்தரம்

திதி: சப்தமி


பாசமூட்டி வளர்த்தாய்
பண்புகள் பலதந்தாய்
அறிவுபல புகட்டினாயே
இன்றெமக்கு இவையெல்லாம்
உன் நினைவுகளோடு தொடர்கிறதே
அண்ணா!!!

இல.39, சப்பல் வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்
சகோதரி

## மரண அறிவித்தல்

### சிவப்பிரகாசம் தேவேந்திரராஜா



மந்துவில் மேற்கு, கொடிகாமத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவப்பிரகாசம் தேவேந்திரராஜா நேற்று ஞாயிற்றுக்கிழமை (23.06.2019) இறைபாதம் அடைந்தார்.

அன்னார் சிவப்பிரகாசம் செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும், கனகசுந்தரம் பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், கங்காதேவியின் அன்புக் கணவரும், இந்திரகுமார், சந்திரவதனா, சங்கீதா (லண்டன்) ,சுரேஷ்குமார் (கட்டார்) , ராஜஜீவன், கீர்த்திகா ஆகியோரின் அன்புத் தந்தையும் , ஹரிராம் (லண்டன்) , வித்தியா , ராஜீவ்காந்தன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ராகேஸ்(லண்டன்) , றவீஸ் (லண்டன்) , லக்சிகா , அர்பின் , கவின் , கரீஸ் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னார் இறுதிக் கிரியைகள் நாளை (25.06.2019) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக இலுவன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் , உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மந்துவில் மேற்கு,
கொடிகாமம்.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### இராசதுரை செல்வராசா
(பேபி)



பிறப்பு 10.03.1949 இறப்பு 22.06.2019

இணுவில் கிழக்கு இணுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசதுரை செல்வராசா கடந்த (22.06.2019) சனிக்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான இராசதுரை அன்னரத்தினம் தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற செல்லத்துரை மற்றும் இரத்தினம் தம்பதிகளின் அன்பு மருமகனும் மகாலக்ஷமியின் அன்புக் கணவரும் கோபிநாத் (ஜேர்மனி), சியாமளன் (சிங்கப்பூர்), சுரேசனா (டுபாய்) ஆகியோரின் அன்புத்தந்தையும் மாதுமை, பிரியகாஷன் (டுபாய்), ஆகியோரின் அன்பு மாமனாரும் விஜயரத்தினம், காலஞ்சென்ற அரியரத்தினம், மற்றும் யோகேஸ்வரன், ஜெயமலர், இந்திராதேவி, ஸ்ரீதரன், ஸ்ரீசண்முகராஜா ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்ற சத்தியதேவி மற்றும் கலாமதி, ரஞ்சனேஸ்வரி, கணேசு, சிவராசலிங்கம், ரதிகலா, ஜெகதீஸ்வரி, விநாயக மூர்த்தி, பாலசுப்பிரமணியம் காலஞ்சென்ற கணேசலிங்கம் மற்றும் கமலாம்பிகா, இந்துமதி, காந்திமதி, செந்தில்மதி, செந்தில் செல்வி ஆகியோரின் மைத்துனரும்சின்னராசா,பாலசுப்பிரமணியம்,கணேஸ்வரன், சிவகுருநாதன், ஸ்ரீதரன், அகிலாண்டேஸ்வரி, வசந்தினி ஆகியோரின் அன்புச் சகலனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.06.2019) செவ்வாய்க்கிழமை மு.ப 11.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இணுவில் பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தியேட்டர் லேன்
இணுவில் கிழக்கு, இணுவில்

தகவல்: குடும்பத்தினர்.
021 224 3017
077 860 8004
077 636 6531

### திருமதி செல்லம்மா முருகேசு



பிறப்பு 28.05.1942 இறப்பு 22.06.2019

அல்வாயைப் பிறப்பிடமாகவும் காங்கேசன் துறையை வசிப்பிடமாகவும் சண்டிலிப்பாயை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லம்மா முருகேசு நேற்று (23.06.2019) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னர் குஞ்சி தம்பதியினரின் அன்புமகளும் சின்னான் நாகம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் சின்னான் முருகேசுவின் அன்பு மனைவியும் மனோகரன் (மனோ போட்டோ உரிமையாளர்), மனோராஜன் (ஜேர்மனி), உதயராஜன் (ஜேர்மனி), திலகவதி, பத்மாவதி (ஜேர்மனி), வசந்தராஜன் (கனடா), கேதீஸ்வரன் (கனடா), ஆகியோரின் பாசமிகு தாயாரும் லட்சுமிசாந்தி, உஷா (ஜேர்மனி), சுகந்தி (ஜேர்மனி), சின்னராசா, காலஞ்சென்ற பிறேமதாஸ் (ஜேர்மனி) மற்றும் ஜான்சி (கனடா), வனஜா (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் வஜீபன், நித்தியா, விதுனன், நிவேனிகா, சஞ்சிகா, நிரோஜன், நிஜிர்ஷன், மிதுஷன், வினுஷன், வெண்ணிலா, வர்ஷனா, ஜெயதர்சி, யெஸ்ரின் (நோர்வே), ஜீவனா, சரண்யா, விபுஷன், தேனுஷன், பவித்திரன், றிதுசா, அனோஜன், வினேஜன், மயூரன், பவித்திரா, லிசானி, கேதரன், றிஷானி, நவீசன், றஷ்மிகா, வைஷ்ஷிகா, தஜினிகா, அகர்ஷ்விகா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் கந்தையா, நாகம்மா, சின்னத்துரை, அன்னம்மா, தங்கம்மா, தர்மலிங்கம் ஆகியோரின் அன்புச்சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சண்டிலிப்பாயில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று இன்று (24.06.2019) திங்கட்கிழமை பி.ப 2.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 132 3927

தகவல்: குடும்பத்தினர்.


## வேலையாள் தேவை

அனுபவம் வாய்ந்த மேசன், கூலி வேலையாள்கள் தேவை.
076 660 1600

## தேவை

யாழ்ப்பாணம் உசன் பகுதியில் உள்ள தென்னந்தோட்டத்திற்கு பராமரிப்பாளர் தேவை. வேலையில் மிகுந்த அர்ப்பணிப்பும் ஆர்வமும், O/L வரை படித்தோரும் விரும்பத்தக்கது.
தொடர்பு-077 762 6241

## கார் விற்பனைக்கு

16 - IXXX Toyota Corolla கார் விற்பனைக்கு உண்டு.1300 CC,Registered on 1988, A/C,DVD, Sd,Bluetooth,Back Comera, வெள்ளை நிறம், நல்ல நிலையில் உள்ளது.விலை- 650000/=,Negotiable,
இடம்: இல.107, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
077 676 7190

## நாஹரா மருத்துவ நிலையம்

- அதி தீவிரமான கை, கால் விறைப்பு, மரத்துப் போதல், மூட்டுக்கள் தேய்வு, பாரிசவாதம், முழங்கால் வாதம், அல்சர், தீராத புண்கள் குணப்படல்.
- ஹோமோன்ஸ், மாதவிடாய் தடைப்படல், குழந்தை இன்மைக்கு சிறப்பு சிகிச்சை.

வங்கி முன்லேன்
சாத்தாவத்தை வயிரவர் கோயிலடி (ஜெகபதி வீடு),
மானிப்பாய்.
077 321 2740


## முதலாம் ஆண்டு நினைவு
24.06.2019



அமரர்

### செ.அலெக்சிஸ் பெர்னாண்டோ

(இளைப்பாறிய அதிபர்)

மண்ணில் 18.07.1953
விண்ணில் 24.06.2018

"உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பினும் வாழ்வார்"
(யோவா. 11:25)

என்றும் நீங்காத நினைவுகளுடன்,
குடும்பத்தினர்.

# ருஷ்மோர் தேசிய நினைவகம்!

**YAMAHA** வழங்கும்

**சிறப்பு சலுகை**



முற்கொடுப்பனவாக வெறும்
ரூபா **39,500** மாத்திரமே
செலுத்தி **யமஹா ஸ்கூட்டர்**
ஒன்றினை இன்றே கொண்டு செல்லுங்கள்
(இச்சலுகை குறித்த கையிருப்புகளுக்கு மட்டுமே)

உங்கள் பழைய மோட்டார் சைக்கிள்களை கொடுத்து புதிய மோட்டார் சைக்கிள்களை பெற்றுக்கொள்ளலாம். (நிபந்தனைகளுக்கு உட்பட்டது)

**இன்றே நாடுங்கள்**

எமது காட்சியறை:- **Digital Electronics** 62/16, Stanley Road, Jaffna. 077 662 3824, 021 222 4040

அமெரிக்காவிலுள்ள 'தெண்டகோடா' என்ற இடத்தில் அமைந்திருக்கிறது ருஷ்மோர் தேசிய நினைவகம்.

இந்த கிரானைட் மலையில் தான் 150 ஆண்டு கால அமெரிக்க வரலாற்றைக் குறிக்கும் வகையில் நினைவகம் அமைக்கப்பட்டிருக்கிறது.


அமெரிக்காவின் முன்னாள் அதிபர்கள் ஜார்ஜ் வாஷிங்டன், தாமஸ் ஜெபர்சன், தியோடர் ரூஸ்வெல்ட் மற்றும் ஆப்ரஹாம் லிங்கனின் சிலைகள் செதுக்கப்பட்டி ருக்கின்றன.

ருஷ்மோர் மலை கிரானைட் கற்களால் ஆனது. இங்கு முழுச் சிலைகள் வடிவமைக்கப்பட்டிருக்கவில்லை. அதிபர்களின் தலை மட்டுமே செதுக்கப்பட்டிருக்கின்றன. சிலைகள் என்றால் சாதாராண சிலைகள் அல்ல. ஒவ்வொன்றும் ராட்சத வடிவம் கொண்டது.

சிலைகளின் உயரம் 60 அடி. சிலைகளின் மூக்கின் நீளம் 20 அடி. வாயின் அகலம் 18 அடி. காது 11 அடி நீளம் கொண்டது. 1,278 ஏக்கர் பரப்பளவில், இந்த ருஷ்மோர் தேசிய நினைவகம் அமைக்கப்பட்டிருக்கிறது.

சார்லஸ் இ.ருஷ்மோர் என்பவர் தேசிய நினைவகம் அமைக்க உதவினார்.

எனவே, அவரது பெயராலேயே, 'ருஷ்மோர் மலை' என்று அழைக்கப்படுகிறது. 1927ம் ஆண்டு சிலைவடிக்கும் வேலை தொடங்கப்பட்டது. 1941ம் ஆண்டுதான் முழுமை அடைந்தது. பதினான்கு ஆண்டு காலம் குட்ஸன் போர்க் கலம் தலைமையில், 400 தொழிலாளர்களின் உழைப்பில், 'ருஷ்மோர் நினைவகம்' உருவாக்கப்பட்டி ருக்கிறது.



## மரண அறிவித்தல்

### குமாரவேலு சிவபாதம் (தவில் வித்துவான்)



பிறப்பு 06.04.1947
இறப்பு 23.06.2019

கைதடியைப் பிறப்பிடமாகவும், உதய சூரியன் வீதி, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட குமாரவேலு சிவபாதம் நேற்று (23.06.2019) ஞாயிற்றுக்கிழமை காலை அவரது இல்லத்தில் காலமானார்.

அன்னார் ருக்மணியின் அன்புக் கணவரும், கலியமூர்த்தி, வசந்தா, ராமதாஸ், றஞ்சிதா, சசிகுமார், சசிகா, சாந்தகுமார் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.06.2019) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 2 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**உதயசூரியன் வீதி,**
**கச்சாய் வீதி,சாவகச்சேரி.**

(IN/10511)(11,17)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**077 018 0425**

### திருமதி முத்தம்மா குமரேசு



காரைநகரைப் பிறப்பிடமாகவும் சின்னப்பா வீதி, நவாலி கிழக்கு மானிப்பாயை வதிவிடமாகவும் கொண்ட திருமதி முத்தம்மா குமரேசு நேற்று (23.06.2019) ஞாயிற்றுக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற முருகர் குமரேசின் அன்பு மனைவியும் ஆனந்தராசா, சிவலிங்கம், இராஜேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற யோகேஸ்வரி மற்றும் கவிதா, செல்வரஜனி (ரேணுகா), மோகன்ராஜ், ஆகியோரின் அன்பு மாமியாரும் நிலானி, வசந்தா, நித்தியானந்தன், நித்தியகுமார், நித்தியறூபன் (பிரான்ஸ்), நிரோஜன் (ஆஸ்திரேலியா), நிலாஜினி, நிக்ஷன், நிலக்ஷன், கஜானி, மிதிலன், ஹரிகரன் (யாழ். பல்கலைக்கழகம்), சுசந்திகா, பானுஜா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் தனு, தர்ஷினி, தரணி, றினா, றொசேல், யஷிகா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.06.2019) திங்கட் கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக் காக நவாலி கொத்துக்கட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

## கண்ணீர் அஞ்சலி



உதயன் பத்திரிகை நிறுவனத்தில்
இணைச் செய்தி ஆசிரியராகக் கடமையாற்றும்
**கு.டிலீப் அமுதனின்** அன்புத்தந்தை

### வைத்தீஸ்வரன் குணாளன்

**(கைதடி முன்னாள் கிராம அலுவலர்)**

நேற்று (23.06.2018) இறைபதம் அடைந்த
செய்தி கேட்டு ஆழ்ந்த துயர் அடைகின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு
ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன்
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

**உதயன் குழுமம்**

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு 20.04.1942 — இறப்பு 27.05.2019

போக்கறுப்பு முள்ளியானைப் பிறப்பிடமாகவும்
நாவற்காடு வரணியை புகுந்த
இடமாகவும். உடையார்கட்டு வடக்கை
வசிப்பிடமாகவும் கொண்ட

## இராசையா தெய்வானை (சின்னப்பிள்ளை)

கடந்த 27.05.2019 சிவபதமடைந்த எங்கள் குல விளக்கின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (24.06.2019) திங்கட்கிழமை காலை கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் வீட்டுக்கிருத்திய கிரியைகள் புதன்கிழமை 26.06.2019 முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**பிள்ளைகள், மருமக்கள், சகோதரர்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்,**
**(இ.தவராசா - சாரதி - வீதி அபிவிருத்தித் திணைக்களம் - வவுனியா)**

இல.9,குகன் நகர்,
7 ஆம் ஒழுங்கை, நெளுக்குளம், வவுனியா.
077 388 3643, 077 878 0051, 077 967 5996

# மரண அறிவித்தல்

## திருமதி சுலோசனாராணி யோகேஸ்வரன்



தோற்றம் 26.03.1949 — மறைவு 23.06.2019

3 ஆம் கட்டை, கல்வியங்காட்டை பிறப்பிடமாகவும் கொழும்பு, நாரகென்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுலோசனாராணி யோகேஸ்வரன் நேற்று (23.06.2019) ஞாயிற்றுக்கிழமை இந்தியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சோதிநாதன் - மகேஸ்வரி தம்பதியரின் புதல்வியும், காலஞ்சென்ற கைலாசபிள்ளை தம்பதியரின் மருமகளும், யோகேஸ்வரனின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற மஹாதிலக், ஹிமாலன் (நோர்வே) ஆகியோரின் அன்புத்தாயும், சத்தியாவின் (நோர்வே) பாசமிகு மாமியும், காலஞ்சென்ற ஜெயராணி, காலஞ்சென்ற யோகேஸ்வரன், உமாராணி (கனடா), ராஜராணி, வரதீஸ்வரன் (ஜேர்மனி), ரதிராணி (யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (23.06.2019) ஞாயிற்றுக்கிழமை இந்தியாவில் நடைபெற்று பூதவுடல் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

3 ஆம் கட்டை,
கல்வியங்காடு.

**தகவல் : குடும்பத்தினர்.**

**076 635 7255, 077 892 1138**

# மரண அறிவித்தல்

## சந்திரசேகரம் கணபதிப்பிள்ளை (மனேச்சர்)

(ஓய்வுநிலை விற்பனையாளர் - சங்கானை பலநோக்குக்கூட்டுறவுச்சங்கம்)



பிறப்பு 27.07.1948 — இறப்பு 23.06.2019

சுழிபுரம் மேற்கு, சுழிபுரத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சந்திரசேகரம் கணபதிப்பிள்ளை நேற்று (23.06.2019) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி சந்திரசேகரம் - செல்லம் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி வித்துவசிங்கம் - கமலாம்பிகை (நீர்வேலி) தம்பதியினரின் அன்பு மருமகனும் காலஞ்சென்றவர்களான திருமதி சிவபாக்கியம் - நடராசா, ச. வரதராசா ஆகியோரின் அருமைச் சகோதரரும் மாலதி (கிளி) யின் ஆருயிர்க் கணவரும் ரமணியின் (UK) அருமைத்தந்தையும் பண்டாரிராமின் (காந்தன் - UK) பாசமிகு மாமனாரும் அரவிந்தன் - ராதிகா, சிவரூபினி - மகாமாயன் (கனடா), அஜந்தன் - கம்சி (கனடா) ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும் தவமலர் - சிவராமன் (கனடா), வசந்தமலர் - ஜெயராஜசிங்கம் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனும் கலாமதி - சோமசுந்தரம், வி. சோமசேகரம் (திருகோணமலை), ரூபவதி - சிவசண்முகமூர்த்தி (UK), பத்மினி - செல்வரட்ணம் (சுவீடன்), வி. சாந்தினி (UK), சரஸ்வதி - விக்னேஸ்வரன் (நீர்வேலி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ப. விதுசன், ப.வினோத் ( UK), அ.தமீரா, அ.ஜன்சிகன், ம.பரிவி, ம.வழுதி, ம.ஏந்தி (கனடா), அ.ஆரிஷா, அ.ஆதிரா (கனடா) ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.06.2019) செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று மு.ப 9.30மணியளவில்பூதவுடல்தகனக்கிரியைக்காகதிருவடிநிலைஇந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**0777917790**

**தகவல்: குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்

## செல்லையா சிவலிங்கம்

### (செல்லையா சிவலிங்கம் நகை மாளிகை - உரிமையாளர்)



மண்கும்பான் மேற்கு 5 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் யாழ். அத்தியடியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா சிவலிங்கம் கடந்த (21.06.2019) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான ஐயம்பிள்ளை - இரத்தினம் தம்பதிகளின் பாசமிகு மருமகனும் யோகேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான வீரசிங்கம் (செல்லையா அன் சன்ஸ் நகை மாளிகை), இந்திரசித்து (லலிதா ஜீவல்லறி முன்னாள் உரிமையாளர்) மற்றும் தங்கமலர், சிவபாதலிங்கம் (செல்லையா சிவபாதலிங்கம் நகை மாளிகை), மல்லிகாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும் பரிமளா (பிரான்ஸ்), சியாமளா (நோர்வே), கோமளேஸ் (சுவிஸ்), நிரஞ்சலா (லண்டன்), சிவரஞ்சினி, அஜந்தா (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற நாகம்மா, மற்றும் மகாலட்சுமி, காலஞ்சென்ற நடராசா (மைதிலி நகைமாட ஸ்தாபகர்) மற்றும் மகுடராணி, காலஞ்சென்ற பூலோகநாதன் (குமரன் ஸ்ரோர்ஸ் நாரம்மல), மற்றும் சுந்தரலிங்கம், இராஜலிங்கம் (முருகன் ஸ்ரோர்ஸ் நாரம்மல) காலஞ்சென்ற அன்னலிங்கம், மற்றும் ஞானேஸ்வரன்(கனடா) ஆகியோரின் மைத்துனரும் சிவனேசன் (பிரான்ஸ்), சுரேஸ்குமார் (நோர்வே), பாலசிங்கம் (சுவிஸ்), சிவதாஸ் (லண்டன்), ஆனந்தன் (மைதிலி நகை மாடம் pvt ltd, யாழ் மைதிலி ஜீவல்லறி - கொழும்பு), ஜெகானந்தன் (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் திவ்யபிரசாத், கஜலக் ஷன், ரனுஜன் (பிரான்ஸ்), சுவாதி, சுவேகா, சுஜிதன் (நோர்வே), ரொஷானா, சுஜீனா (சுவிஸ்), பிரனீஸ், பிரிதிகா, பவிகா (லண்டன்), சனுஜா(யாழ் இந்து மகளீர் கல்லூரி), வினுஷன்(யாழ் இந்துக்கல்லூரி), கரீஷ் (புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்), கவினாஷ், கிசோனா, அக் ஷிதா (கனடா) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.06.2019) செவ்வாய்க்கிழமை காலை 7.00 மணிக்கு நடைபெற்று முற்பகல் 10.00 மணியளவில் தகனக்கிரியைக்காக வேலணை சாட்டி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல.55, அம்பலவாணர் வீதி,**
**அத்தியடி, யாழ்ப்பாணம்.**

**தகவல்: குடும்பத்தினர்.**

**ந.ஆனந்தன் (மருமகன்)**
**மைதிலி நகை மாடம் pvt ltd.**
**யாழ் மைதிலி ஜீவல்லறி - கொழும்பு**

(IN 10513)
(14,17)

**077 376 8952**

# கரகாட்டக்காரன்-2 எடுக்கக்கூடாது

## ராமராஜன்



கங்கை அமரன் இயக்கத்தில் ராமராஜன், கனகா, கவுண்டமணி, செந்தில் நடிப்பில் வெளியான படம் 'கரகாட்டக்காரன்'. மிகப்பெரிய வெற்றி பெற்ற இந்தப் படத்தின் 30ஆவது ஆண்டு விழா அண்மையில் கொண்டாடப்பட்டது. 'கரகாட்டக்காரன்' படத்தின் இரண்டாம் பாகத்தை உருவாக்கும் பணிகளில் ஈடுபட்டு இருப்பதாக கங்கை அமரன் தெரிவித்தார்.

இது குறித்து ராமராஜன் அளித்துள்ள ஒரு பேட்டியில் கூறியிருப்பதாவது: "கரகாட்டக்காரன் - 2 பற்றி என்னிடமும் கங்கை அமரன் பேசினார். ஆனால், எனக்கு அதில் உடன்பாடு இல்லை. சில விடயங்களைத் திரும்பத் தொடங்கக் கூடாது. திரும்பத் தொட்டா சரியாக வராது. இப்போது இவர்கள் சொல்கிற 'கரகாட்டக்காரன் 2' படம் கரகாட்டக்காரனைவிட 500 நாள் அதிகமா ஓடப்போற படம்னாலும் நான் பண்ணமாட்டேன். பொதுவாக, இந்த இரண்டாம் பாகம் தயாரிப்பதில் எனக்கு உடன்பாடு கிடையாது. முருகனுக்கு அறுபடை வீடு இருக்கிறது என்றால், பழநி, திருச்செந்தூர் என்று வேறு வேறு பெயர்களில்தான் இருக்கிறது. ஏன், 'பழநி 1', 'பழநி 2' என்று அது இல்லை என்று யோசிக்க வேண்டும். அதுமாதிரி தான் இதுவும். சில விடயங்களை 'இரண்டாம் பாகம்' எடுக்கக் கூடாது" இவ்வாறு அவர் கூறியுள்ளார்.






## தந்தையின் பாசம்



## கூண்டுக்கிளி



## யோகா




# பொன்மொழிகள்

ஒரு மனிதன் செய்யக்கூடிய செயல்கள் அனைத்திலும் மிகமிகச் சிறந்தது, தனக்குத்தானே முற்றிலும் நல்லவனாக இருப்பதுதான்.

**பிராய்டு.**

தேவைக்கு மிஞ்சிய பொருள் வைத்திருப்பவன் பிறர் பொருளைப் பறித்தவன்.

**புனித அகஸ்தினார்.**

அதிர்ஷ்டசாலிக்குச் சேவல் கூட முட்டையிடும்.

**கிரீஸ்.**

சிந்தனை இல்லாத படிப்பு, பயனில்லாத உழைப்பு, படிப்பில்லாத சிந்தனை இவை மூன்றும் ஆபத்தானவை.

**ஆண்டர்சன்.**

தேவையில்லாததை நீ வாங்கினால் தேவையானதை நீ விற்று விடுவாய்.

**கிளாரண்டன்.**

உண்மை ஊடுருவும் சூரிய ஒளி போன்றது. அதை யாராலும் மூடி மறைக்க முடியாது.

**மில்டன்.**

குழந்தையைத் தூக்கி வைத்துக் கொள்ள கை நோகிறது. அதை கீழே இறக்கினால் மனம் நோகிறது.

பொலிவியா.

விசிறியை அசைக்காமல் காற்று வராது. வியர்வை சிந்தாமல் உயர்வு வராது.

ஜப்பான்.

ஆசை புத்தியை மறைக்கும்போது அறிவு வேலை செய்யாமல் போய்விடுகிறது .


**கவியரசு கண்ணதாசன்.**

சோம்பேறிகள் முன் வைரத்தைக் கொட்டினாலும் கடைக்கு எடுத்துச் சென்று விற்க வேண்டுமே என்று அழுவார்கள்.

**அரேபியா.**

சண்டே தத்துவம்...

மட்டன் சாப்பிட்டு
மட்டமாக வாழ்வதை விட..



சிக்கன் சாப்பிட்டு
சிக்கனமாக வாழ்வோம்...

அது என்னவோ தெரியல நம்ம
வாழ்கைல விளையாடும்
போது மட்டும்..



கடவுள்லாம் டீ பிரேக் கூட
எடுக்கறதில்ல போல...



கோழியின் கிறுக்கல்!!@Kozhiyaar

இதயத்தை வெளியே வந்து துடிக்க வைத்து விட்டார்கள்!!
#INDvAFG



ச ப் பா ணி@manipmp

எதையும் கேட்காமல் அவங்க 'பாட்டுக்கு' தலையசைத்து செல்கிறார்கள் "ஹெட்செட் அணிந்தவர்கள்"!



ஊர்க்காவலன்™@oorkkavalaan

பேட்டரிய 'ஏத்தி' விடுறதே வேலையா போச்சி...
"சார்ஜருக்கு"



ஜோக்கர்... @ItsJokker

அடுத்தவனுக்கு அட்வைஸ் செய்யாதே" என்பதுதான் ஆகச்சிறந்த அட்வைஸ் ஆகும்..!!!

twitter

உலகின் அதிவேக டேட்டா
டிரான்ஸ்பர்...



உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# நல்ல தொடக்கமாக அமையட்டும்!

பருத்தித்துறையில் உள்ள பாடசாலை ஒன்றின் ஆசிரியர் ஒருவர் அதே பாடசாலையில் கல்வி பயிலும் மாணவி ஒருவருக்கு பாலியல் ரீதியாகத் துன்புறுத்தல் கொடுத்தார் என்று தெரிவிக்கப்பட்ட முறைப்பாட்டின்மீது நடவடிக்கை எடுப்பதற்குப் பாடசாலையின் அதிபர் அக்கறைகாட்டவில்லை என்று தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டை அடுத்து அவரைப் பணி இடைநிறுத்தம் செய்திருக்கிறார் வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன்.

கல்விப் புலத்தில் இதுபோன்ற குற்றச்சாட்டுக்கள் மீது அண்மைக் காலத்தில் எடுக்கப்பட்டிருக்கக்கூடிய துணிச்சலான, வரவேற்கத்தக்க நடவடிக்கை இது. வடக்குக் கல்விப் புலத்தில் அதிகரித்துவரும் இதுபோன்ற பாலியல் முறைகேட்டுக் குற்றச்சாட்டுக்களைக் குறைப்பதற்கான காத்திரமான தொடக்கமாக ஆளுநரின் இந்த நடவடிக்கை இருக்கவேண்டும்.

வடக்கு மாகாணத்தின் கல்வி மட்டம் கடந்த பல வருடங்களாகப் படு வீழ்ச்சியைக் கண்டு வருகின்றது என்கிற குற்றச்சாட்டு உண்டு. முன்னைய காலங்களுடன் ஒப்பிடும்போது வடக்கு மாகாணத்தின் கல்வி வளர்ச்சியைக் கண்டுள்ளதாகப் புள்ளிவிவரங்களின் அடிப்படையில் அதிகாரிகள் எடுத்துக் காட்டினாலும், 9 மாகாணங்களுக்கிடையில் ஒப்பிடும்போதும் வடக்கு மாகாணம் கடைசி நிலைகளில் இருப்பதும் கண்கூடு.

தொண்டர் ஆசிரியர்கள் என்கிற போர்வையில் கடந்த 20 வருடங்களுக்கும் மேலாக அரசியல்வாதிகள் அள்ளி வழங்கிவரும் ஆசிரியர் நியமனங்களின் விளைவு உள்ளிட்ட பல காரண்ங்கள் இந்த நிலைக்குக் காரணங்களாகச் சொல்லப்படுகின்றன. அவற்றில் ஒன்று வரம்பு மீறும் ஆசிரியர்களும் தான் என்பதை மறுக்க முடியாது.

எனினும் கலாசாரம், பெண் பிள்ளைகளின் எதிர்காலம் என்கிற பல்வேறு விடயங்களைக் கருத்தில்கொண்டு இத்தகைய பல குற்றச்செயல்கள் மூடிமறைக்கப்படுகின்றன அல்லது நடவடிக்கைகள் ஏதுமின்றிக் கடந்து செல்லப்படுகின்றன. வெகு அரிதாகக் குற்றச்சாட்டுளை முன்வைக்கப் பிள்ளைகளும் அவர்களின் பெற்றோரும் முன்வரும்பட்சத்திலும் பாடசாலையின் நன்மதிப்பு, ஏனைய மாணவர்களின் நலன் என்பவற்றைக் கருத்தில்கொண்டு குற்றச்சாட்டுக்குள்ளானவருக்கான அதிகபட்சத் தண்டனையாக இடமாற்றம் மட்டுமே இதுவரையில் வழங்கப்பட்டுவந்தது.

முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணைக்கு நியமிக்கப்படும் குழுக்களும் விடயத்தை ஒருவாறு பூசி மெழுகி, குற்றச்சாட்டுக்கு உள்ளாகும் ஆசிரியர்களின் அரச வேலைக்குப் பாதகம் ஏற்படாதவகையில் ஓர் அறிக்கையை முன்வைப்பதுடன் விவகாரத்தை முடித்து வைப்பதிலேயே நாட்டமாக உள்ளனர். கல்விப் புலத்தில் பாலியல் ரீதியான குற்றங்களுக்கான அதிகபட்ச தண்டனையாக இடமாற்றமே இருக்கும் நிலையில் அது குறையும் என்று எப்படி எதிர்பார்க்க முடியும்?

அதனாலேயே ஆளுநர் இப்போது எடுத்திருக்கக்கூடிய நடவடிக்கை குற்றம் புரிபவர்களுக்கு ஒருவித அச்சத்தையும் நடுக்கத்தையும் கொடுக்கக்கூடியதாக இருக்கும். இத்தகைய குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளாகுபவர்கள் தொடர்பில் பாடசாலை அதிபர்கள் நடந்துகொள்ளவேண்டிய முறை குறித்து முன்னர் ஒரு சமயம் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம் ஒரு அறிவுத்தலை வழங்கியிருந்தபோதும் குற்றச்சாட்டுக்களை முறையான விதத்தில் விசாரணைக்கு உட்படுத்தாமல் புறக்கணிக்கும் போக்கு தொடர்ந்திருப்பதையே பருத்தித்துறைச் சம்பவம் காட்டுகின்றது.

இந்த நிலையில் ஆளுநர் எடுத்திருக்கக்கூடிய நடவடிக்கை காத்திரமானது. குற்றம் செய்பவர்களுக்கு ஓர் எச்சரிக்கையாக விளங்கக்கூடியது. ஆனால், அத்துடன் நின்றுவிடாது குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் முழுமையான விசாரணை நடத்தி சந்தேகநபர்கள் உண்மையான குற்றவாளிகளாக இருந்தால் அவர்களின் அரசவேலை நிரந்தரமாகப் பறிக்கப்படுவதுடன் சட்ட நடவடிக்கைக்கும் உட்படுத்தப்படவேண்டும். அப்போதுதான் இத்தகைய குற்றங்கள் எதிர்காலத்திலாவது குறைவதற்கான வாய்ப்புக்கள் ஏற்படும்.



# அரச தலைவரினது கருத்து ஏற்றுக்கொள்ள முடியாதது!

இந்துமதி



எமது நாட்டில் சகல இனத்தவர்களும் மதத்தினரும் சுதந்திரமாக வாழுகின்றமைக்கு பௌத்த கோட்பாடுகளின் வழிகாட்டுதல்களே காரணமாகும். அது மட்டுமல்லாது பௌத்த கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட அரச கொள்கையையே நாட்டில் நடைமுறைப்படுத்த வேண்டும். இவ்வாறு கூறியிருக்கிறார் அரச தலைவரான மைத்திரிபால சிறிசேன. இதே வேளை முஸ்லிம் வர்த்தக நிலையங்களைப் புறக்கணிக்குமாறும் முஸ்லிம்களால் நடத்தப்படுகின்ற உணவகங்களில் உணவுகளைச் சிங்கள மக்கள் உண்ணாக் கூடாதெனவும் கூறியிருக்கிறார் அஸ்கிரிய பௌத்த பீடத்தின் மகாநாயக்க தேரர். பௌத்த மக்கள் அவரது கருத்தை ஏற்று நடப்பார்களாயின் முஸ்லிம்களின் வர்த்தக நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்படுமென்பதுடன் சிங்கள,முஸ்லிம் இனங்களுக்கிடையில் பிளவுகளும் ஏற்பட்டுவிடும்.

கௌதம புத்தர் அன்பு, அகிம்சை, கருணை, சகிப்புத் தன்மை ஆகியவற்றையே போதித்துச் சென்றுள்ளார். அவரது போதனைகள் காரணமாகவே உலகில் ஏராளமானவர்கள் பௌத்த மதத்தைத் தழுவிப் பௌத்தர்களாக வாழ்கின்றனர். இந்தியாவிலிருந்தே பௌத்த மதம் இலங்கையில் பரவியது.

சிங்களவர்களில் பெரும்பாலானவர்கள் பௌத்தர்களாகவே உள்ளனர். இதனால் பௌத்தர்கள் மக்கள் தொகையைப் பொறுத்தவரையில் முதலிடத்தில் உள்ளனர். இவர்களுக்கு அடுத்த நிலையில் இந்துக்கள், கிறிஸ்தவர்கள், இஸ்லாமியர்கள் என வேறு மதப் பிரிவினர் வாழ்கின்றனர். தமிழர்களைப் பொறுத்தவரையில் இந்து மதத்தைப் பின்பற்றுபவர்கள் அநேகமாகவுள்ளனர். ஏனையவர்கள் கிறிஸ்தவத்தைப் பின்பற்றுகின்றனர்.

இனவேறுபாடு பாராட்டுகின்றனர் சிங்கள பௌத்தர்கள்

முஸ்லிம்கள் இனத்தாலும் மதத்தாலும் ஒன்றுபட்டவர்களாகக் காணப்படுகின்றனர். இனம் மற்றும் மத ரீதியான வேறுபாடுகளைக் காண்பிக்கின்ற பழக்கம் சிங்கள, பௌத்த மக்களிடையே அதிகளவில் காணப்படுவதை அவதானிக்க முடிகின்றது. தமிழ் மக்கள் தமது பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்காமல் இன்னல்களை அனுபவித்துக் கொண்டிருப்பதற்கு பௌத்த மதவாதிகளை ஒரு முதன்மைக் காரணமாகக் குறிப்பிட முடியும். பண்டாரநாயக்க காலத்திலிருந்து மைத்திரி காலம் வரை இதுதான் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. பண்டாரநாயக்க தமிழர்களுக்குச் சுயாட்சியை வழங்குவதற்குத் தயாராக இருந்தபோது பௌத்த தேரர்கள் அடங்கிய இனவாதிகள் அதற்கு முட்டுக்கட்டை போட்டனர். இன்று புதிய அரசமைப்பின் உருவாக்கத்தையும் அவர்களே தடுத்து நிற்கின்றார்.

தமிழ் மக்கள் தமது பாரம்பரிய வழிபாட்டுத் தலங்களுக்குச் செல்ல முடியாத அவலநிலை ஏற்பட்டுள்ளது. அந்த இடங்களை பௌத்த தலங்களாக மற்றுகின்ற செயற்பாடுகளில் பௌத்த தேரர்கள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். தமக்கு ஆதரவாகப் பொதுமக்களையும் அவர்கள் பயன்படுத்துவதைக் காணமுடிகின்றது. இதனால் இனங்களுக்கிடையில் பகையுணர்வு தூண்டப்பட்டு இனக்கலவராக மறுமென்பதை அவர்கள் நினைத்துப் பார்க்கவில்லை. கலிங்க நாட்டுடன் போர்தொடுத்த மாமன்னன் அசோகன் போர்க்களத்தில் இடம்பெற்ற அவலங்களைக் கண்டு குமுறியழுதான். பௌத்த துறவி ஒருவரின் அறிவுரையை ஏற்று இந்து மதத்திலிருந்து விலகி பௌத்த மதத்தைத் தழுவினான். இவனது வாரிசுகளை மகிந்தனும், சங்கமித்திரையும் இலங்கையில் பௌத்த மதத்தைப் பரம்பியதாக வரலாறு கூறுகின்றது. ஆனால் இங்கு ஆயுதப் போர் இடம்பெற்றபோது பௌத்த துறவிகள் போர்முனைக்குச்சென்று படையினருக்கு ஆசி வழங்கினர். போரை ஊக்கப்படுத்தினர். இவர்களின் போதனைகளை எவ்வாறு ஏற்றுக்கொள்வது?

சிறுபான்மை மக்களை வெறுக்கின்றனர் தேரர்கள்.

அரசு சிறுபான்மையினருக்கு ஏதையாவது வழங்க முயற்சிக்கும் போது பௌத்த தேரர்களின் பக்கமிருந்தே முதலாவது எதிர்ப்புக் குரல் கிளம்புகின்றது. அரசு இதை ஏற்றுக்கொண்டு தனது முயற்சிகளைக் கைவிடுகின்றது. எந்த மதப் பிரிவினராக இருந்தாலும் தமது மதப் பெரியவர்களுக்கு மதிப்புக் கொடுத்து நடத்தல் அவசியமானது. அப்போதுதான் கட்டுப்பாடானதொரு வாழ்க்கையை அமைக்க முடியும். ஆனால் மதத் தலைவர்களே தவறான பாதையைக் காட்டும் போது அதில் பயணம் செய்வது புத்திசாலித்தனமான தல்ல.

> முஸ்லிம்கள் அனைவரும் பயங்கரவாதிகளுடன் தொடர்புடையவர்கள் என ஒருபோதுமே கூறி விட முடியாது. ஒரு சிறிய குழுவினர் புரிந்த அநீதிக்காக ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகத்தையும் தண்டிக்க நினைப்பது தவறானதொரு முன்னுதாரணமாகும். இதனால் இனங்களுக்கிடையில் குரோத உணர்வுகளே தலையெடுக்கும் என்பதை மறுத்துவிட முடியாது.

அண்மையில் முஸ்லிம் அமைச்சர்களும் மாகாண ஆளுநர்கள் இருவரும் பதவி விலகிய எமக்கு பௌத்த தேரர்களே காரணமாக இருந்துள்ளனர். முஸ்லிம்கள் அனைவரும் பயங்கரவாதிகளுடன் தொடர்புடையவர்கள் என ஒருபோதுமே கூறி விட முடியாது. ஒரு சிறிய குழுவினர் புரிந்த அநீதிக்காக ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகத்தையும் தண்டிக்க நினைப்பது தவறானதொரு முன்னுதாரணமாகும். இதனால் இனங்களுக்கிடையில் குரோத உணர்வுகளே தலையெடுக்கும் என்பதை மறுத்துவிட முடியாது. இதேவேளை ஆட்சியாளர்கள் கண்களை மூடிக் கொண்டு பௌத்த மகா சங்கத்தினரின் ஆலோசனைகள் அனைத்தையும் ஏற்றுக்கொள்ள வேண்டியதில்லை. சிங்கள பௌத்த மக்களின் வாக்குகளைக் கருத்தில்கொண்டு அவ்வாறு நடப்பதால் விரும்பத்தகாத விளைவுகளே ஏற்பட்டுவிடும். ஆட்சியாளர்களை நம்பியே மக்கள் தமது வாக்குகளை அவர்களுக்கு அளித்து ஆட்சிப் பீடத்தில் அமர்த்தியுள்ளனர். அந்த மக்களுக்குத் துரோகம் இழைப்பது ஒருபோதுமே நியாயமாகாது. ஆகவே சகல விடயங்களுக்கும் பௌத்த மகாசங்கத்தினரின் ஆலோசனைகளை ஏற்று நடக்கவேண்டுமென்ற அரச தலைவரின் கருத்தை முழுமையாக ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

# ஐ.தே.கவுக்கு மைத்திரி ஆதரவளிக்க மாட்டார்

## சு.க. பொதுச் செயலர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 24

அரச தலைவர் தேர்தலில் போட்டியிடுவதா? இல்லையா? என்பதை அரச தலைவர் மைத்திரிபாலவே தீர்மானிக்க வேண்டும். அவ்வாறு அவர் போட்டியிடாவிட்டாலும் ஒருபோதும் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளருக்கு ஆதரவளிக்க மாட்டார்.

இவ்வாறு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

அரச தலைவர் தேர்தலில் மைத்திரிபால சிறிசேன சிறி லங்கா சுதந்திர கட்சி சார்பில் மீண்டும் வேட்பாளராகக் களமிறங்க வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும். இது தொடர்பில் எமது கோரிக்கையையும் நாம் அவரிடம் முன்வைத்துள்ளோம். எனினும் இது வரையில் அதற்கு அரச தலைவர் எந்த பதிலையும் வழங்கவில்லை. அவரது தீர்மானத்தை அறிவித்த பின்னரே அடுத்த கட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும்-என்றார். (எ)

# பதவி விலகுவதும் பின் ஏற்பதும் பணத்துக்காகவே நடக்கின்றது!

## சுனில் ஹந்துன்நெத்தி குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 24

மக்கள் நலனுக்காக அன்றி இப்போது நாட்டில் பணத்துக்காக அரசியலில் ஈடுபடும் அரசியல்வாதிகளே அதிகமாக இருக்கின்றனர். அமைச்சர்கள் தாமாக பதவி விலகியமையும், மீண்டும் பதவி ஏற்றுக்கொண்டமையும் பணத்துக்காகவே என்பது வெட்கப்பட வேண்டிய விடயமாகும்.

இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன் நெத்தி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

போதைப் பொருள் வியாபாரம் செய்பவர்களோ, ஊழல் மோசடிகளில் ஈடுபடுபவர்களோ மக்கள் விடுதலை முன்னணியில் இல்லை. அவை ஐக்கிய தேசிய கட்சிக்கும், சிறிலங்கா சுதந்திர கட்சிக்கும், பொதுமக்கள் முன்னணிக்கும் உரித்தானவை. இவ்வாறான குற்றச்சாட்டுக்களில் மாட்டுபவர்களும் கைது செய்யப்படுபவர்களும் இந்தக் கட்சியின் ஆதரவாளர்களே. ஆனால் அவர்கள் எமக்கு சேறு பூசுவதற்கு முயற்சிக்கின்றனர்.

இவ்வாறான தலைவர்களை தெரிவு செய்த மக்களும் இதற்கு பொறுப்பு கூற வேண்டும். நாட்டின் ஜனநாயகத்தை கட்சிகளுக்கு பகிர்ந்தளிப்பது தவறாகும். ஐ.தே.க, சு.க மற்றும் பொதுமக்கள் முன்னணி என்று வெவ்வேறு கட்சிகளாக இருந்தாலும் இவர்கள் அனைவரும் ஊழல் மோசடி செய்வதில் ஒரே அணியாகவே செயற்படுகின்றனர். இரகசிய ஒப்பந்தங்கள் மூலம் நாட்டை வெளிநாடுகளுக்கு விற்பதே இவர்கள் அனைவரினதும் நோக்கமாகும்.

இவை மாத்திரமின்றி, இனவாத அரசியலிலும் ஈடுபடுகின்றனர். சிலர் பணத்துக்காக அரசியல் செய்கின்றனர். அமைச்சு பதவிகள் கூட பணத்துக்காகவே பகிர்ந்தளிக்கப்படுகின்றன. தாமாக பதவி விலகுவதும், மீண்டும் பதவி ஏற்றுக் கொள்வதும் பணத்திற்காக என்பதே உண்மையாகும். இது வெட்கப்பட வேண்டிய விடயமாகும் - என்றார். (எ)



# கல்முனைப் போராட்டத்துக்கு ஆதரவாக யாழில் போராட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 24

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தைத் தரமுயர்த்தக் கோரி முன்னெடுக்கப்படும் போராட்டங்களுக்கு ஆதரவாக யாழ்ப்பாணத்தில் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று நேற்று நடத்தப்பட்டது. அகில இலங்கை சைவ மகா சபை மற்றும் பொது மக்கள் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்துக்கு முன்பாக இந்தக் கவனயீர்ப்பு போராட்டம் நேற்று பிற்பகல் நடைபெற்றது.

பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், கட்சிப் பிரதி நிதிகள் மற்றும் சமூக ஆர்வலர்கள் கலந்துகொண்டு கல்முனைப் பிரதேச செயலகத்தைத் தரமுயர்த்த வேண்டும் என்று தமது கோசங்களை எழுப்பி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

எமது பிரதேசத்தை நிர்வாகிப்பதற்கு வேறு நபரிடம் ஏன் அனுமதி பெற வேண்டும், வடக்கும் கிழக்கும் பிரிக்க முடியாத தமிழரின் தாயகம், தமிழர் உரிமைகளை ஒருமித்து வென்றெடுப்போம் போன்ற வாசகங்கள் கொண்ட பாதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.(எ-7)

# வவுனியாப் பெண் கொலை சந்தேகத்தில் ஒருவர் கைது!

வவுனியா, ஜூன் 24

செட்டிக்குளத்தில் பெண் ஒருவர் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்டவர் அந்தப் பெண்ணின் கணவர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு செட்டிக்குளம், துடரிக்குளம் பகுதியில் 4 பிள்ளைகளின் தாயாரான 40 வயதுப் பெண் ஒரு முகத்தில் வெடிபொருள் வெடிக்க வைக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டிருந்தார். இந்தச் சம்பவம் தொடர்பாகச் செட்டிக்குளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். உயிரிழந்த பெண்ணின் கணவர் சந்தேகத்தின்பேரில் தேடப்பட்டுவந்த நிலையில் அவர் தலைமறைவாகியிருந்தார்.

நேற்று அவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். செட்டிக்குளம் தொடருந்து நிலையத்துக்கு முன்பாக உள்ள ஆலயத்தின் பின்புறமாக உள்ள காட்டுப் பகுதியில் மறைந்திருந்த நிலையில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். அந்த நபரின் கையில் வெங்காய வெடி வெடித்துக் காயம் ஏற்பட்டுள்ளது என்றும், அவர் பொலிஸ் பாதுகாப்புடன் செட்டிக்குளம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். கைது செய்யப்பட்டுள்ளவர் 43 வயதுடையவர் என்றும், சம்பவம் தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் செட்டிக்குளம் பொலிஸார் தெரிவித்தனர். (எ)

# சட்டவிரோத மணல் ஏற்றியோர் கைது

கிளிநொச்சி, ஜூன் 24

அனுமதியின்றி மணல் ஏற்றிச் சென்ற 6 டிப்பர் வாகனங்களைப் பளை பொலிஸார் நேற்று மடக்கினர். மணல் கடத்தினர் என்ற குற்றச்சாட்டில் அவற்றின் சாரதிகள் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டனர் கிளிநொச்சிப் பொலிஸார் தெரிவித்தனர்.

கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட இயக்கச்சி, முகமாலை, தர்மக்கேணி, எழுதுமட்டுவாழ் பகுதிகளில் அவர்கள் மணல் ஏற்றிச் சென்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (து-35)

# ஐ.தே.க. அரசை கவிழ்க்க எதிரணி பெரும் முயற்சி

## அமைச்சர் ராஜித தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 24

ஐக்கிய தேசிய கட்சி தலைமையிலான ஆட்சியை இந்த ஆண்டுடன் கவிழ்த்து விடலாம் என எதிரணி தீவிரம் காட்டி வருகின்றது என்று அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார். நிகழ்வொன்றில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

அவர்களின் எதிர்பார்ப்புத் தோல்வியடைந்துள்ளது. ஆட்சியைக் கவிழ்ப்பதற்காக நாட்டில் இனவாதம் உட்படப் பல பிரச்சினைகளை அவர்கள் உருவாக்குகின்றனர்.

நாட்டில் காணப்படும் நெருக்கடி சூழ்நிலையில் எதிர்வரும் தேர்தலில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தை சேர்ந்தவர்கள் சிலர் வேட்பாளராகச் செயற்பட உள்ளனர். அரசுக்கு ஆதராவாக செயற்படும் பிரபல்யமான அமைச்சர்கள் யாராவது இருந்தால் அவர்களுக்கு எதிராக செயற்படுவதே இவர்களின் பிரதான நோக்கமாக காணப்படுகிறது. ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான இந்த ஆட்சியை ஆண்டுடன் கவிழ்க்க அவர்கள் எவ்வளவு சூழ்ச்சி செய்தாலும் பன்னாட்டு உதவிகள் எமக்கு கிடைத்த வண்ணமே உள்ளன. ஜப்பான், இந்தியா ஆகிய நாடுகள் பொருளாதார ரீதியில் பெரும் உதவிகளை வழங்கியுள்ளன. இந்த இரண்டு நாடுகளும் குறைந்த வட்டி வீதத்திலேயே எமக்கு கடன் உதவிகளை வழங்கியுள்ளன. கடந்த அரசை இந்த இந்த அரசு சிறந்த அரசு என்று பன்னாடுகள் கருதுகின்றன- என்றார். (எ)

# கால்பந்து தெரிவு புதனன்று


யாழ்ப்பாணம், ஜூன் 24

ஆசிய கால்பந்தாட்ட போட்டிக்கான 16 வயது பிரிவினருக்கான அணித் தெரிவு நாளைமறுதினம் புதன்கிழமை கொழும்பு சிற்றிலீக் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

2004ஆம் ஆண்டுக்குப் பின்னர் பிறந்த தகுதி உள்ள வீரர்கள் உரிய ஆவணங்களுடன் காலை 8 மணிக்கு முன்னர் மைதானத்துக்கு வர வேண்டும் என்று இலங்கை உதைபந்தாட்ட சம்மேளன இணைப்பாளர் ம.போர்ட்டிபனீஸ்ரர் அறிவித்துள்ளார். (எ-422-7)



வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சியின் தலைவரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஆறுமுகம் தொண்டமானுக்கும் இடையே நேற்றுச் சந்திப்பொன்று நடைபெற்றுள்ளது. வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரின் இல்லத்தில் இந்த சிநேகபூர்வச் சந்திப்பு நடைபெற்றது என்று தெரிவிக்கப்பட்டது. ஆறுமுகம் தொண்டமான் நேற்று நல்லூர் கந்தசுவாமி ஆலயத்துக்குச் சென்று வழிபாடுகளிலும் ஈடுபட்டார். (எ-ரி1)




தந்தை செல்வா நற்பணியகத்தால் புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான இலவச கருத்தரங்கு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் விருந்தினர்களாக வலிகாமம் மேற்குப் பிரதேச சபைத் தவிசாளர் த.நடனேந்திரன், கோட்டக் கல்லூரியின் அதிகாரி எஸ்.உதயகுமார், கல்லூரி அதிபர் அருட் தந்தை டி.எஸ்.சொலமன் மற்றும் பிரதேச சபை உறுப்பினர் ச.ஜயந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ம-7)

10 வருடங்களின் பின் சனசமூக நிலைய

## நிர்வாகிகள் தெரிவு

பருத்தித்துறை, ஜீன் 24
வடமராட்சி, பருத்தித்துறை வராத்துப்பளை வளர்மதி சனசமூக நிலையத்துக்குப் புதிய நிர்வாகிகள் தெரிவும் இடம்பெற்றது.
கடந்த பத்து வருடங்களாக இயங்காமல் காணப்பட்ட இந்த நிலையம், பகுதி சனசமூக அபிவிருத்தி அலுவலரின் முயற்சியால் அண்மையில் பொதுக் கூட்டம் நடத்தப்பட்டு நடப்பு வருட நிர்வாகிகள் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.
அதன்படி தலைவர், தி. விமலராஜா, உபதலைவர் வ.கீர்த்திகன், செயலர் பெ.பத்மநாதன், உதவிச் செயலர் அ.சுதாகரன், பொருளாளர் தி. நெவில் ஸன் ஆகியோருடன் நிர்வாக சபை உறுப்பினர்களாக ஞா.திருச்செல்வம், மா.கிரிசாந்தன், ப.பிரசாத், மதி, கு.ஞானலதா, திருமதி இ.இராஜேஸ்வரி ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.
நிலைய கணக்காய்வாளராக சே.ஜெஸ்ரின், காப்பாளர்களாக மூத்த பொறியியலாளர் த.ராஜகோபு, மூத்த பொருளியலாளர் மா.லோகசிங்கம், பிரிவு கிராம அலுவலர் த.தவமோகன் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். (த-9)

# 378 தொண்டராசிரியர்களுக்கு வரும் வியாழனன்று நியமனம்

## வடக்குக் கல்வி அமைச்சு வழங்குகிறது

யாழ்ப்பாணம், ஜூன் 24

**வடக்கு மாகாண பாடசாலைகளில் தொண்டர் அடிப்படையில் பணிபுரிந்த ஆசிரியர்களில் நேர்முகத் தேர்வின் மூலம் தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கான நியமனக்கடிதங்கள் எதிர்வரும் வியாழக்கிழமை வழங்கி வைக்கப்படவுள்ளன என்று வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலர் சத்தியசீலன் தெரிவித்தார்.**

வடக்கு மாகாண பாடசாலைகளில் தொண்டர் அடிப்படையில் கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களை இலங்கை ஆசிரியர் சேவையின் 3ஆம் வகுப்பின் 2ஆம் தரத்துக்கு நியமிப்பதற்காக இலக்கம் 19/0619/105/021 மற்றும் 2019.02.11ஆம் திகதியிட்ட அமைச்சரவைத் தீர்மானத்துக்கு அமைவாக, கடந்த மாதம் 8, 9, 10ஆம் திகதிகளில் நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் 378 விண்ணப்பதாரர்கள் ஆசிரியர் நியமனத்துக்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.
தெரிவு செய்யப்பட்டுள்ளவர்களுக்கான நியமனக் கடிதங்கள் எதிர்வரும் வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு திருகோணமலை இந்து கலாசார மண்டபத்தில் வைத்து வழங்கப்படவுள்ளன என்று கல்வி அமைச்சின் செயலர் அறிவித்துள்ளார்.
தெரிவு செய்யப்பட்ட விண்ணப்ப தாரர்கள் குறித்த திகதியில் பி.ப 12.30 மணிக்கு திருகோணமலை மாவட்டத்தின் இல. 294 உட் துறைமுக வீதி என்னும் முகவரியில் அமைந்துள்ள இந்து கலாசார மண்டபத்துக்கு தமது அடையாளத்தினை உறுதிப்படுத்தக்கூடிய ஆவணத்துடன் தேசிய அடையாள அட்டை அல்லது செல்லுபடியாகும் கடவுச் சீட்டுடன் அறிக்கையிடுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.
மேலும் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் குறித்த திகதியில் தவறாது திருகோணமலைக்கு சமூகமளிக்க வேண்டும்.
பெண்கள் இளவர்ண சாறியுடனும் ஆண்கள் கறுப்பு வர்ண நீள் காற்சட்டை மற்றும் வெள்ளைநிற சட்டையும் (சேட்) அணிவதுடன் கழுத்துப் பட்டி அணிதல் வேண்டும் என்றும் செயலர் குறிப்பிட்டுள்ளார். (ம-21)



## டெங்கு கட்டுப்பாடு தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கு

சாவகச்சேரி, ஜீன் 24
சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள முன்பள்ளி ஆசிரியர்களுக்கான டெங்கு கட்டுப்பாடு தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு நேற்றுமுன்தினம் சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தில் நடத்தப்பட்டது.
பணியக மேலதிக சுகாதார மருத்துவ அதிகாரி மருத்துவர் திருமதி எஸ். சுகன்யா தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கில் தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த முன்பள்ளிகளின் 50 ஆசிரியைகள் கலந்து கொண்டனர்.
டெங்கால் ஏற்படக்கூடிய பாதிப்புகள் மற்றும் டெங்கிலிருந்து சமூகத்தைப் பாதுகாப்பது எப்படி என்னும் தலைப்பில் பொதுச் சுகாதார பரிசோதகர் ம.பிரபாகரன் உரையாற்றினார். தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் அதிபர்களுக்கு டெங்கு தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு விரைவில் நடாத்தவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)

# குடிதண்ணீர் சுத்திகரிப்பு நிலைய உரிமையாளருக்கு தண்டம் விதிப்பு

வலி.தென்மேற்கு, ஜீன் 24
சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றாமல் இயங்கிய குடிதண்ணீர் சுத்திகரிப்புநிலைய உரிமையாளருக்கு 6ஆயிரம் ரூபா தண்டம் விதித்த நீதிவான் மருத்துவச் சான்றிதழ் கிடைக்கும் வரை மேற்படி நிலையத்தைத் தற்காலிகமாக மூடுமாறு உத்தரவிட்டுள்ளார்.
யாழ்ப்பாண மாநகர சுகாதாரப் பரிசோதகர் பு.ஆறுமுகதாசன் கச்சேரி நல்லூர் வீதியில் இயங்கி வரும் குடிதண்ணீர் சுத்திகரிப்பு நிலையத்தைச் சோதனைக்குட்படுத்தியபோது சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாமல் நிலையம் இயங்கி வருவது தெரியவந்தது.
இதையடுத்து மேற்படி நிலைய உரிமையாளருக்கு எதிராக சுகாதார பரிசோதகரால் இரு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் கடந்த புதன்கிழமை வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. கடந்த வியாழக்கிழமை வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது சுத்திகரிப்பு நிலைய உரிமையாளர் குற்றத்தை ஏற்றுக்கொண்டதையடுத்து மேலதிக நீதிவான் இவருக்கு 6ஆயிரம் ரூபா தண்டம் விதித்ததுடன் மருத்துவச் சான்றிதழ் கிடைக்கும்வரை நிலையத்தைத் தற்காலிகமாக மூடுமாறும் உத்தரவிட்டுள்ளார். (ஐ-115)

# வாகனங்களின் கூரை மீது உணவுகள் ஏற்றிவரத் தடை

யாழ்ப்பாணம், ஜீன் 24
வாகனங்களின் கூரை மீது உணவுப் பொருள்களை ஏற்றி வந்த வாகனங்கள், சாவகச்சேரி சுகாதாரப் பிரிவினரால் மறிக்கப்பட்டு சோதனை செய்யப்பட்டன. அவ்வாறு ஏற்றி வந்த வாகனங்களின் சாரதிகள் சிலர் எச்சரிக்கை செய்யப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டனர்.
கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு தேங்காய் எண்ணெய், மரக்கறி எண்ணைய், குடிதண்ணீர்ப் போத்தல்கள், மென்பானங்கள் போன்றவை வாகனங்களின் கூரைகள் மீது வைத்து ஏற்றி வரப்பட்டன. இதனை அவதானித்த சுகாதாரப் பகுதியினர் சாவகச்சேரிப் பகுதியில் வாகனங்களை மறித்து சோதனையிட்டனர். இவ்வாறு உணவுப் பொருள்களை ஏற்றி வர வேண்டாம் என்று சாரதிகளுக்கு எச்சரித்தனர்.
உணவுப் பொருள்களை வெயில் படக்கூடியவாறு வாகனத்தின் கூரைப் பகுதியில் வைத்து கொண்டு வரக்கூடாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. வாகனத்தின் கூரை மீது வைக்கப்பட்டு கொண்டு வரப்படும் உணவுப் பொருள்கள் வெயிலால் பாதிக்கப்படும் அபாயம் உள்ளதால், இனிவரும் காலங்களில் வாகனத்தின் கூரை மீது இவ்வாறான பொருள்கள் ஏற்றுவது தடை செய்யப்பட்டுள்ளது.
எனவே இவற்றை மீறி வாகனச் சாரதிகள் செயற்பட்டால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று சுகாதாரப் பகுதியினர் தெரிவித்தனர். அதேவேளை வர்த்தக நிலையங்களில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருக்கும் எண்ணெய் வகைகள், குடி தண்ணீர்ப் போத்தல்கள், மென்பானங்கள் போன்றவற்றை வெயில்படாத இடங்களில் வைத்து விற்பனை செய்யுமாறும் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.
வெய்யில் படக்கூடிய இடங்களில் இவ்வாறான பொருள்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தால், குறித்த வர்த்தகர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் சுகாதாரப் பகுதியினர் தெரிவித்தனர். (9)

# உவரி மாதர் சங்கத்தின் விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், ஜீன் 24
கைதடி தெற்கு உவரி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்த விளையாட்டு நிகழ்வு கடந்த 22ஆம் திகதி சனிக்கிழமை விநாயகர் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. நிகழ்வில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள், சான்றிதழ்கள், வெற்றிக் கேடயங்கள் என்பன விருந்தினர்களால் வழங்கி வைக்கப்பட்டன.
உவரி மாதர் கிராம அபிவிருத்தி சங்க தலைவி திருமதி குகனேஸ்வரி முத்துராமலிங்கம் தலைமையில் நிகழ்வு நடைபெற்றது.



நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி கிளை தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர் அ.கெங்காதரன், நாடாளுமன்ற உறுப்பினரின் இணைப்பாளர் செ.பிரதாப், மதிப்புறு விருந்தினர்களாக சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் இ.ஜானகி, கைதடி தென்கிழக்கு கிராம அலுவலர் சிவகுமாரசர்மா, கைதடி தெற்கு கிராம அலுவலர் விஜயசிறி நியூறிசா, ஜே.291 பொருளாதார அபிவிருத்தி அலுவலர் க.அனுராகன், ஜே292 பொருளாதார அபிவிருத்தி அலுவலர் காயத்திரி வரதராசா, சமுர்த்தி அலுவலர் சி.துசீபன், மாதர் கிராம அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், கிராம மக்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ம-159)

# விக்கிரமசிங்க பங்கேற்ற ஒரு நிகழ்வுக்கு ரூ. ஒரு கோடியே 5 லட்சத்து 85,000 செலவு

## 5 லட்சத்து 28 ஆயிரம் ரூபாவை சமுர்த்தி அதிகார சபை இலாபமாக்கியது



யாழ்ப்பாணம், ஜூன் 24


யாழ்ப்பாண மாவட்டத்தில் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க கடந்த 2ஆம் திகதி கலந்துகொண்டு சமுர்த்தி உரிமப் பத்திரம் வழங்கிய ஒரு நிகழ்வுக்கு மட்டும் ஒரு கோடியே 5 லட்சத்து 85 ஆயிரத்து 761 ரூபா 91 சதம் செலவு செய்யப்பட்டுள்ளது. இதற்கெனச் சேர்த்த பணத்தில் எஞ்சிய தொகையான 5 லட்சத்து 28 ஆயிரத்து 238 ரூபா 09 சதத்தை சமுர்த்தி அதிகார சபை இலாபமாகப் பெற்றுள்ளது.

சமுர்த்தி உரிமம் வழங்கும் நிகழ்வுக்காக மாவட்டந்தோறும் பல லட்சம் ரூபா செலவு செய்யப்படுகின்றன.

யாழ்ப்பாணம் மாவட்டத்துக்குப் புதிதாக இந்த ஆண்டு ஜூன் மாதம் முதல் 22 ஆயிரத்து 228 பேருக்கு சமுர்த்திக் கொடுப்பனவு அனுமதிக்கப்பட்டிருந்தது. அவர்களுக்குச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வுகள் பெரும் எடுப்பில் யாழ்ப்பாணத்தில் அண்மையில் நடைபெற்றிருந்தது. அதற்கான பணம் புதிதாகச் சமுர்த்தியில் இணைபவர்களிடமிருந்து அறவிடப்பட்டிருந்தது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் ரணில் கலந்துகொண்டிருந்த நிகழ்வுக்கான மொத்தச் செலவில் உணவு சிற்றுண்டிக்காக 7 லட்சத்து 87 ஆயிரம் ரூபாவும், குடிதண்ணீருக்கு ஒரு லட்சத்து 28 ஆயிரத்து 417 ரூபாவும், அலங்காரம், மாலை, பொன்னாடை உள்ளிட்டவற்றுக்கு 71 ஆயிரத்து 600 ரூபாவும், கொட்டகை, மேடை, கதிரை, அலங்காரத்துக்கு 49 லட்சத்து 83 ஆயிரத்து 373 ரூபா 20 சதம் செலவு செய்யப்பட்டுள்ளது.

ஒலி, ஒளியமைப்பு மற்றும் வெளியீடுகளுக்காக 13 லட்சத்து 91 ஆயிரத்து 930 ரூபாவும், ரீசேட் கொள்வனவுக்கு 28 லட்சத்து 37 ஆயிரத்து 193 ரூபாவும் பணம் செலவிடப்பட்டுள்ளது. இந்தவகையில் 22 ஆயிரத்து 228 புதிய சமுர்த்தி பயனாளிகளிடமிருந்தும் தலா 500 ரூபா வீதம் ஒரு கோடியே 11 லட்சத்து 14 ஆயிரம் ரூபா அறவிட்ட நிலையில் ஆடம்பர நிகழ்வுக்காக ஒரு கோடியே 5 லட்சத்து 85 ஆயிரத்து 761 ரூபா 91 சதம் மட்டும் செலவு ஏற்பட மேலதிகமாக கிடைத்த 5 லட்சத்து 28 ஆயிரத்து 238 ரூபா 09 சதம் அதிகார சபைக்கு இலாபமாகக் கிடைத்துள்ளது. யாழ்ப்பாண சமுர்த்தித் திணைக்களத்தினரிடம் தகவல் அறியும் சட்ட மூலத்தில் கேட்கப்பட்டதற்கு இந்த விவரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. (த-105)



## இலவச மருத்துவ முகாமில் 56 முதியவர்கள் பங்கேற்பு

யாழ்ப்பாணம், ஜூன். 24

சாவகச்சேரி மட்டுவில் சந்திரபுரம் பொது நோக்கு மண்டபத்தில் கடந்த 21ஆம் திகதி நடத்தப்பட்ட இலவச மருத்து முகாமில் 56 முதியவர்கள் பயனடைந்தனர். மட்டுவில் கிழக்கு, சந்திரபுரம், மட்டுவில் வடக்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த 60 வயதுக்கு மேற்பட்ட முதியவர்களுக்காக மருத்துவம் முகாம் நடத்தப்பட்டது.

மருத்துவ முகாமுக்கு வருகை தந்த முதியவர்களுக்கு குருதி அமுக்கம், நீரிழிவு, கண்புரை போன்ற பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு சிகிச்சை யளிக்கப்பட்டன.

அத்துடன் தொற்றா நோய்களுக்கு உள்ளான புதிய நோயாளர்களை மேலதிக சிகிச்சைகளை மருத்துவமனைகளில் பெற்றுக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டது.

மட்டுவில் சந்திரபுரம் முதியோர் சங்கத்தின் ஏற்பாட்டில் தென்மராட்சி பிரதேச செயலகம், தேசிய முதியோர் செயலகம், சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களம் ஆகியவை இணைந்து மருத்துவ முகாமை நடத்தின. (9)

## மானிப்பாய் பிரிவுக்கு பதிவாளர் நியமனம்

யாழ்ப்பாணம், ஜூன். 24

மானிப்பாய் பிரிவின் பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளராகவும் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவின் விவாகப் பதிவாளராகவும் திருமதி றஜினி சிவகுமார் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவரது செயற்பாட்டு அலுவலகம் இல. 15 மெமொறியல் வீதி மானிப்பாயில் அமைந்துள்ளது. (ம-50)

## வட மாகாணத்தில் 5,000 இளைஞர்களுக்கு என்.வி.கியூ சான்றிதழ் வழங்குவதற்கு திட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 24

வடக்கு மாகாணத்தில் உள்ள 5 ஆயிரம் இளைஞர்களுக்கு தொழில்த் தகைமை அடிப்படையில் என். வி. கியூ சான்றிதழை வழங்குவதற்கு சிறப்பு நடவடிக்கை ஒன்றை மாகாண ஆளுநர் சுரேன் ராகவன் ஆரம்பித்துள்ளார்.

வடக்கு மாகாணத்தை சேர்ந்த 5 ஆயிரம் இளைஞர்களுக்கு அவர்கள் கொண்டுள்ள திறன்களின் அடிப்படையில் இலவசமாக என். வி.கியூ. தகைமை மட்டம் ஐஐஐ அல்லது ஐ.வி. சான்றிதழ் வழங்குவதற்கான சிறப்புச் செயற்திட்டமொன்று ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் வழிப்படுத்தலில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்தச் செயற்திட்டத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தை சேர்ந்த மூவாயிரம் இளைஞர்கள், ஏனைய நான்கு மாவட்டங்களிலும் தலா 500 இளைஞர்கள் என ஒட்டுமொத்தமாக 5 ஆயிரம் இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

தற்போது தொழிலில் ஈடுபடும் அனுபவம்பெற்ற அனைவருக்கும் திறனை அங்கீகரிக்கும் சான்றிதழாக இது அமையும். வாகன திருத்துனர், தையல் வேலை செய்வோர், எழுது வினைஞர், முன்பள்ளி ஆசிரியர், சிகை அலங்கரிப்பாளர் உட்பட 14 தொழில் வகைகளுக்கு இந்தச் சான்றிதழ் வழங்கப்படவுள்ளது. இது தொடர்பான மேலதிக விவரங்களை மாவட்ட தேசிய பயிலுனர் மற்றும் தொழில் பயிற்சி அதிகார சபையின் காரியாலங்களில் பெற்றுக்கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டது. (ம-7)

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், பெப். 24

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் உயர்தர மாணவர்களின் ஒன்றுகூடலும் 'யூனியதீபம்' நூல் வெளியீடும் உயர்தர மாணவன் எஸ். சேகயன் தலைமையில் எதிர்வரும் 29ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் போதனா மருத்துவமனையின் வைத்தியகலாநிதி ஜி. இந்திரமோகன் முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (ம)

## சட்டவிரோதச் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த துரிதகதியிலான நடவடிக்கைகள் முன்னெடுப்பு

### துணுக்காய் பிரதேச சபை தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 24

துணுக்காய் பிரதேச சபை எல்லைக்குள் நடைபெறும் சட்ட விரோதச் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்கு சிறப்பான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன என்று துணுக்காய் பிரதேச சபையினர் தெரிவித்தனர்.

இதுகுறித்து மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

சபையின் எல்லைக்குட்பட்ட பகுதியில் பல்வேறு வகையான சட்டவிரோதச் செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. இங்கு காணப்படும் வளங்கள் சுரண்டப்படுகின்றன. போதைப் பொருள் விற்பனை, கால் நடைகளைக் கடத்துதல், கசிப்பு உற்பத்தி போன்ற செயற்பாடுகள் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றன.

இதனைக் கட்டுப்படுவதற்கு சிறப்பு நடவடிக்கை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. வளங்கள் சுரண்டப்படுவதை ஆராய்ந்து அது தொடர்பான அறிக்கை சமர்ப்பிப்பதற்கு உப தவிசாளர் தலைமையில் 5 பேர் கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளது.




சட்டவிரோதச் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவது தொடர்பாகப் பொலிஸார் பிரதேச செயலர், பொது அமைப்புகளுடன் கலந்துரையாடி நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ம-7)

# கூட்டமைப்பின் தயவில் வந்த விக்கி இப்போது கட்சியைப் புறம் பேசுகிறார்

## சிங்களப் பேரக்குழந்தைகளுடன் காலம் கழிக்குமாறு சிவமோகன் எம்.பி. காட்டமாகக் கூறுகிறார்



மன்னார், ஜூன் 24

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தயவில் அரசியல் முகவரியைத் தேடிக்கொண்ட முன்னால் முதலமைச்சர் விக்னேஸ்வரன், இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் புறம் பேசுவதிலேயே குறியாக இருக்கிறார் என்று கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிவமோகன் காட்டமாகத் தெரிவித்தார்.

"கல்முனை வடக்கு பிரதேச செயலக தரமுயர்த்தல் விடயத்தில் கூட்டமைப்பினர் அரசுக்கு மாமா வேலை செய்கின்றனர். அதனை அவர்கள் நிறுத்தவேண்டும்" என்றும் சி.வி.விக்னேஸ்வரன் நேற்று முன்தினம் கூறியிருந்தார்.

இந்த நிலையில் சிவமோகன் எம்.பி. மேலும் தெரிவித்ததாவது:

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தயவால் ஐந்து வருடங்கள் ஆட்சியில் இருந்தபொழுது தமிழ் மக்களின் எந்த ஒரு அடிப்படைப் பிரச்சினைகளையும் விக்னேஸ்வரன் கருத்தில் எடுத்திருக்கவில்லை.

**நீலிக் கண்ணீர்**

போர்க்காலத்தில் எமது இளைஞர்களைச் சிறையில் தள்ளிஅரசியல் கைதிகள் ஆக்கி விட்டு இன்று அரசியல் கைதிகளின் விடுதலைக்காக விக்னேஸ்வரன் நீலிக்கண்ணீர் வடிக்கிறார்.

விக்னேஸ்வரன் நீதியரசராக இருக்கும் போதுதான் பதவியைக் கூறலாம் அதிலிருந்து அவர் ஓய்வு பெற்றுவிட்டால் முன்னாள் நீதியரசர் ஆகிவிடுவார்கள். ஆனால் இவர் இன்றும் தான் ஒரு நீதியரசர் என்று கடிதங்களிலும் பத்திரிகைகளிலும் கையொப்பம் இடுகிறார்.

**சிங்களவர்களுக்கு சாமரம் வீசுபவர்**

சி.வி. விக்னேஸ்வரனின் வரலாறு சிங்களவர்களுக்கு சாமரம் வீசி வாழ்வது தான். அதனடிப்படையில்தான் தனது பிள்ளைகளைச் சிங்களவர்களுக்குத் திருமணம் செய்து கொடுத்துள்ளார். சிங்கள இனவாதியின் சம்பந்தியாக இருக்கும் இவரால் எப்படி தமிழ் மக்களுக்கு தீர்வு பெற்றுத்தர முடியும்?

**கூட்டமைப்பின் தவறு**

விக்னேஸ்வரனை அரசியலுக்குக் கொண்டு வந்தது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விட்ட தவறு. அந்தத் தவறுதான் இன்று அவரை இவ்வாறு பேசவைத்துள்ளது என்பது கவலைக்குரிய விடயம். அடுத்த தேர்தலில் விக்னேஸ்வரனின் முகத்திரையைக் கிழித்தெறியக் காத்திருக்கிறார்கள்.

**சிங்களப் பேரர்களுடன் காலம் கழியுங்கள்**

தமிழ் மக்கள் உங்கள் முகத்திரையைக் கிழித்த பிறகாவது உங்கள் சிங்கள தேசத்தில் உங்களது சிங்களப் பேரக்குழந்தைகளுடன் காலத்தைக் கழியுங்கள். பிறப்பால் மட்டும் தமிழரான நீங்கள் படித்தது பட்டம் பெற்று சேவை செய்து பிள்ளைகளைத் திருமணம் செய்து கொடுத்தது எல்லாம் சிங்கள தேசத்துப் பேரினவாதிகளுக்கு.

விசுவாசமாக உள்ள நீங்கள் எமது தமிழ் இனத்தின் விடுதலை பற்றிப் பேசுவதற்கு அருகதையற்றவர் - என்றார்.

(த-213)

# அந்தோனியார் ஆலயத்தை சீரமைக்கும் பணி ஆரம்பம்

மட்டக்களப்பு,ஜூன் 24

போரால் பாதிக்கப்பட்ட மட்டுவில் புனித அந்தோனியார் ஆலயத்தை சீரமைப்பதற்கான ஆரம்ப வேலைகள் நேற்று முன்னெடுக்கப்பட்டன.

ஆயித்தியமலை புனித சதா சகாய மாதா ஆலய அருட்தந்தை அன்ரனி டிலிமா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயர் பொன்னையா ஜோசப், மட்டக்களப்பு மாவட்டச் செயலர் மாணிக்கம் உதயகுமார், மண்முனை மேற்கு பிரதேச உதவி பிரதேச செயலர் சுபா சதாகரன், பிரதேச சபை உறுப்பினர் சண்முகம் குகநாதன், உன்னிச்சை இராணுவ முகாம் பொறுப்பதிகாரி, ஆயித்தியமலை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மற்றும் பொது மக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

மட்டக்களப்பு மாவட்டம் வவுணதீவு பிரதேச செயலர் பிரிவிலுள்ள உன்னிச்சை நெடியமடு கிராமத்தில் அமைந்துள்ள இவ்அந்தோனியார் ஆலயத்தில் 1990 ஆம் ஆண்டு முன் அங்குள்ள மக்கள் தமது வழிபாடுகளை மேற்கொண்டு வந்தனர்.

பின்னர் அக்காலப்பகுதியில் ஏற்பட்ட போர் காரணமாக ஆலயம் முற்றாக அழிவடைந்தது.

இந்தக் காலப்பகுதியில் இங்குள்ள மக்கள் தமது வீடுகளையும் உடமைகளையும் கைவிட்டு இடம்பெயர்ந்து சில வருடகாலம் வேறு பிரதேசங்களில் வாழ்ந்து வந்தனர். முற்றாக அழிவடைந்த இவ் ஆலயத்தை புதிதாக அமைக்கும் பொருட்டு அதற்கான ஆரம்ப நிகழ்வாக அடிக்கல் நட்டு வைக்கப்பட்டது.

(ஜ-46)





யாழ்ப்பாணம் மாதகல் நுணாசை வித்தியாலய நிறுவுநர் விக்கினராஜாவின் சிலை அமைப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. பாடசாலையின் பழைய மாணவரும் ஜேர்மனியில் வசிப்பவருமான பூ.அன்பழகனின் தாயார் அடிக்கல் நட்டு வைத்தார். (ஜ)

# பெருந்திருவிழா

ஏழாலை ,ஜூன் 24

ஏழாலை புங்கடி சொர்ணாம்பிகை உடனுறை அம்பலவாணேஸ்வரர் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் 29 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாள்கள் நடைபெறவுள்ளன. எதிர்வரும் 5 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வேட்டைத்திரு விழா மாலை 2.30 மணிக்கும், 6 ஆம் திகதி சனிக்கிழமை சப்பறத் திருவிழா இரவு 8 மணிக்கும், 7 ஆம் திகதி ஞாயிற்று க்கிழமை தேர்த் திருவிழா காலை 10.30 மணிக்கும, 8 ஆம் திகதி தீர்த்தத் திருவிழா முற்பகல் 10 மணிக்கும் நடைபெறவுள்ளன.

பத்து நாள்களும் அன்னதானம் வழங்கப்படும் என்று ஆலயத்தினர் அறிவித்துள்ளனர்.

(ஜ-39)

# மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டி

யாழ்ப்பாணம்,ஜூன் 24

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வருடாந்த ஆய்வு மாநாட்டை முன்னிட்டு, க.பொ.த. உயர்தர மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டி நடத்தப்படவுள்ளது.

வருடந்தோறும் இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் முன்னெடுக்கப்படும் ஆய்வரங்கு நிகழ்வு வரிசையில், இவ்வருடம் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம், "இருபதாம் நூற்றாண்டுக்கு முற்பட்ட ஈழத்து இந்துக் கோயில்கள் - தொல்பொருள்களும் இலக்கிய மரபுகளும்" எனுந் தொனிப்பொருளில் முன்னெடுக்கப்பட வுள்ளது.

ஈழத்தில் இந்து சமயத்தின் தொன்மையையும் அது பெற்றிருந்த செல்வாக்கினையும் உணர்த்துவனவாக அமைகின்ற இந்துக் கோயில்களின் வரலாற்றுப் பெருமையைச் சான்றுகளினூடாக மீட்டெடுப்பதை நோக்கமாகக் கொண்ட இவ் ஆய்வு மாநாடு தொடர்பான விழிப்புணர்வினை மாணவர்களிடையேயும் ஏற்படுத்தும் நோக்கில் இக் கட்டுரைப் போட்டி நடத்துவதற்குத் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

பாடசாலை மாணவர்கள் "தேவாரப்பாடல் பெற்ற ஈழத்துத் திருத்தலங்கள்" அல்லது "சமுதாய நிறுவனங்களாக ஆலய நிறுவனங்கள்" அல்லது "இலங்கையில் முருகவழிபாட்டின் தொன்மை" அல்லது "இலங்கையிற் சைவர்கள் வாழ்வின் ஆதாரமாக அமையும் கோயிற் பண்பாடு" என்னும் தலைப்பிற் கட்டுரை அமைக்கவேண்டும்.

பல்கலைக்கழக மாணவர்கள், பிரதேச ஆலயமொன்றின் வரலாற்றுச் சிறப்பையும் கீர்த்தியையும் அவ்வாலயம் தொடர்பான கல்வெட்டுச் சான்றுகளையும் தலப்பிரபந்தங்களையும் அடிப்படையாகக் கொண்ட விடயப் பரப்பிற் கட்டுரை அமைக்க வேண்டும். (தலைப்பு தெரிவு செய்யப்படும் ஆலயத்தின் பெயராக இருக்கவேண்டும்.)

பாடசாலை மாணவர்களுக்கான கட்டுரைகள் ஆயிரம் சொற்களுக்கு மேற்படாமலும் பல்கலைக்கழக மாணவர்களின் கட்டுரைகள் 2 ஆயிரம் சொற்களுக்கு மேற்படாமலும் கையெழுத்துப் பிரதியாகவும் அமைதல் வேண்டும்.

பாடசாலை மாணவர்கள் பாடசாலை அதிபரினாலும், பல்கலைக்கழக மாணவர்கள் துறைத்தலைவரினாலும் கட்டுரைகளை உறுதிப்படுத்தி, "பணிப்பாளர்,இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம், இல.248, 1/1, காலி வீதி, கொழும்பு 04" என்னும் முகவரிக்கு எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னதாகப் பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஜ)

# புதிய நிர்வாக பதவியேற்பு

ஏழாலை,ஜூன் 24

யாழ்ப்பாணம் சிற்றி லயன்ஸ் கழகத்தின் நடப்பு வருடத்துக்கான புதிய நிர்வாகப் பதவியேற்பு நிகழ்வு இன்று திங்கட்கிழமை மாலை 6 மணிக்கு ராஜா கிறீம் கவுஸ் சரஸ்வதி மண்டபத்தில் தலைவர் லயன் கு. லெனின்குமார் தலைமையில் நடைபெறவுள்ளது. நிகழ்வில் முதன்மை விருந்தினராக 2 ஆம் ஆளுநர் லயன் ராஜ்குமார் கலந்து கொள்ளவுள்ளார்.

நடப்பாண்டின் தலைமையை லயன் ப.ஜங்கரன் ஏற்கவுள்ளார்.

மேலும் பதவியேற்பு நிகழ்வில் பாடசாலை உபகரணங்கள், ஈருருளி, மூக்குக்கண்ணாடிகள் மற்றும் பயன்தரும் பழ மரக்கன்றுகள் என்பன வழங்கப்படவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஜ-39)

# நொச்சிமோட்டை, ஜோசப் முகாம் காணிகள் படையினருக்குத் தான்

## அவற்றை மக்களுக்கு விடுவிக்க முடியாது என்று அயலுறவு அமைச்சரிடம் இராணுவம் தெரிவித்தது

யாழ்ப்பாணம், ஜூன் 24

வவுனியா நொச்சிமோட்டை மற்றும் ஜோசப் இராணுவ முகாமுடன் இணைந்த பகுதி உள்ளிட்ட இரு காணிகளும் முழுமையாக படையினரின் பயன்பாட்டுக்காகக் கையகப்படுத்தப்படும். அந்த நிலங்களை உரியவர்களுக்கு வழங்க முடியாது என்று இராணுவத்தினர் உறுதிபடத் தெரிவித்தனர்.

ஐ.நா. செப்ரெம்பர் அமர்வுக்கு முன்னர் படையினர் வசமுள்ள நிலம் தொடர்பில் உறுதியான ஓர் அறிக்கை தயாரிக்க வேண்டும் என்பது பற்றியும், தற்போதைய நிலமையில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பிலும் வவுனியாவில் அயலுறவு அமைச்சர் திலக் மாரப்பன நேற்று முன் தினம் சந்திப்பொன்றை மேற்கொண்டார்.

வவுனியா மாவட்டச் செயலகத்தில் நடந்த இந்தக் கலந்துரையாடலில் மாவட்டச் செயலர், பிரதேச செயலர்கள், முப்படைகளின் மாவட்டத் தளபதிகள் மற்றும் மாகாணக் காணி ஆணையாளர், பொலிஸார் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர். அதில் இந்த விவரங்களை இராணுவத்தினர் தெரிவித்தனர்.

வவுனியா மாவட்டத்தின் ஓமந்தைக்கும் நொச்சிமோட்டைக்கும் இடைப்பட்ட பகுதியில் உள்ள படை முகாம் மற்றும் ஜோசப் இராணுவ முகாமுடன் இணைந்த பகுதி உள்ளிட்ட இரு காணிகளும் முழுமையாகப் படையினருக்காகக் கையகப்படுத்தப்படும். அந்த நிலங்களை உரியவர்களுக்கு வழங்க முடியாது. நொச்சிமோட்டை படை முகாம் அமைந்துள்ள 18 ஏக்கர் நிலப்பரப்பும் ஜோசப் இராணுவ முகாமுடன் இணைந்த பகுதி 16 ஏக்கர் நிலப்பரப்பு உள்ளிட்ட இரு காணிகளும் முழுமையாக 34 ஏக்கரும் படையினருக்காக சுவீகரிக்கப்படும் என்று இராணுவத்தினர் தெரிவித்தனர்.

இதேநேரம் தற்போது வவுனியா பிரதேச செயலர் பிரிவில் பண்ணைப் பகுதியில் 10 ஏக்கர் நிலம் சிவில் பாதுகாப்புப் பிரிவினரிடம் உள்ளது.

அவற்றை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படும். செட்டிகுளம் பகுதியில் 600 ஏக்கர் நிலப்பரப்பின் ஒரு பகுதியில் 60 குடும்பங்களுக்கு 123 ஏக்கர் நிலம் விவசாயம் செய்வதற்காக வழங்கப்பட்டு உரிமப்பத்திரமும் வழங்கிய ஆவணம் உள்ளது.

அவற்றை விடுவிக்க வனவளத் வளத் திணைக்களம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று அமைச்சர் தெரிவித்தார்.

இதேநேரம் வவுனியா மாவட்டத்தில் இதுவரை படையினர் விடுவித்த நிலங்களின் விவரத்தைப் பெற்றதோடு, படையினர் விடுவித்தும் உரியவர்கள் பராமரிப்போ அல்லது ஆளுகையோ செய்யாது இருக்கும் நிலங்களின் விவரங்களும் திரட்டப்பட்டுள்ளன என்று மாவட்டச் செயலகத் தரப்பினர் தெரிவித்தனர்.

(த-105)

# கிளாலிக் கிராமம் அபிவிருத்தியடையும்

## தவிசாளர் தெரிவிப்பு

கிளிநொச்சி, ஜூன் 24

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட கிளாலி கிராமம் துரிதமாக அபிவிருத்தி செய்யப்படும் என்று பச்சிலைப்பள்ளி பிரதேச சபைத் தவிசாளர் சு. சுரேன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரனின் நிதி ஒதுக்கீட்டில் இடம்பெறும் அபிவிருத்தி வேலைகளின் முன்னேற்றம் தொடர்பாக ஆய்வு செய்யச்சென்றவேளை மக்களின் வேண்டுகோளுக்கிணங்க எதிர்காலத்தில் மேற்கொள்ளவேண்டிய வேலைத்திட்டங்களையும் பார்வையிட்டார். அத்துடன் கலாசார முக்கியத்துவமான இடங்கள் மற்றும் மதத் தலங்களுக்கும் எதிர்வரும் காலங்களில் நிதி ஒதுக்கித் தரப்படும் என்று உறுதியளித்துள்ளார் என்று சுரேன் தெரிவித்தார்.

சந்திப்பில் உபதவிசாளர் கஜன், உறுப்பினர்களான ரமேஷ், கிளாலி வட்டார அமைப்பாளர் ராஜேஸ்வரன், பொது மக்கள், ஆலய நிர்வாகத்தினர் எனப் பலரும் கலந்துகொண்டனர். (த-6)



# சாலைக்கடல் வற்றியுள்ளதால் 2,500 தொழிலார்கள் பாதிப்பு

முல்லைத்தீவு, ஜூன் 24

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்றுப் பிரதேசத்துக்கு உட்பட்ட சாலை கடல் நீரேரி வற்றியுள்ளதால் அதிகளவான சிறு கடற்தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாத்தளன், புதுமாத்தளன், அம்பலவன், பொக்கணை, வலைஞர் மடம், இரணைப்பாலை, ஆனந்தபுரம், தேவிபுரம், சுதந்திரபுரம் வரையான பகுதியில் சுமார் 2 ஆயிரத்து 500க்கும் மேற்பட்ட ம்க்கள் இந்தக் கடல் நீரேரியினை நம்பி வாழ்கின்றார்கள். தற்போது கடும் வறட்சி காரணமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் அதிகளாவன நீர்நிலைகள் வற்றியுள்ளன. சாலை கடல்நீர் ஏரியும் நீர் வற்றிக்காணப்படுவதால் அங்கு கடற்தொழில் தற்போது கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. (ம-ரி3)

# 43 குடும்பங்களுக்கு உலருணவு வழங்கல்

பளை, ஜூன் 24


பச்சிலைப்பள்ளி மேற்குப் பிரதேசத்தில் கடந்த மாதம் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட வேம்பொடுகேணி, இத்தாவில், முகமாலை ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 43 குடும்பங்களுக்கு தலா 5 ஆயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருள்கள் விநியோகிக்கப்பட்டன.

கடந்த 20 ஆம் திகதி பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தால் இவை விநியோகிக்கப்பட்டன.

தமது காணிகளில் மீளக்குடியமர்ந்து குடும்பப் பதிவுகளை தத்தமது பிரிவுகளுக்கு மாற்றிய குடும்பங்களுக்கே உலர் உணவுப் பொருள்கள் விநியோகிக்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (த-9)

# சகல கட்சிகளுக்குள்ளும் குழப்பவாதிகள் உள்ளனர்

## அதை விடுத்து ஒற்றுமைப்பட வேண்டும் என்று செல்வம் எம்.பி வலியுறுத்து



வவுனியா, ஜூன் 24

சகல கட்சிகளுக்குள்ளும் ஒரு சிலர் குழப்பவாதிகளாக இருப்பார்கள். அதைவிடுத்து எமது மக்களின் விடுதலையை வென்றெடுப்பதற்காக அனைத்து தமிழ் கட்சிகளும் ஒன்று பட வேண்டும் என்று நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவரும், வன்னித் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர் எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமக்குள் ஒற்றுமை இல்லையெனில், சிங்கள பெரும்பான்மை கட்சிகள் எமது பகுதியில் வலுவாக கால் ஊன்றுவதற்கான செயற்பாட்டை நாங்கள் செய்திருக்கின்றோம் என்றே எண்ண வேண்டும். தற்போது இருக்கின்ற நிலையில் தமிழ்த் தரப்புக்கள் ஒற்றுமையாகச் செயற்பாடாது விடின் வடக்கு, கிழக்கு சிங்கள பெரும்பான்மை கட்சிகளிடம் கைமாறும் அபாயம் ஏற்பட்டுள்ளது. தீவிரவாதத் தாக்குதல் மற்றும் புத்த பிக்குகளின் செயற்பாட்டால் எங்களின் பிரச்சினை களைத் தீர்ப்பதற்கான வாய்ப்புக்கள் குறைவடைந்துள்ளன.

மக்களுக்காகச் செயற்படுகின்றோம் என்று கூறுகின்ற அத்தனை கட்சிகளும் ஒற்றுமை என்ற விடயத்தை மனதார ஏற்றுக் கொள்ள வேண்டும். ஒற்றுமை ஏற்படாத நிலையில் எங்களுடைய தேசியப் பிரச்சினை, எங்களுடைய இனப் பரம்பல், எங்களுடைய வரலாறு எல்லாம் அழிகின்ற ஒரு அபாயத்தை நோக்கிச் செல்லும். நாடாளுமன்ற உறுப்பினர் ஹக்கீமின் கட்சியில் இருந்து தான் மற்றைய நாடாளுமன்ற உறுப்பினரான ரிசாட் பிரிந்து சென்றார். இரு கட்சிகளாக அவர்கள் பிரிந்து செயற்பட்டார்கள். தற்போது ஒற்றுமையாக மாறியிருக்கிறார்கள். இது முஸ்லிம் சமூகம் மத்தியில் வரவேற்பை பெற்றுள்ளது. எமது தமிழ் சமூகமும் ஒற்றுமைப் பட வேண்டும். இப்பொழுதும் மாறி மாறி சேறுகளை பூசுகின்ற, எங்களுக்குள் முரண்பாடான கருத்துக்களைச் சொல்லிக் கொண்டிருக்கின்ற நிலை காணப்படுகின்றது. சரி, பிழை என்பது வேறு. எல்லா கட்சிகளுக்குள்ளும் ஒரு சிலர் குழப்பவாதிகளாக இருப்பார்கள். அதைவிடுத்து எமது மக்களின் விடுதலையை வென்றெடுப்பதற்காக ஒன்று பட வேண்டும். ஒற்றுமைப்படுகின்ற காலகட்டம் தற்போது இருக்கிறது. ஆகவே ஒற்றுமைப் படவேண்டும். அப்படி செய்யவில்லை எனில், நாம் மக்களின் குரல்களாக இருக்கின்றோம் என்று கூறிக் கொண்டு ஏமாற்றுகின்றோம் என்பது தான் உண்மை - என்றார். (த)



முள்ளியவளை தண்ணீரூற்று பகவான் ஸ்ரீ சத்ய சாயி சேவா நிலையத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட முன்பள்ளிச் சிறார்களின் சந்தை நிகழ்வுகள் கடந்த சனிக்கிழமை மாஞ்சேலை வைத்திய சாலைக்கு அருகாமையில் இடம் பெற்றது. (ம)


### தடுப்பு மருந்து ஏற்றப்படாத

# வளர்ப்பு நாய் கடித்தால் உரிமையாளருக்கு சிறை

சாவகச்சேரி, ஜூன் 24

**விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி மருந்து ஏற்றப்படாத வளர்ப்பு நாய் பொதுமகனுக்கு கடித்து பாதிப்பை ஏற்படுத்தினால் உரிமையாளருக்கு 60 ஆயிரம் ரூபா தண்டம் அல்லது ஆறு மாத சிறைத்தண்டனை விதிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.**

சுகாதார மருத்துவ அதிகாரி பணியகங்களால் அந்தந்தப் பொது சுகாதாரப் பரிசோதகர் பிரிவு ரீதியாக வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த்தடுப்பூசி மருந்து ஏற்றப்பட்டு வருகிறது. பிரிவு ரீதியாக வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி மருந்து ஏற்றப்படும் காலத்தில் தமது வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி மருந்து ஏற்றாமல் விடுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இந்நிலையில் விலங்கு விசர் நோய்த்தடுப்பூசி மருந்து ஏற்றப்படாத நாய் கடித்து பாதிப்புக்கு உள்ளானவர் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தால் நாயின் உரிமையாளருக்கு 60 ஆயிரம் ரூபா தண்டம் அல்லது ஆறு மாத கால சிறைத்தண்டனை விதிக்கப்படு மென தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)



## பொலன்னறுவையில் அலுவலகங்கள் திறப்பு

கொழும்பு, ஜூன் 24

'புத்தெழிச்சி பெறும் பொலன்னறுவை' எனும் செயற்றிட்டத்தின் கீழ் வினைத்திறன் மிக்க மக்கள் சேவையை வழங்க பொலன்னறுவை லங்காபுர பிரதேசசெயலகப் பிரிவுக்குட்பட்ட ஜெயகம, ஜெயபுர, நெலும்புர, அபயபுர, சோமபுர ஆகிய ஐந்து கிராமங்களிலும் அமைக்கப்பட்ட உத்தியோகபூர்வ பணிமனைகள் நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப்பட்டன.

வன்னித் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் அதைத் திறந்து வைத்தார்.

அரசதலைவரால் இந்தச் செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

நிகழ்வில் பௌத்த, இஸ்லாமிய மதகுருக்கள், அரசதலைவரின் இணைப்பாளர் வீரசிங்க, பிரதேச சபை உறுப்பினர் ஜனாப், அப்துல் நிஸார் மற்றும் ஜனாப் பைசல் பலரும் கலந்து கொண்டனர். (த-222)



## செஞ்சோலை நினைவேந்தல் முன்னோடிக் கலந்துரையாடல்

மன்னார், ஜூன் 24

செஞ்சோலையில் வானூர்தித் தாக்குதலில் உயிர்நீத்த மாணவர்களின் 13ஆம் ஆண்டு நினைவுநாள் தொடர்பான முன்னோடிக் கலந்துரையாடல் புதுக்குடியிருப்பு வன்னிக் குறோஸ் கலாசார பேரவை வளாகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

வன்னிக்குறோஸ் தாயக உறவுகள் நினைவேந்தல் அமைப்பு இதை நடத்தியது.

அமைப்பின் செயலர் த.யோகேஸ்வரன், வன்னிக்குறோஸ் நிறுவன வன்னிமாவட்ட இணைப்பாளர் ச.ரூபன், வன்னிக் குறோஸ்கலாசாரப் பேரவையின் தலைவர் சி.நாகேந்திரராசா, முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் தலைவர் க.விமலதாஸ், மகளிர் பேரவையின் தலைவி சு.வளர்மதி, வன்னிக்குறோஸ் விளையாட்டுப் பேரவையின் இணைத் தலைவர் தி.ரவீந்திரன், செயலர் சி.வேதவனம், புதுக்குடியிருப்பு பிரதேச வணிகர் சங்கத் தலைவர் செல்வச்சந்திரன், முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கத்தின் நிர்வாகத்தினர், விளையாட்டு கழகங்களின் தலைவர்கள், பொது அமைப்பின் நிர்வாகத்தினர் பலரும் கலந்துகொண்டனர். (த-213,222)

## அன்னதானச் சபையை உருவாக்கியவர்களுக்கு மதிப்பளிப்பு

வலி.மேற்கு.ஜூன் 24

நயினாதீவு நாகபூசணி அம்மன் அமுத சுரபி அன்னதான சபையை உருவாக்கியவர்கள் எதிர்வரும் 13 ஆம் திகதி மதிப்பளிக்கப்படவுள்ளனர்.

இதற்கான ஏற்பாடுகளை அமுத சுரபி அன்னதான சபையின் தலைவர் த.சிவானந்தன் மற்றும் செயலர் த.அம்பிகைபவன் ஆகியோர் மேற்கொண்டுள்ளனர்.

1960 அம் ஆண்டில் அமுத சுரபி அன்னதான சபையை 25 பேர் சேர்ந்து உருவாக்கினர்.

இதில் 23 பேர் இறையடி சேர்ந்துள்ளனர். மற்றைய இருவரான காராளபிள்ளை, வே.மு.சண்முகதாசன் ஆகியோர் மதிப்பளிக்கப்படவுள்ளனர்.

அமுத சுரபி அன்னதானச் சபையின் மணிவிழா எதிர்வரும் 13 ஆம் திகதி நடைபெறவுள்ளதுஅன்றையதினமே இவர்கள் மதிப்பளிக்கப்படவுள்ளனர். (ஐ-50)



*மத்திய மாகாண முஸ்லிம் விவகாரங்களுக்கு பொறுப்பாக மன்னார் முசலிப் பிரதேசத்தைச் சேர்ந்த முஹமட் நிப்றாஸ் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இதற்கான அனுமதிக்கடிதம் மத்திய மாகாண ஆளுநர் மைத்ரி குணரெத்னவால் அண்மையில் வழங்கப்பட்டது.* (ஐ-213)




## தந்தையை இழந்த மாணவனுக்கு ஈருருளி

வவுனியா செட்டிகுளம் வீரபுரம் மணிவாசகர் வித்தியாலயத்தில் கல்வி கற்கும் தந்தையை இழந்த மாணவனுக்கு ஈருருளி வழங்கப்பட்டது. இதை வழங்கும் நிகழ்வு வைரவப்புளியங்குளம் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

லண்டனைச் சேர்ந்த ஹரிஹரன் துசித்தா தம்பதிகள் நேற்றுமுன்தினம் 6ஆவதுவருட திருமண்நாளைக்கொண்டாடினர். அதனையயொட்டி அவர்களின் உதவியில் ஈருருளி வீ 3 பவுண்டேசனூடாக வழங்கப்பட்டது.

நிகழ்வில் வவுனியா மாவட்ட சமூக சேவை அலுவலர் சிறினிவாசன், கிராம அலுவலர் கே. விஜயகுமார், கிராம அபிவிருத்திச் சங்கத்தலைவர் கே.உதயகுமார் அரசடிக்குள வித்தியாலய அதிபர் எஸ்.ஜனார்த்தனன் ஆகியோர் கலந்து கொண்டனர். (த-222)

### கல்முனைப் பிரதேச செயலக தரமுயர்த்தல்:

# இனமுறுகலுக்கு வித்திட்ட விடயத்துக்கு கூட்டமைப்பே பொறுப்புக் கூறவேண்டும்

### ஆனந்தசங்கரி கடுமையாகச் சாடுகிறார்

யாழ்ப்பாணம், ஜூன் 24

இலகுவான முறையில் தீர்த்து வைத்திருக்கவேண்டிய கல்முனைப்பிரதேச செயலக தரமுயர்த்தல் விடயம், இவ்வளவு தூரத்துக்கு வளர்ந்து இனங்களுக்கிடையே முறுகல் ஏற்படுத்தும் அளவுக்கு வளர்ந்து விட்டது. இதற்கான முழுப் பொறுப்பையும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலர் நாயகம் வீ. ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

இது பற்றி அவர் அனுப்பிய செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கடந்த மாகாண சபையில் பதினொரு உறுப்பினர்களைக் கொண்டிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆறு உறுப்பினர்களைக்கொண்டிருந்த சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸிற்கு முதலமைச்சர் பதவியை விட்டுக் கொடுத்த போது, தமிழ்த் தலைமைகள், அம்பாறை மாவட்ட தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கையின் உண்மைத் தன்மையைத் தெளிவுபடுத்தி, பேரம் பேசி பிரதேசசெயலகத்தின் தரத்தை உயர்த்தி இருக்கலாம். அல்லது நல்லிணக்க அரசில் எதிர்க் கட்சி பதவியைப் பெற்றுக் கொண்டபோதாவது, இது விடயமாக பேரம் பேசி இருக்கலாம். எதுவுமே செய்யாமல் கிழக்கு வாழ் தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகள் எதைப்பற்றியும் சிந்திக்காமல், பேரம் பேச வேண்டிய நேரத்தில் சோரம் போய்விட்டு, இப்போதும் வேடிக்கைப்பார்த்துக் கொண்டிருப்பது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வழமையான கையாலாகாத தன்மையினையே, தொடர்ந்தும்காட்டுகின்றது.

கல்முனைப் பிரதேச செயலகத்தைத் தரமுயர்த்துவதால் இஸ்லாமிய மக்களுக்கோ, அவர்களது நிலத்துக்கோ எதுவித பாதிப்பும்ஏற்படப் போவதில்லை என்பது அனைவருக்கும் தெரிந்த விடயம். இந்த விடயத்தில், முஸ்லிம் தலைமைகள் பொறுப்புடனும்,நிதானத்துடனும் செயற்பட்டு இந்த விடயத்துக்கு முழுமையான ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்று தமிழர் விடுதலைக் கூட்டணிவினயமாகக் கேட்டுக் கொள்கின்றது. சிறுபான்மை இனங்கள் நமக்குள் நாமே விட்டுக்கொடுப்பதற்கு முரண்டு பிடித்தால்,எவ்வாறு பெரும்பான்மையிடம் நாம் அதிகார பரவலாக்கலை எதிர்பார்க்க முடியும்?

பிரதேச செயலகத்தில் அமைந்திருந்த விநாயகர் கோவில் விடயத்தில் எவருடனும் கலந்தாலோசிக்காமல் மாநகர் முதல்வர்,நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து, இந்துக்களின் மனதை நோகடிக்கும் செயல் என்று தெரிந்திருந்தும், தொடர்ந்தும்இனவிரிசலுக்கான நிலமையை ஏற்படுத்தினார். இந்த விடயத்தில் எமது கட்சியைச் சார்ந்த உறுப்பினர்களுக்கு நாம்எவ்வளவோ எடுத்துக் கூறியும், பிரதி முதல்வர் என்ற பதவி மோகத்துககு ஆளாகி உறுப்பினர் காத்தமுத்து கணேசனும் மற்றும்உறுப்பினர் ஜெ. சுமித்திராவும் விலைபோய்விட்டார்கள். இருந்தும் நாம் அவர்கள் மீது உடன் நடவடிக்கை எடுத்து,இனங்களுக்கிடையேயான முரண்பாடுகளை வளர்த்து, அதில் அரசியல் ஆதாயம் தேட முற்படாமல், வழக்கை மீளப்பெற மாநகரமுதல்வருக்கு அழுத்தம் கொடுக்குமாறு எமது உறுப்பினர்களிடம் கேட்டுக்கொண்டோம்.

ஆனால் அவர்கள் அவ்வாறு செய்யாமல் அதற்கான பிராயச்சித்தமும் தேடாமல் தொடர்ந்தும் தங்கள் போக்கிலேயே நடந்துகொண்டார்கள். அது மட்டுமல்லாமல் கட்சியின் கொள்கைகளுக்கு எதிராகவும், கட்சியின் கட்டுப்பாட்டை மீறியும், இனங்களுக்கிடையே விரிசலை ஏற்படுத்தும் நோக்கத்துடனும் தொடர்ந்தும் செயற்பட்டும் வந்தார்கள். இதன் காரணமாக,அவர்களை நாம் கட்சியில் இருந்து நீக்க வேண்டிய சூழ்நிலையும் ஏற்பட்டுள்ளது - என்றுள்ளது. (த)

# இந்த வருடத் திட்டங்களை விரைந்து நிறைவேற்றுங்கள்

*மீள்குடியேற்ற அமைச்சின் செயலர் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், ஜூன் 24

யாழ்ப்பாண மாவட்டத்தில் இந்த வருடத்துக்கான செயற்திட்டங்களை காலம் தாழ்த்தாமல் இந்த வருட இறுதிக்குள் தரமாகச் செய்து முடியுங்கள் இவ்வாறு மீள் குடியேற்ற அமைச்சின் செயலர் வே.சிவஞானசோதி தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்ட இளைஞர் சேவைகள் மன்றத்தின் புதிய கட்டடத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு கல்லுண்டாய் பகுதியில் நேற்று இடம்பெற்றது. இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணத்தில் மீள் குடியேற்ற அமைச்சின் மூலம் பல்வேறு செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. அதிலும் யாழ்ப்பாணத்தில் இந்த வேலைகள் மும்மரமாக இடம்பெற்று வருகின்றன. இன்னும் பல திட்டங்களை எமது அமைச்சு மேற்கொள்ளும். தற்போது



அமைக்கும் இந்த கட்டடம் இளைஞர்களின் ஆளுமை மற்றும் திறன்களை வளர்த்து கொள்ளும் ஓர் இடமாக அமையும். 50 மில்லியன் ரூபா செலவில் அமையவுள்ள இந்தக் கட்டடத்தில் உள்ளக விளையாட்டு அரங்கு. அலுவலக கட்டடம், பயிற்சி நிலையம், தங்குமிடம் போன்ற பல்வேறு வசதிகள் உள்ளடக்கப்படவுள்ளன. அழகு கலை, கணனி சார் பயிற்சிகள், உடற் பயிற்சி போன்ற பல்வேறு திறன்களை வளர்த்துக் கொள்ளும் நிலையமாக இது அமையும். இப்போது இந்த இளைஞர் அமைப்பில் சுமார் 11 ஆயிரத்து 450 பேர் அங்கத்துவம் வகிக்கின்றனர்.

15 மில்லியன் ரூபா செலவில் சித்தன்கேணிப் பகுதியில் 8 வகுப்பறைகளைக் கொண்ட இரண்டு மாடிக் கட்டடம், 7.7 மில்லியன் ரூபா செலவில் சங்கானை பகுதியில் வெதுப்பகக் கட்டடம், 9 மில்லியன் ரூபா செலவில் பண்டத்தரிப்பு பிரதேசத்தில் மருந்து உற்பத்தி நிலையம், 10 மில்லியன் ரூபா செலவில் கைதடி பிரதேசத்தில் வெதுப்பகம் உள்பட 5 ஆயிரத்து 500 மில்லியன் ரூபா செலவில் பல்வேறு வேலைத் திட்டங்கள் நடைபெற்று வருகின்றன. இந்த வருடத்துக்கான வேலைகளை தரத்தை உறுதி செய்து இந்த வருட இறுதிக்குள் முடிவுறுத்துங்கள். அடுத்து வரும் காலங்களில் அமைச்சுக்கள் மாறலாம். ஆகவே வேலைத் திட்டங்களை துரிதமாக மேற்கொள்ளுங்கள் - என்றார்.

இந்த நிகழ்வில் யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் உள்பட, அரச அதிகாரிகள் உள்ளூராட்சி மன்றத் தலைவர்கள், இளைஞர் கழக உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ம-7)



## முல்லையில் 2 செயலகங்களில் கையூட்டு, ஊழல் கருத்தரங்கு

முல்லைத்தீவு, ஜூன் 24

கையூட்டு, ஊழல் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் முல்லைத்தீவு மாவட்டத்தில் இரண்டு பிரதேச செயலகங்களில் நடைபெற்றுள்ளன.

கபே அமைப்பின் ஏற்பாட்டில் கடந்த 21ஆம் திகதி புதுக்குடியிருப்புப் பிரதேச செயலகத்திலும் நேற்றுமுன்தினம் கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்திலும் நடைபெற்றுள்ளன.

கையூட்டு மற்றும் ஊழல் தொடர்பான விசாரணைகளை ஆய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் பிரதிநிதிகள் மற்றும் சுதந்திரமானதும், நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கத்தின் பிரதிநிதிகள் இணைந்து இந்த விழிப்புணர்வு வேலைத் திட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

இதன்போது கையூட்டுப் பெற்றுக்கொள்வோரைப் போன்று கையூட்டு வழங்குபவர்களும் விழிப்புணர்வுடன் செயற்பட வேண்டும் என்ற விடயம் தொடர்பாகவும் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் உறுப்பினர்கள், கரைதுறைப்பற்று பிரதேச சபையின் உறுப்பினர்கள் மற்றும் அரச அலுவலர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் பலர் கலந்துகொண்டனர். (கு-ரி3)



## பாரவூர்தி ஹயஸ் மோதி விபத்து சாரதி காயம்

கொடிகாமம் ஜூன் 24

பாரவூர்தியுடன் ஹயஸ் வான் மோதியதில் சாரதி காயமடைந்த நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

இந்த சம்பவம் ஏ9 வீதியில் கொயிலாமனை சந்திக்கு அண்மையில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை காலை 7 மணியளவில் இடம்பெற்றது

கொடிகாமம் பகுதியிலிருந்து சாவகச்சேரி நோக்கி பாரவூர்தி சென்றுள்ளது. அதே திசையில் பாரவூர்திக்கு பின்னால் சென்ற ஹயஸ், பாரவூர்தியை முந்த முற்பட்ட வேளை இந்த விபத்து இடம்பெற்றதாக தெரிவிக்கப்பட்டது.

மிருசுவில் தெற்கைச் சேர்ந்த ஹயஸ் வாகன சாரதி காயமடைந்த நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். கொடிகாமம் போக்குவரத்து பிரிவு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-159)

## முல்லை மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் நாளை

முல்லைத்தீவு, ஜூன் 24

முல்லைத்தீவு மாவட்டத்தின் இந்த வருடத்துக்கான முதலாவது அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நாளை நடைபெறவுள்ளது. கடந்த ஏப்ரல் மாதம் 22ஆம் திகதி முல்லை மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் இடம்பெறுவதாக விருந்தது. ஏப்ரல் 21ஆம் திகதி நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையால் அது பிற்போடப்பட்டது. (கு-246)

*வரலாற்று ரீதியாக*

# சிங்கள பூர்வீகம் தமிழுக்கு முந்தையது என்றுகூற இந்த அரசு முற்பட்டிருக்கிறது

## திருகோணமலை தென்கயிலை ஆதீனம் கண்டனம்

யாழ்ப்பாணம், ஜூன் 24

இலங்கை அரசு தனது வரலாற்றில்தமிழர் பூர்வீகத்தையும் அதன் வரலாற்றுத் தொன்மங்களையும்அழித்து வந்திருக்கின்றது. சிங்கள ஆரிய இணைப்பை ஏற்படுத்தி சிங்கள பூர்வீகத்தை வரலாற்று ரீதியாக தமிழுக்கு முந்தையது எனக் கூற முற்பட்டிருக்கின்றது என்று திருகோணமலையிலுள்ள தென்கயிலை ஆதீன தவத்திருஅகத்தியர் அடிகளார் தெரிவித்தார்.

இது பற்றி அவர் அனுப்பிய ஊடகஅறிக்கையில்மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வரலாற்றுப் பூர்வீகத்தின் அழிப்பு பின்முள்ளிவாய்க்கால் வரலாற்றுத் தளத்தில் மிக ஆக்ரோசமாக முடுக்கிவிடப்பட்டுள்ளது. இந்த நிகழ்ச்சித் திட்டம் தொல்லியல் திணைக்களத்தினூடு அதிவேகமாக முன்னெடுக்கப்பட்டாலும், பக்கபலமாக ஏனைய திணைக்களங்களும் துணைபோகின்றன என்பது தெரியாததொன்றல்ல.

கிழக்கு மாகாணத்தில் தமிழர் பாரம்பரியமும் அதன் இருப்பும் கேள்விக்குட்படுத்தப்பட்டே வந்துள்ளன. அதன் இன்னொரு பரிமாணந்தான் சைவ ஆலயங்களின் அழிப்பும் அவை சார்ந்த வரலாற்றுத் தடயங்களின் அழிப்பும். திருக்கோணமலை சைவ ஆலயங்களுக்கு மிகப் பழைமையான வரலாறு உண்டென்பது யாவரும் அறிந்தது. திருக்கோணேச்சரத்துக்கும் கன்னியா வெந்நீரூற்றுக்குமான இதிகாச இணைப்பு தமிழர் இருப்பின் தொன்மையை மிகத் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது. வெந்நீரூற்றுக் கிணற்றுக்கு அருகில் இருந்த பிள்ளையார் ஆலயத்தின் இருப்பு கேள்விக்குட்படுத்தப்பட்டுள்ளது. அதற்கு அருகே புதிதாக அமைக்கப்பட்டிருக்கும், பௌத்த விகாரையின் விகாராதிபதியின் உள்நோக்கம் பிள்ளையார் கோவிலின் வரலாற்றுச் சுவடுகளை அழித்து, திரித்து, பௌத்த பூமியாக அறிவிப்பதே. இது தொடர்பில் சிங்கள அரசு மௌனம் காக்கின்றது.

இந்தக் கையறு நிலை கன்னியா வெந்நீரூற்றுக்கு அருகிலிருக்கும் பிள்ளையார் கோவிலுக்கு மட்டுமல்ல, வடக்கு -கிழக்கு எல்லைக் கோட்டில் இருக்கும் கிராமமான தென்னவன் மரபு அடி கந்தசாமி மலை, இலங்கைத்துறை முகத்துவாரத்தின் பெரியசாமிமலை,கல்லடிமலை நீலி அம்மன் கோயில், குச்சவெளி அரிசிமலை, மூதூரில் திருமங்களாய், அகத்தியர்ஸ்தாபனம், மத்தளமலை போன்ற தமிழர் வரலாற்றுத் தொன்மையான இடங்கள் தொல்பொருளியல்திணைக்களத்தால் அபகரிக்கப்பட்டும் வரலாற்றுத் திரிபுகளுக்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டும் வருகின்றன. இந்த முயற்சிகள் பௌத்த பிக்குகளின் வழிகாட்டலில் முன்னெடுக்கப்படுவது கவலைக்குரியதும் கவனத்துக்குரியதும். இந்த முயற்சிகள் எதிர்காலத்தில் ஏனைய சிறுபான்மை மதங்களின் இருப்பை இலங்கையில் கேள்விக்குட்படுத்தும் நிகழ்ச்சி நிரலாகும்.

இந்த அரசியல் நிகழ்ச்சி நிரல் திருக்கோணமலைக்கு மட்டும் உரியதல்ல. ஒட்டுமொத்த தமிழர் தாயகங்களான வடக்கு கிழக்குக்கும் உரியது. இது ஒருமதம் சார்ந்ததுமட்டும் அல்ல. ஒட்டுமொத்த தமிழ் இன இருப்புக்கும் அச்சுறுத்தலாக அமைகின்றது. கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலையின் நீட்சியே இந்த அரசியல் நிகழ்ச்சி நிரல் - என்றுள்ளது. (கு)

## போதைப் பொருள் ஒழிப்பு விழிப்பூட்டும் நிகழ்வு

மட்டக்களப்பு,ஜூன் 24

போதைப் பொருள் பாவனையால் சமூகத்தில் ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பில் விழிப்பூட்டல் நிகழ்வு மட்டக்களப்பில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு மண்முனை மேற்கு, வவுணதீவு பிரதேச செயலகப் பிரிவிலுள்ள விளாவட்டவான் கிராமத்தில் சமுர்த்தி சமுதாய அமைப்பின் ஏற்பாட்டில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

பன்னாட்டு புகைத்தல், மது பாவனை எதிர்ப்புதினத்தை முன்னிட்டு விளாவட்டவான் கிராமத்திலுள்ள சமுர்த்தி சமுதாய அமைப்புக்கள் இணைந்து இச்செயற்பாட்டை முன்னெடுத்தனர்.

போதைப் பொருட்களால் ஏற்படும் பாதிப்பு தொடர்பில் எழுதப்பட்ட பதாகைகளுடன், கரவெட்டி முதன் வீதி வழியாக சென்ற மக்கள் விளாவட்டவான் மாரியம்மன் ஆலய முன்றலை வந்தடைந்து அங்குஇடம்பெற்ற விழிப்பர்வு நிகழ்விலும் கலந்துகொண்டனர்.

போதைப் பொருட் பாவனைய வீட்டுக்கும், நாட்டுக்கும் கேடு எனும் தொனிப் பொருளுக்கு அமைவாக புகைத்தல், மது பாவனையால் மனிதர்களுக்கும் சமுதாயத்திற்கும் ஏற்படும் பாதிப்புக்கள் பற்றி தெழிவுபடுத்தப்பட்டது. (ஐ-46)



## ஸஹ்ரான் குறித்த சாட்சியத்தை மறுக்கின்றனர் இராணுவத்தினர்

கொழும்பு, ஜூன் 24

தற்கொலைக் குண்டுதாரி ஸஹ்ரான் ஹாசிம் அக்கரைப்பற்று வந்தமை தொடர்பாக, சிறிலங்கா இராணுவப் புலனாய்வுப் பிரிவுக்கு தெரியப்படுத்தியதாக, இலங்கை தௌஹீத் ஜமாத் அமைப்பின் தலைவர் ஏ.கே.ஹாசிம் கூறியிருப்பதைச் சிறிலங்கா இராணுவம் நிராகரித்துள்ளது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து விசாரிக்கும் நாடாளுமன்றத் தெரிவுக்குழு முன்பாகச் சாட்சியம் அளித்திருந்த இலங்கை தௌஹீத் ஜமாத் தலைவர் ஏ.கே.ஹாசிம், தாக்குதல் நடப்பதற்கு ஒரு மாதத்துக்கு முன்பாக, தேசிய தௌஹீத் ஜமாத் தலைவர் ஸஹ்ரான் ஹாசிம் அக்கரைப்பற்றுக்கு வந்திருந்தார் என்றும், அதுபற்றி தாம்இராணுவப் புலனாய்வுப் பிரிவுக்கு தெரியப்படுத்தியதாகவும் கூறி யிருந்தார்.

இதுகுறித்து, கருத்து வெளியிட்டுள்ள இராணுவப்பேச்சாளர் பிரிகேடியர் சுமித் அத்தபத்து, "இந்த சாட்சியத்தை அடுத்து, இராணுவப் புலனாய்வுப் பிரிவிடம், இராணுவத் தலைமையகம் விசாரித்தது.

இலங்கை தௌஹீத் ஜமாத் தலைவர் ஏ.கே.ஹாசிம் கூறியது பொய். அவர் கூறிய சாட்சியம் எந்த அடிப்படையும் இல்லாதது" என்று தெரிவித்துள்ளார். (ம)



# தவறான சாட்சியங்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை

### தெரிவுக்குழு மிரட்டல் தொனி

கொழும்பு, ஜூன் 24

ஈஸ்டர் தாக்குதல்கள் குறித்து விசாரணை செய்யும் நாடாளுமன்ற தெரிவுக்குழு முன்பாக உண்மைக்குப் புறம்பான சாட்சியங்களை வழங்குபவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய முடியும் என தெரிவுக்குழு அறிவித்துள்ளது.

சாட்சியம் வழங்கும் ஒருவரால், உண்மைக்குப் புறம்பான வாக்குமூலம் வழங்கப்பட்டால் தெரிவுக்குழு உறுப்பினர்கள் இணைந்து, சட்ட நடவடிக்கை எடுப்பது குறித்து அவதானம் செலுத்த முடியும் என அதன் தலைவரும் பிரதி சபாநாயகருமான ஆனந்த குமாரசிறி தெரிவித்துள் ளார்.

தென்னிலங்கை ஊடகமொன்றுக்கு நேற்றுமுன்தினம் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மேலும் தெரிவுக்குழுவில் சாட்சியமளித்த சிலோன் தௌஹீத் ஜமாத் அமைப்பின் பொதுச் செயலர் அப்துல் ராஸிக், ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாத அமைப்பை நிராகரிப்பதாக தெரிவித்திருந்தார்.

எனினும், சமூகவலைதளங்களில் பதிவாகியுள்ள அவரின் போதனைகள் அடங்கிய காணொளியில், ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்பின் செயற்பாடுகளுடன் அவர் இணங்குவதாகத் தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாகவே உண்மைக்குப் புறம்பான சாட்சியங்களை வழங்குபவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய முடியும் என தெரிவுக்குழுவால் தெரிவிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் குறித்து ஆராயும் தெரிவுக்குழு இதுவரையில் 7 தடவைகள் கூடியுள்ளதுடன், பலர் முன்னிலையாகி சாட்சியங்களை வழங்கியுள்ளனர்.

மேலும் பலரிடம் வாக்குமூலங்களை பெற்றுக் கொள்வதற்கு தெரிவுக்குழு எதிர்பார்த்துள்ள நிலையில், சாட்சியம் வழங்குவதற்காக தலைமை அமைச்சர் ரணில் விக்கரமசிங்கவுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)



## ஈஸ்ரர் தாக்குதல் தொடர்பான அதிர்ச்சிகள் பல அடுத்தவாரம்

கொழும்பு, ஜூன் 24

ஈஸ்டர் தாக்குதல்கள் குறித்த அதிர்ச்சித் தகவல்கள் பல அடுத்த வாரம் வெளிவரும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் தொடர்புகொண்டமைக்காக சவுதியில் கைதுசெய்யப்பட்டு நாடு கடத்தப்பட்ட ஐந்து பேர் விசாரணைக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றனர்.

அவர்களிடம் இருந்து முக்கியமான - அதிர்ச்சித் தகவல்கள் பல கிடைத்துள்ளன. அவர்களின் தொடர்பாடல் சாதனங்களும் பகுப்பாய்வுக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றன.

இதேவேளை, அவர்களிடம் இருந்து கிடைக்கப் பெற்றுள்ள தகவல்களின் அடிப்படையில் முக்கியமான பல விடயங்கள் அடுத்த வாரம் வெளியாக்கப்படும் சாத்தியங்கள் உள்ளன என விசாரணைகளுடன் தொடர்புடைய அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாதிகளின் தலைமையுடன் அல்லது தலைமையுடன் நேரடித் தொடர்பில் இருந்த தரப்புடன் தொடர்பில் இருந்த இலங்கையர் யார்? என்ற விவரங்கள் குறித்துத் தற்போது துப்பு துலக்கப்பட்டு வருகின்றது எனவும் அவர் மேலும் கூறியுள்ளார். (ம)

## இந்தியாவின் உளவுத்துறையுடன் இணைந்து தொடர்புபட்டுள்ளோம்

### இராணுவத்தளபதி இப்படித் தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 24

வலயத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக இந்திய உளவுத்துறையுடன் இணைந்து செயற்படுக் கொண்டிருக்கிறோம் என்று இராணுவத்தளபதி லெப்டினன்ட் ஜெனரல் மகேஷ் சேனநாயக்க தெரிவித்துள்ளார். மாதுருஓய சிறப்புப் படை பயிற்சி பாடசாலையின் 49ஆவது பிரிவின் விடுகை விழாவில் கலந்துகொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (ம)

## காற்றினுடைய வேகம் மேலும் அதிகரிக்கும்!

### வளிமண்டலவியல் திணைக்களம் தகவல்

கொழும்பு, ஜூன் 24

நாடு முழுவதும் தற்போது காணப்படும் காற்றுடன் கூடிய நிலைமை அடுத்த சில நாள்களுக்கும் மேலும் தொடரும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. அத்தோடு, நாட்டின் தென்மேற்குப் பகுதியில் தற்போது காணப்படும் மழையுடன் கூடிய வானிலை நிலைமையும் அடுத்த சில நாள்களுக்குத் தொடரும் என அந்தத் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

வளிமண்டலவியல் திணைக்களம் நேற்று ஞாயிற்றுக்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இதனைத் தெரிவித்துள்ளது. அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

மேல், மத்திய, சப்ரகமுவ, தென், வடமேல் மற்றும் வடமத்திய மாகாணங்களிலும் திருகோணமலை மற்றும் மொனராகலை மாவட்டங்களிலும் மணித்தியாலத்துக்கு 5060 கிலோ மீற்றர் வரையான அதிகரித்த வேகத்தில் பலத்த காற்று வீசுவதற்கான சாத்தியம் உயர்வாகக் காணப்படுகிறது.

ஏனைய பிரதேசங்களில் மணித்தியாலத்துக்கு 4050 கிலோ மீற்றர் வரையான வேகத்தில் ஓரளவு பலத்த காற்று வீசும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. மேல், சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களிலும் மற்றும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுகிறது. வடமேல் மாகாணத்திலும் அம்பாந்தோட்டை மாவட்டத்திலும் தொடர்ந்தும் மழை பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகிறது. சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களில் சில இடங்களில் 75 மி.மீ. அளவான ஓரளவு பலத்த மழை வீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

மேல் மாகாணத்திலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சில இடங்களில் 50 மி.மீ அளவான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது. மழை பெய்யும் வேளைகளில், மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றனர்- என்றுள்ளது. (ம)

### இலங்கையில் இருந்து

## 8,000 வெளிநாட்டவர் நாடு கடத்தப்படவுள்ளனர்

கொழும்பு, ஜூன் 24

நுழைவிசைவு காலாவதியான நிலையில், இலங்கையில் தங்கியுள்ள 8 ஆயிரம் வெளிநாட்டவர்கள் நாடு கடத்தப்படவுள்ளனர்.

இதற்குத் தேவையான நிதி மற்றும் ஒழுங்குகளைச் செய்வதற்கு அமைச்சரவையின் ஒப்புதலை உள்நாட்டு விவகார அமைச்சு கோரவுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்குப் பின்னர், நுழைவிசைவு காலாவதியான பின்னரும், சிறிலங்காவில் தங்கியுள்ள 7 ஆயிரத்து 900 வெளிநாட்டவர்கள் பற்றிய தரவுகளை குடிவரவுத் திணைக்களத்தின் புலனாய்வு அலகு கண்டறிந்துள்ளதாக, குடிவரவு- குடியகல்வு திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் பசன் ரத்நாயக்க தெரிவித்தார்.

'இவர்களில் பெரும்பாலானோர் சுற்றுலா நுழைவிசைவில் வந்தவர்கள். தற்போது விடுதிகள் கட்டுமானத் துறைகளிலும், உணவகங்களிலும், விவசாயப் பண்ணைகளிலும் பணியாற்றுவதுடன், வணிக நட வடிக்கைகளிலும் ஈடுபடுகின்றனர்.

நுழைவிசைவு காலாவதியான பின்னரும் தங்கியிருப்பவர்களில் பெரும்பாலானவர்கள் ஆசிய நாடுகளைச் சேர்ந்தவர்களாவர்.

குறிப்பாக ஆயிரத்து 680 இந்தியர்கள், 936 பாகிஸ்தானியர்கள், 683 சீனர்கள், 291 மாலைதீவினர், 152 பேர் வங்காளிகள், 42 ஜப்பானியர்கள் இதில் உள்ளடங்கியுள்ளனர். மேலும், நெதர்லாந்தைச் சேர்ந்த 541 பேரும், உக்ரைனைச் சேர்ந்த 167 பேரும், சவூதி அரேபியாவைச் சேர்ந்த 172 பேரும், ரஷ்யாவைச் சேர்ந்த 157 பேரும், பெனானை சேர்ந்த 157 பேரும், நைஜீரியாவை சேர்ந்த 130 பேரும், பிரான்ஸைச் சேர்ந்த 110 பேரும், பிரித்தானியர்கள் 44 பேரும், நுழைவிசைவு காலாவதியான பின்னரும் இலங்கையில் தங்கியுள்ளனர்.' என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம)

# 90 வீதமான அரசியல் வாதிகள் அரசியலுக்கு தகுதியற்றவர்கள்

## அரசதலைவர் விளாசல்



கொழும்பு, ஜூன் 24

நாட்டில் நூற்றுக்கு பத்து வீதமான அரசியல்வாதிகள் மாத்திரமே அரசியலுக்கு தகுதியானவர்களாக இருக்கின்றனர். எஞ்சிய தகுதியற்ற அரசியல்வாதிகளே அதிகமாக தீய செயல்களில் ஈடுபடுகின்றனர் என அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்,

அவ்வாறான அரசியல்வாதிகளுடன் சேர்ந்து அரச திணைக்களங்களில் பணியாற்றும் அரச அதிகாரிகளும் தீய வழியில் செல்கின்றனர். அரச அதிகாரிகளிலும் நூற்றுக்கு 10 வீதமானவர்களே ஒழுக்கமானவர்களாக உள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இரத்தினபுரி நிவித்திகலை சுமன மத்திய மகா வித்தியாலயத்தில் புதிதாக அமைக்கப்படவுள்ள மூன்றுமாடி கட்டட நிர்மாணப் பணிகளை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அரச தலைவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வாக்குகளை மாத்திரமே இலக்காகக் கொண்டு செயற்படும் அரசியல்வாதிகளுக்கு நாட்டைப்பற்றி சிறிதளவும் அக்கறை இல்லை. இந்த நாட்டில் எந்த அரசு ஆட்சி அமைத்தாலும் போதைப் பொருள் பாவனையை ஒரு போதும் கட்டுப்படுத்த முடியாது. நாட்டில் நூற்றுக்கு பத்து வீதமான அரசியல்வாதிகள் மாத்திரமே அரசியலுக்கு தகுதியானவர்களாக இருக்கின்றனர்.

எஞ்சிய தகுதியற்ற அரசியல்வாதிகளே அதிகமாக தீய செயல்களில் ஈடுபடுகின்றனர் - என்றார். (ம)

# மண், கல் வியாபாரத்தில் ஊழல்கள் நிறைந்துள்ளன

## மைத்திரி தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 24

மணல், கல் மற்றும் மண் வியாபாரம் இலங்கையில் மிக மோசமான ஊழல் துறைகளாக உள்ளன. அவற்றில் இடம்பெறும் முறைக்கேடுகளைத் தடுப்பதற்காக பல சட்டதிட்டங்களை நான் கடந்த நான்கு ஆண்டுகளாக பரிந்துரைத்து, நடைமுறைப்படுத்தி வருகின்றேன் என்று தெரிவித்தார் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன.

பொலன்னறுவை புத்தி மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற 'பசுமை மணல் தரிப்பிடம்' எனும் எண்ணக்கருவை அறிமுகம் செய்யும் நிகழ்வின்போதே அரச தலைவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

மரங்களை வெட்டுதல், சட்டவிரோத கல், மணல், மண் அகழ்வு காரணமாக ஏற்படும் சுற்றாடல் அழிவை தடுப்பதற்கு பல சட்டதிட்டங்களை நடைமுறைப்படுத்தியுள்ளேன். எத்தகைய விமர்சனங்களை முன்வைத்தபோதும் சுற்றாடல் பாதுகாப்பிற்காக எடுக்கப்பட்ட அந்தத் தீர்மானங்களில் எந்த மாற்றமும் ஏற்படாது. அதேவேளை, அபிவிருத்தி பணிகளுக்காக கல், மணல், மண் போன்றவை தேவையாக இருந்தாலும் சுற்றாடலை பாதுகாக்கும் வகையில் சரியான முகாமைத்துவத்தின் கீழ் அவற்றைப் பெற்றுக் கொள்ள வேண்டும் - என்றார். (ம)

# ரயில்வே ஊழியர்களினுடைய பணிப்புறக்கணிப்பு முடிந்தது

கொழும்பு, ஜூன் 24

தொடருந்து ஊழியர்கள் இரண்டு நாள்களாக முன்னெடுத்த பணிப்புறக்கணிப்பு நேற்றுமுன்தினம் நள்ளிரவுடன் நிறைவுக்கு வந்தது.

நேற்று அதிகாலை முதல் தொடருந்துச் சேவைகள் வழமை போன்று முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று ரயில்வே கட்டுப்பாட்டாளர்கள் சங்கத்தின் தலைவர் லால் ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் வரை ஒவ்வொரு வியாழக்கிழமையும் நள்ளிரவு 12 மணி முதல் வெள்ளிக்கிழமை நள்ளிரவு 12 மணி வரை அடையாளப் பணிப்புறக்கணிப்பை முன்னெடுக்கப்பதற்குத் தீர்மானித்துள்ளோம் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம)

# மட்டக்களப்புத் தனியார் பல்கலையை அரசு பொறுப்பேற்க தகைமையில்லை

## ஹிஸ்புல்லா தெரிவிப்பு



மட்டக்களப்பு, ஜூன் 24

மட்டக்களப்பு - தனியார் பல்கலைக்கழகத்தை அரசு பொறுப்பேற்பதற்கான சட்ட ரீதியான தகைமை இல்லை என கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா தெரிவித்தார். இது குறித்து அதிகாரிகளுடன் பேச்சு நடத்த நான் தயார் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மட்டக்களப்பு தனியார் பல்கலைக்கழகத்தை அவசர சட்ட ஒழுங்குவிதிகளின் கீழ், அரசு பொறுப்பேற்க வேண்டும் என கல்வி மற்றும் மனித வளங்கள் அபிவிருத்தி தொடர்பான மேற்பார்வைக் குழு நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் பரிந்துரைத்தது.

குறித்த பல்கலைக்கழகம் தொடர்பில் தயாரித்துள்ள கண்காணிப்பு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு இந்தப் பரிந்துரை முன்வைக்கப்பட்டுள்ளது.

குறித்த பல்கலைக்கழகத்தின் தலைவரான முன்னாள் ஆளுநர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாவின் மகன் ஹிராஸ் ஹிஸ்புல்லா, கடந்த மார்ச் மாதம் 14ஆம் திகதி, கல்வி மற்றும் மனித வளங்கள் அபிவிருத்தி தொடர்பான மேற்பார்வைக் குழுவிற்கு அழைக்கப்பட்டிருந்தார்.

இதன்போது, குறித்த பல்கலைக்கழகத்தை நிறுவுவதற்காக, நிதி கிடைக்கப்பெற்ற முறைமை தொடர்பில் முரண்பாட்டுநிலைமை ஏற்பட்டுள்ளதாக அவரிடம் பெறப்பட்ட வாக்குமூலம் குறித்த விசாரணையில் தெரியவந்துள்ளதாக அந்தக் குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, மட்டக்களப்பு பல்கலைக்கழகத்துக்கு நிதி கிடைத்த முறைமை தொடர்பில் அயலுறவுத்துறை அமைச்சு மற்றும் சவூதி அரேபிய தூதரகம் ஆகிவற்றுடன் விரிவான விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

குறித்த பல்கலைக்கழகத்தை மட்டக்களப்பில் நிறுவுவதற்கு 35 ஏக்கர் காணி பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ள போதிலும், அதற்காக மேலும் 8 ஏக்கர் பரப்பு காணி, பலவந்தமாக பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. எவ்வாறிருப்பினும், இதன்போது தங்கள் தரப்பினர் எந்தவொரு தவறையும் இழைக்கவில்லை என கிழக்குமாகாண முன்னாள் ஆளுநர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் தெரிவித்துள்ளார். தற்போதுள்ள சட்டத்திற்கு அமைய தங்களது நிறுவனத்தைக் கைப்பற்ற முடியாது என்றும், அதற்கு எவ்வித உரிமையும் இல்லை என்றும் ஹிஸ்புல்லா குறிப்பிட்டுள்ளார். (ம)

# வீதி அபிவிருத்திக்கு 1 பில்லியன் டொலர்

## இலங்கைக்கு வழங்குகிறது சீனா

மத்திய அதிவேக நெடுஞ்சாலைத் திட்டத்தின், ஒரு பகுதியை நிறைவேற்றுவதற்கு, இலங்கை அரசுக்கு ஒரு பில்லியன் டொலர் கடனை வழங்க சீனா முன்வந்துள்ளது.

மத்திய அதிவேக நெடுஞ்சாலைத் திட்டத்தின் கடவத்த தொடக்கம் மீரிகம வரையான, பகுதியை அமைக்கவே, சீனா இந்தக் கடனுதவியை வழங்கவுள்ளது.

இந்த திட்டத்துக்கு 1.1 பில்லியன் டொலர் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. இதில், 85 வீதத்தை, சீனாவிடம் கடனாகப் பெறவும், 15 வீதத்தை, உள்நாட்டு வங்கிகளிடம் திரட்டவும் அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது. மத்திய அதிவேக நெடுஞ்சாலைத் திட்டத்தின் முதலாவது கட்டமாக, 37.09 கி.மீ தூரமுள்ள பகுதியை அடுத்த ஆண்டு ஜூன் மாதத்துக்குள் நிறைவு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. (ம)

# இத்தாலியில் இடம்பெற்ற விபத்தில் இலங்கையர் உயிரிழப்பு

கொழும்பு, ஜூன் 24

இத்தாலியில் இடம்பெற்ற விபத்தொன்றில் இலங்கையரொருவர் உயிரிழந்தார். நாத்தாண்டிய பிரதேசத்தை சேர்ந்த 40 வயதான துஷார சஞ்சீவ பெரேரா என்ற இலங்கையரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

விபத்தில் உயிரிழந்த இலங்கையர் பயணித்த மோட்டார் வாகனம் அதிவேக நெடுஞ்சாலையில் பயணித்துக்கொண்டிருந்த போது திடீர் கோளாறு ஏற்பட்டுள்ளது. இதனால் வீதியில் வாகனத்தை நிறுத்திய போது பின்னால் வந்த பேருந்துடன் மோதியமையினாலேயே விபத்து ஏற்பட்டது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம)

# திருகோணமலை துறைமுகத்தினது அபிவிருத்திக்கு 1 பில்லியன் யென்

கொழும்;பு, ஜூன் 24

திருகோணமலை துறைமுக அபிவிருத்திக்கு ஒரு பில்லியன் யென் நிதி உதவியை வழங்க ஜப்பானிய அரசு இணக்கம் தெரிவித்துள்ளது. தலைமை அமைச்சர் ரணில் விக்ரமசிங்கவுக்கும் ஜப்பான் தலைமை அமைச்சர் சின்சோ அபேயின் விசேட ஆலோசகர் ஹறொதொ ஹசுமிக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுக்களின் போதே இந்த இணக்கம் வெளியிடப்பட்டுள்ளது.

ஜப்பான் வரலாற்று நகரமான கியோதோ நகரத்தின் பாரம்பரிய உரிமைகளை பாதுகாத்து நவீனமயப்படுத்தியதுபோன்று வரலாற்று சிறப்புமிக்க கண்டி பிரதேசத்தை அபிவிருத்தி செய்வதற்கும் ஜப்பானின் உதவியை இலங்கை பெற்றுக்கொள்ளவுள்ளது.

இலங்கைக்கு நட்பு ரீதியான உதவிகளை வழங்குவதற்காக ஜப்பான் அரசு தயாராகவுள்ளதாகவும் திருகோணமலை துறைமுகத்தின் அபிவிருத்திப் பணிகளுக்கென ஒரு பில்லியன் யென் நிதி உதவியை வழங்க நடவடிக்கை எடுப்பதாகவும் ஹறொதொ ஹசுமி தெரிவித்துள்ளார்.

இதேவேளை சமூக, பொருளதார மற்றும் அரசியல் பிரச்சினைகள் குறித்தும் இந்து சமுத்திரத்தில் கப்பல் போக்குவரத்தின் சுதந்திரம் மற்றும் சமாதானத்தை நிலைநாட்டுவது தொடர்பாகவும் இரு தரப்புக் குமிடையில் கலந்துரையாடல் இடம்பெற்றிருந்தது. (ம)

# தனித்துச் செயற்படுவதன் மூலமே வேகமான அபிவிருத்தி சாத்தியம்!

## தலைமை அமைச்சர் இடித்துரைப்பு

கொழும்பு, ஜூன் 24

தனிக் கட்சி அரசாலேயே வேகமான அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ள முடியும் என்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். மொனராகலையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.



அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது: 'துட்டகைமுனு அரசனின் காலத்தில்போல அல்லாது, தற்போதுதான் அபிவிருத்தி என்றால் என்னவென்றே தெரிகிறது. அனைத்து இடங்களிலும் அபிவிருத்திப் பணிகளை நாம் சிறப்பாக மேற்கொண்டு வருகிறோம். நாம், ஊடகங்களை வைத்துக்கொண்டு அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதில்லை. கிராமத்துக்கு நேரடியாகச் சென்று பணிகளை மேற்கொள்வதே எமது இலக்காகும்.

தற்போது, பணி களை இன்னும் வேகப்படுத்தியுள்ளோம்.

சிலவேளைகளில் வாகனத்தில் இன்னொருவருடன் நாம் செல்லும்போது, வேகமாகச் செல்ல வேண்டாம், இந்தப் பக்கம் திருப்ப வேண்டாம் என்று கூறுவோம். ஆனால், தனியாக வாகனத்தை நாம் ஓட்டினால் எமது விருப்பம்போல செல்லலாம். தற்போது அந்த நிலைமைதான் ஏற்பட்டுள்ளது.

தனியாகத்தான் நாம் தற்போது வாகனத்தைச் செலுத்தி வருகிறோம். எமக்கு வேண்டிய வேகத்தில் நாம் வாகனத்தைச் செலுத்தலாம். உண்மையில் இரண்டு பேருடன் வாகனத்தில் பயணிப்பது என்பது மிகவும் கஷ்டமான காரியமாகும். அன்று எம்மைப் பலரும் குறைக்கூறினார்கள்.

இன்று எமது அபிவிருத்திப் பணிகளே அவற்றுக்கான பதிலைக் கூறியுள்ளன' - என்றார். (ம)



# கிழக்கிலும் சுவசெரிய


கொழும்பு, ஜூன் 24

கிழக்கு மாகாணத்தில் 'சுவசெரிய' என்ற இலவச நோயாளர் காவுவண்டிச் சேவையை ஆரம்பிப்பதற்காகத் தேவையான வாகனங்கள் வழங்கப்பட்டன.

இது தொடர்பான நிகழ்வு இந்திய உயர்ஸ்தானிகர் தரஞ்சித் சிங்சந்து தலைமையில் நேற்று திகாமடுல்லையில் இடம்பெற்றது. 27 வாகனங்கள் அவ்வாறு வழங்கப்பட்டன.

அமைச்சர் ஹர்ஷ டி சில்வாவின் கோரிக்கைக்கு அமைவாக இந்திய அரசால் இலங்கைக்கு நன்கொடையாக வழங்கப்பட்ட சுவசெரிய நோயாளர் காவுவண்டி இலவச சேவையின் இறுதிக்கட்ட அன்பளிப்பு இதுவாகும். (ம)

# போதை ஒழிப்புவாரம் ஆரம்பமானது நேற்று



கொழும்பு, ஜூன் 24

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் எண்ணக்கருவுக்கு அமைய முன்னெடுக்கப்படும் தேசிய போதைப்பொருள் ஒழிப்புவாரம் நேற்று ஆரம்பமாகியது.

நேற்றுத் தொடக்கம் எதிர்வரும் முதலாம் திகதிவரை பல்வேறு போதைப்பொருள் ஒழிப்பு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன. எதிர்வரும் 26ஆம் திகதி கடைப்பிடிக்கப்படும் போதைப்பொருள் பாவனை மற்றும் சட்டவிரோத கடத்தல்களுக்கு எதிரான பன்னாட்டுத் தினத்தை அடிப்படையாகக்கொண்டு தேசிய போதைப்பொருள்வாரம் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# அலங்கார திருவிழா

யாழ்ப்பாணம், ஜூன்.24

சாவகச்சேரி கச்சாய் சாலை கோயிற்குடியிருப்பு ஞான வீரபத்திரர் ஆலயத்தின் வருடாந்த அலங்காரத் திருவிழா இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறும் திருவிழாக் காலங்களில், எதிர்வரும் ஜூலை மாதம் மூன்றாம் திகதி புதன்கிழமை சங்கு முழுக்கு இடம்பெற்று, இரவு சுவாமி நகர் உலா இடம்பெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (9)

# அச்சம், சந்தேகம் இன்றி முதலீடு மேற்கொள்ளவும்

## தலைமை அமைச்சர் அழைப்பு

கொழும்பு, ஜூன் 24

அச்சம், சந்தேகம் இன்றி தேசிய மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு தற்போது நாட்டில் முதலீடுகளை மேற்கொள்வதற்கு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது என்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

மொனராகலையில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே தலைமை அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

முதலீட்டுக்குத் தடையாக இருந்த குறைவான செயல்திறன் கொண்ட நிறுவனங்களின் மறுவாழ்வு சட்டத்தில் இருந்த குறைபாடுகள் நீக்கப்பட்டுள்ளன. சம்பந்தப்பட்ட சட்டத்தில் தனிப்பட்ட முதலீட்டாளர்களின் வர்த்தகத்தை அரசுக்கு சுவீகரிப்பதற்கு சந்தர்ப்பம் இருந்தது. இதனால், இலங்கையில் முதலீட்டை மேற்கொள்வதற்கு முதலீட்டாளர்கள் அச்சம் கொண்டிருந்தனர்.

தற்போது அந்த நிலை இல்லாமல் போயுள்ளது - என்றார். (ம)

# இலவச உணவு வழங்கும் முஸ்லிம் அமைப்புக்கு எதிராக விசாரணை தேவை

## காமினி லொக்குகே கோரிக்கை



கொழும்பு, ஜூன் 24

கொழும்பு தேசிய மருத்துவமனை, களுபோவிலா மற்றும் மஹரகம புற்றுநோய் மருத்துவமனைகளில் சிகிச்சைக்கு வரும் மக்களுக்கு இலவச உணவை வழங்கும் முஸ்லிம் அமைப்பு தொடர்பாக உடனடியாக விசாரணை நடத்துமாறு நாடாளுமன்ற உறுப்பினர் காமினி லொக்குகே கோரிக்கை விடுத்துள்ளார்.

நான்கு ஆண்டுகளுக்கும் மேலாக அவர்கள் எந்த அடிப்படையில் இந்த உணவுகளை இலவசமாக வழங்குகிறார்கள்? இது ஒரு பிரச்சினையான விடயம் என்றும் கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

'இந்த இலவச உணவு அமைப்பு எந்த நோக்கத்துக்காக உதவுகிறது என்பது இப்போது சந்தேகமாக உள்ளது. இந்த உணவுகளிலிருந்து பெண்கள் பாதிப்புக்குள்ளாகுகிறார்களா என்ற சந்தேகமும் உள்ளது. அவர்களின் ஆர்வம் என்ன? சுகாதார அதிகாரிகள் உடனடியாக இவற்றைத் தேட வேண்டும். கிளினிக்கிற்குச் சென்று எங்கள் பொருள்களை சாப்பிடுங்கள் என்று கூறுகிறார்கள். அவர்கள் கோழி, காய்கறிகள், பருப்பு மற்றும் பலவற்றை பரிமாறுகிறார்கள். இந்த விடயத்தை ஆராய உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு அரச தலைவரைக் கேட்டுக்கொள்கிறேன்' -என்றார். (ம)

## ஈஸ்டர் தாக்குதல் விவகாரம்

# நீதியான விசாரணை இடம்பெறாவிட்டால் அரசுபல்வேறு விளைவுகளைச்சந்திக்கும்

## வரகாகொட ஸ்ரீ ஞானரத்ன தேரர் இவ்வாறு எச்சரிக்கை விடுத்தார்



கொழும்பு, ஜூன் 24

உயிர்த்த ஞாயிறு குண்டு தாக்குதல்களுடன் தொடர்புடைய உண்மையான குற்றவாளிகளைக் கண்டறிந்து அவர்களுக்கு உரிய தண்டனை வழங்குவதற்கான நடவடிக்கையை முன்னெடுக்காவிட்டால் அரசு மக்களின் அதிருப்தியை எதிர்கொள்ள வேண்டிய நிலைமை ஏற்படும் என்பதில் சந்தேகமில்லை என்று அஸ்கிரிய பீட மகாநாயக்க வரகாகொட ஸ்ரீ ஞானரத்ன தேரர் தெரிவித்தார்.

தான் முஸ்லிம் மக்களுக்கு எதிராக கருத்துக்களை தெரிவித்ததாக வெளியாகிய செய்திகளுக்கு மறுப்பு தெரிவிப்பதற்காக அவர் விடுத்த சிறப்பு அறிவிப்பிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அந்த அறிவிப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

அண்மையில் என்னால் சொல்லப்பட்ட போதனையை சிலர் தவறாகப் புரிந்து கொண்டு முரண்பட்ட கருத்துக்களை வெளியிட்டிருந்தனர். அதன் போது நான் ஐக்கிய தேசியக் கட்சி குறித்தும், முஸ்லிம் மக்கள் குறித்தும் கூறிய விடயங்கள் மக்கள் மத்தியில் அதிகம் பேசுபொருளாகியுள்ளன.

எமக்கு அரசின் மீதோ, முஸ்லிம் மக்கள் மீதோ எந்தக் கோபமும் கிடையாது. நாட்டில் சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் நீண்ட காலமாக ஒற்றுமையாக வாழ்ந்து வந்தனர். எதிர்காலத்திலும் இதே போன்று அனைவரும் ஒற்றுமையுடன் வாழ வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

இதற்கான உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டியது அரசின் பொறுப்பாகும். மதகுருமார்கள் என்ற ரீதியில் நாட்டையும், மக்களையும், ஆகமங்களையும் பாதுகாப்பதை மட்டுமே எம்மால் செய்ய முடியும். எம்மிடம் எவ்வித கட்சி பேதமோ அல்லது மதபேதமோ கிடையாது - என்றார். (ம)

# சமல் வேட்பாளரானாலும் எதிரணி ஆதரவு வழங்கும்!

கொழும்பு, ஜீன் 24
பொது எதிரணியின் அரச தலைவர் வேட்பாளர் சமல் ராஜபக்சவாக இருந்தாலும் எமது முழுமையான ஆதரவை வழங்குவோம். அதே போல் கோத்தபய ராஜபக்சவை அரச தலைவர் வேட்பாளராக களமிறக்குவதென்றால் எம்மிடம் வெளிப்படையாக அதனை தெரிவிக்க வேண்டும். கோத்தபய ராஜபக்சவுடன் பேசிப் பார்த்து எமது நிலைப்பாட்டுக்கு ஏற்றால்போல் இருந்தால் அவரை ஆதரிப்போம் என்று எதிர்க் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

சிறி லங்கா பொதுமக்கள் முன்னணியின் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்சவா அல்லது சமல் ராஜபக்சவா என்ற வாதம் தொடர்பாக கூட்டு எதிரணியின் மூத்த உறுப்பினர்களான வாசுதேவ நாணயகார, தினேஷ் குணவர்தன, குமார் வெல்கம ஆகியோரிடம் கேட்கப்பட்ட போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

இன்றுள்ள அரசியல் நெருக்கடிகள் மற்றும் நாட்டின் பாதுகாப்பற்ற சூழலில் உடனடியாக தேர்தல் ஒன்றுக்கு சென்று மாற்று அரசு ஒன்றை உருவாக்க வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும். அரச தலைவர் மற்றும் தலைமை அமைச்சர் இருவரும் ஒருவருக்கு ஒருவர் குற்றங்கூறிக்கொண்டு தனிப்பட்ட அரசியல் பழிவாங்கல்களில் ஈடுபட்டு வருகின்றனர். இறுதியாக நாட்டுக்கே பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இந்த ஆட்சியாளர்களை நீக்கி மீண்டும் எமது அரசு ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். (எ)



# மக்களைப் பாதுகாக்கக் கூடிய வேட்பாளரை களமிறக்குவோம்

## மகிந்த ராஜபக்ச கூறுகின்றார்

கொழும்பு, ஜீன் 24
நாட்டை நேசிக்கின்ற, மக்களுக்குப் பாதுகாப்பை வழங்க முடியுமான தேர்தலை வெற்றிக் கொள்ள முடியுமான ஒரு வேட்பாளரை முன்னிறுத்துவோம் என்று எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

கண்டி தலதா மாளிகைக்கு நேற்றுச் சென்ற எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச வழிபாடுகளில் ஈடுபட்டார். மகாநாயக்க தேரர்களைச் சந்தித்துத் தற்போதைய அரசியல் நிலைப்பாடு தொடர்பாகவும் கலந்துரையாடியுள்ளார்.

அதன்பின்னர் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் அரச தலைவர் தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் சிறி லங்கா பொது ஜன பெரமுன ஆகியன இணைந்து ஒரு வேட்பாளரை மாத்திரம் களமிறக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ)

# ஷாபி மீதான குற்றச்சாட்டை இயலுமானால் நிரூபியுங்கள்

## அமைச்சர் ராஜித தெரிவிப்பு

கொழும்பு, ஜீன் 24
மருத்துவர் ஷாபிக்கு எதிராகக் கூறப்படும் குற்றச் சாட்டுக்களில் முடியுமானால், ஒன்றை நிரூபித்துக் காட்டுங்கள். அவ்வாறு செய்தால் அவர் மீது உடனடியாக நடவடிக்கை எடுப்பேன் என்று சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார். தொலைக்காட்சி அலைவரிசை ஒன்றில் நேற்று நடைபெற்ற நிகழ்வில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
மருத்துவர் ஷாபிக்கு எதிராக விசாரணைகளை மேற்கொள்பவர்களுக்கு, அச்சுறுத்தல் விடுத்தவர்கள், மருத்துவமனைப் பணிப்பாளர்களும், டீ.ஐ.ஜிக்கள் மற்றும் ரத்ன தேரர் ஆகியோர்களே ஆவார்கள். நாம் அவருக்கு எதிராகவோ, ஆதரவாகவோ ஒரு தொலைபேசி அழைப்பை மேற்கொண்டுள்ளேனா என்பதை முடிந்தால் நிரூபித்துக் காட்டுங்கள். என்றார். (எ)

# கருங்குளவிகள் கொட்டி மாணவர்கள் பாதிப்பு

சாவகச்சேரி, ஜீன் 24
மரத்தில் இருந்து வீழ்ந்த பனையோலைக்குள் இருந்து வெளிவந்த கருங்குளவிகள் அயலில் இருந்த தனியார் கல்வி நிலையத்துக்குள் புகுந்து மாணவர்களைக் கொட்டின.

இந்தச் சம்பவம் நேற்று மாலை சாவகச்சேரி கச்சாய் பிரதேசத்தில் நடந்துள்ளது. அதில் பாதிக்கப்பட்ட 9 மாணவர்கள் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். (எ-9)

## 18,19 ஆவது....

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
எமது அரசுக்கு நான்கரை வருட காலம் முடிந்து இன்னும் நான்கு மாதங்களில் தேர்தல் வரவுள்ளது. நான்கரை வருடங்களில் நாம் நன்றாக நடந்தோமா நம்மால் தவறவிடப்பட்ட இடங்கள் என்ன என்பதை நாம் தேடிப்பார்க்க வேண்டும் .

இந்த நான்கரை வருடங்களில் நாம் செயற்பட முடியாமைக்கு பிரதான காரணமாக எதுவும் இருக்குமானால் அது 19ஆவது திருத்தம் தான். 19ஆவது திருத்தம் வந்திராவிடில் இது ஒரு சிறந்த அரசாக இருக்கும். நானும், தலைமை அமைச்சரும் இரண்டு பக்கங்களுக்கு இழுபடுகின்றோம் என்று மக்கள் மத்தியில் ஒரு குற்றச்சாட்டு உள்ளது. அந்த நிலைமை 19ஆவது திருத்தத்தால்தான் ஏற்பட்டது.

18ஆவது திருத்தம் மகிந்த கொண்டு வந்தார். அது கட்டளையிடும் வகையிலான ஒரு திருத்தம்.

19 ஆவது திருத்தச் சட்டம் இல்லாமல் இருந்திருந்தால் கடந்த நான்கரை ஆண்டுகளில் நாட்டை இதை விடவும் விரைவாக முன்னேற்றமடையச் செய்திருக்கலாம். நாம் எமது கையால் நடந்த தவறு என்ன என்பதை விளங்கி, அதை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

நாடாளுமன்றத்தில் 225 பேரில் 215 பேரே 19 ஆவது திருத்தச் சட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்தனர். 19 ஆவது திருத்தச் சட்டத்தை ஆக்கிய நிபுணர்கள் கூட இவ்வாறு நடைபெறும் என எதிர்பார்க்கவில்லை.

எதிர்காலத்தில் இந்த நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டுமாக இருந்தால், நபர்கள் யார் என்பது தொடர்பில் பிரச்சினையில்லை. அரசமைப்பில்தான் பிரச்சினை உள்ளது. அரசமைப்பில் உள்ள 18ஆவது மற்றும் 19ஆவது திருத்தச் சட்டங்களை நீக்கிய நாளில் இருந்து, மக்கள் எதிர்பார்க்கும் சிறந்த நாட்டை உருவாக்கலாம். அப்போதே சிறந்த பெறுபேற்றை மக்களுக்கு எடுத்துக் காட்ட முடியுமாக இருக்கும் - என்றார். (எ)

## கல்முனைப்...

முயர்த்த வேண்டும் என்று வலியுறுத்தி நடத்தப்பட்ட போராட்டத்தை கல்முனை சுபத்ராராமய விகாராதிபதி ரன்முத்துகல சங்கரத்ன தேரர் முடித்துவைத்து உரையாற்றினார்.

கல்முனை வடக்கு உப பிரதேச செயலகத்தைத் தரமுயர்த்துவதற்கு கூடிய விரைவாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என அத்துரலிய ரத்தன தேரர், ஞானசார தேரர் போன்றோராலும், அரச தரப்பினராலும் வழங்கப்பட்ட உறுதிமொழிகளை ஏற்றுக்கொண்டே தமது உண்ணாவிரதப் போராட்டம் நிறைவு செய்யப்படுகின்றது என சங்கரத்ன தேரர் தனது உரையில் தெரிவித்தார்.

தமது கோரிக்கையில் தொடர்ந்தும் உறுதியாக இருக்கின்றேன் என்றும், கூறப்பட்ட காலப்பகுதியினுள் கல்முனை வடக்கு உப பிரதேச செயலகம் தரமுயர்த்தப்படாவிட்டால் தமது போராட்டம் மீண்டும் மிகப்பெரியளவில் வெடிக்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, கல்முனைப் பிரதேச சபையை தரமுயர்த்த வேண்டும் என்று வலியுறுத்தி நடத்தப்பட்ட இந்த உண்ணாவிரதப் போராட்டம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டிருப்பதால், தாம் முன்னெடுத்துவந்த பட்டினிப்போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவருகின்றோம் என்று சிறி லங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவரும் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எச்.எம்.எம்.ஹரீஸ் நேற்று அறிவித்தார். இணக்கமான தீர்வு எட்டப்படும் வரை, தாம் விழிப்பாக இருப்பதாகவும் அவர் கூறினார். இறுதியாக துஆப் பிரார்த்தனையுடன் போராட்டம் நேற்று நிறைவுக்குக் கொண்டுவரப்பட்டது. (எ-22)

## அரசதலைவர்...

கருத்து வெளியிடக்கூடாது என்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமங்க கட்சியினருக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

ஆனால் அமைச்சர்களான தலதா அத்துக்கோரள, சந்திராணி பண்டார, அஜித் பி பெரேரா ஆகியோர், சஜித் பிரேமதாசவே தமது கட்சியின் அரச தலைவர் வேட்பாளர் என அறிவித்து வருகின்றனர். அதற்கு ஐ.தே.கவின் உப தலைவரான ரவி கருணாநாயக்க கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளார். இத்தகைய அறிவிப்புகள் கட்சியின் கூட்டுப் பொறுப்பை மீறும் செயலாகும் என்றும், தந்தையில் பெயரை வைத்து அரசியல் நடத்தும் காலம் மலையேறிவிட்டது என்றும் அவர் காட்டமாகக் கருத்து வெளியிட்டு வருகின்றார்.

அதேவேளை, அரச தலைவர் வேட்பாளர் தொடர்பில் ஐக்கிய தேசியக்கட்சி இன்னும் இறுதி முடிவை எடுக்கவில்லை என அந்தக் கட்சியின் பொதுச்செயலர் அமைச்சர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

இந்த நிலைப்பாடுகளால் அரச தலைவர் வேட்பாளர் தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சிக்குள் பெரும் முரண்பாடு ஏற்பட்டுள்ளது என்று கொழும்பு அரசியல் வட்டாரங்கள் கூறுகின்றன. (எ)

## தாக்குதல்...

தினமும் நாட்டில் நடக்கும் வீதி விபத்துக்களைப் போன்றே தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களுடன் தொடர்புடைய நடவடிக்கைகளைக் கையாள்கின்றனர்.

இவ்வாறு குற்றஞ்சாட்டியுள்ளார் பொது பல சேனா அமைப்பின் பொதுச் செயலர் கலகொட அத்தே ஞானசார தேரர்.

பயங்கரவாதத் தாக்குதலுக்கு இலக்கான நீர்கொழும்பு கட்டுவப்பிட்டியத் தேவாலயத்துக்கு நேற்று அவர் சென்றிருந்தார். அதன் பின்னர் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
மீண்டும் இந்த நாட்டில் பொது மக்களை இலக்கு வைத்து இது போன்றதொரு மிலேச்சத்தனமான அடிப்படைவாத தாக்குதல்கள் இடம்பெற இடமளிக்கப்பட மாட்டாது என்பதை பொறுப்புடன் சபதமாகத் தெரிவிக்கின்றேன். உயிரிழந்த அப்பாவி உயிர்கள் முக்தியடைவதற்கு இந்த தாக்குதல்களை மேற்கொண்ட அடிப்படைவாதிகள் முற்றாக இல்லாதொழிக்கப்பட வேண்டும்.

இவ்வாறான அடிப்படைவாதிகள் நிச்சயமாக இல்லாதொழிக்கப்படுவார்கள் என்று உறுதியளிக்கின்றேன். அதற்கு அனைத்து மக்களதும் ஒத்துழைப்பையும் கோருகின்றோம். இன, மத பாகுபாடின்றி அனைவரும் ஒன்றிணைந்து இவர்களை நாட்டிலிருந்து துடைத்தெறிய வேண்டும் - என்றார். (எ)

## 14 ஆண்டுகள்...

இலங்கையின் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் கொலை தொடர்பாக இவர் 2005ஆம் ஆண்டு கொழும்பில் வைத்துக் கைது செய்யப்பட்டார். இது தொடர்பான வழக்கு நடைபெற்று வரும் நிலையில் கடந்த 14 ஆண்டுகளாக அவர் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார்.

சிறையில் தொடர்ச்சியாக அடைக்கப்பட்டிருந்த அவர் சுகவீனம் காரணமாக கொழும்பு தேசிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில், நேற்றுமுன்தினம் இரவு அவர் உயிரிழந்தார். அவரது உடல் கொழும்பு தேசிய மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது ஏ்னறு தெரிவிக்கப்பட்டது. (எ-105)

## கிரிந்த...

நடந்துள்ளது. கடலில் நீராடச் சென்ற சமயமே இவர்கள் நீரில் மூழ்கியுள்ளனர்.

ருவான் விஜேசூரிய (வயது-42), சகாலா (வயது-8), நதீஷா (வயது-5) ஆகியோரே உயிரிழந்துள்ளனர். இவர்கள் ஹற்றனைச் சேர்ந்தவர்களாவர். உயிரிழந்தவரின் மனைவி நுவரெலியாயில் உள்ள தனியார் வங்கியில் ஒன்றில் பணிபுரிகின்றார் என்றும், கடந்த வெள்ளிக்கிழமை இவர்கள் யால பகுதிக்குச் சுற்றுலா சென்றிருந்தனர் என்றும் உறவினர்கள் கூறுகின்றனர்.

தெபரவவ மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட தாய் மேலதீக சிகிச்சைக்காக அம்பாறை மருத்துவமனைக்கு உலங்குவானூர்தி மூலம் மாற்றப்பட்டுள்ளார். அவர் ஆபத்தான நிலையில் உள்ளார் என்று மருத்துவமனைத் தகவல்கள் கூறுகின்றன.

இந்தச் சம்பவம் தொடர்பில் கிரிந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

## உணவு...

யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனைக்கு குழந்தை மாற்றப்பட்டது.

நேற்றுமுன்தினமும் பிற்பகல் 4 மணிக்கு வலிப்பு ஏற்பட்ட நிலையில் சிகிச்சை வழங்கப்பட்டது. எனினும் மாலை 6.15 அளவில் குழந்தை உயிரிழந்தது.

உடற்கூற்றுப் பரிசோதனை நடத்தியபோது சுவாசக் குழாயில் உணவுத் துணிக்கை சென்றதால் சுவாசம் தடைப்பட்டு உயிரிழப்பு ஏற்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் நேற்று இறப்பு விசாரணை நடத்தி சடலத்தை பெற்றோரிடம் ஒப்படைத்தார். (க)

## ஈரான் – அமெரிக்கா மோதல் போக்கு

# உச்சம் அடைகின்றன முரண்பாடுகள் ஈரான் மீது மேலும் தடைகள் விதிப்பு



வோஷிங்டன், ஜூன் 24

ஈரான் - அமெரிக்கா இடையே மோதல் போக்கு நீடித்து வரும் சூழலில், ஈரான் அணு ஆயுதங்களைப் பெறுவதைத் தடுக்கும் நோக்கில் அந்த நாட்டின் மீது இன்னமும் தடைகள் விதிக்கப்படும் என்று அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்தார்.

ஒப்பந்தங்களின்படி ஏற்றுக்கொள்ளப்பட்ட அளவை விடத் தங்களின் அணு ஆயுதத் திட்டத்தை அதிகரிக்கப்போவதாக ஈரான் கூறியதன் பிறகு ட்ரம்பின் இந்த அறிவிப்பு வெளியாகியது.

அத்தோடு ஈரான் மீது தாக்குதல் நடத்துவதற்கு இராணுவத்துக்கு உத்தரவிட்டு அதைக் கடைசி நிமிடத்தில் நிறுத்துமாறு அறிவித்தமைக்குக் காரணம்என்னஎன்பதையும்ட்ரம்ப்கூறினார்.

எங்கள் ஆளில்லா வானூர்தியை ஈரான் சுட்டு வீழ்த்தியதைய டுத்து நாங்கள் 3 இடங்களில் தாக்குதல் நடத்தத் திட்டமிட்டோம்.

அதன்பின்னர் இராணுவ உயர் அதிகாரியிடம் இதில் எத்தனை மக்கள் இறப்பார்கள் எனக் கேட்டேன்.

அதற்கு அவர் இதில் 150 பேர் சாவடைவார்கள் எனக் கூறினார்.

தாக்குதல் நடத்த 10 நிமிடங்களே இருந்த நிலையில், உடனடியாக அதை நிறுத்த உத்தரவிட்டேன். இந்த விவகாரத்தில் நான் அவசரப்படப்போவதில்லை. ஏனென்றால் எங்கள் இராணுவம்தான் உலகிலேயே தலைச் சிறந்த இராணுவம்.

ஈரான், அமெரிக்காவுக்கு எதிராகவோ அல்லது மற்ற நாடுகளுக்கு எதிராகவோ அணுஆயுதங்களைவைத்திருக்க முடியாது என்று தன்னுடைய கீச்சகப் பக்கத்தில் பதிவிட்டார் அவர்.

**பின்னணி**

ட்ரம்ப் அதிபரானதில் இருந்து ஈரானுடனான அணுசக்தி ஒப்பந்தத்தை முறித்துக்கொண்டது அமெரிக்கா. ஈரானுடன் மோதல் போக்கைக் கடைப்பிடிக்கிறது. ஈரானுக்கு எதிராகப் பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளது.

அமெரிக்காவின் மிரட்டலுக்கு அஞ்சமாட்டோம் என்று கூறுகிறது ஈரான். இந்த நிலையில் ஐக்கிய அரபு இராச்சியத்தின் புஜைராதுறைமுகத்தில் நங்கூரமிட்டிருந்த எண்ணெய்க் கப்பல்கள் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இந்தத் தாக்குதலுக்கு ஈரானே காரணம் என்று கூறுகிறது அமெரிக்கா. வளைகுடாப் பகுதியில் படைகளைக் குவித்து வருகிறது அமெரிக்கா.

அமெரிக்காவின் ஆளில்லா உளவு வானூர்தி தங்கள் நாட்டு எல்லைக்குள் நுழைந்ததாகக் கூறி அதைச் சுட்டு வீழ்த்தியது ஈரான்.

அது பன்னாட்டு எல்லையில் பறந்த போது ஈரான் சுட்டுவிட்டதாகக் கூறுகிறது அமெரிக்கா.



# கம்போடியாவில் இடிந்தது கட்டடம்

*18 பேர் பரிதாபச் சாவு*

ப்னோம் பென்ந், ஜூன் 22

தென்கிழக்கு ஆசிய நாடான கம்போடியாவின் தென்மேற்குப் பகுதியில் உள்ள பிரபல நகரமான சிஹானோக்வில்லிப் பகுதியில் 7 மாடிகளைக் கொண்ட கட்டடம் ஒன்று இடிந்து விழுந்து தரைமட்டமானது. சீனாவைச் சேர்ந்த ஒரு நிறுவனத்துக்குச் சொந்தமான குறித்த கட்டடத்தில் கட்டுமாணப் பணிகள் நடந்துகொண்டிருந்தபோதே அது இவ்வாறு இடிந்து விழுந்து தரைமட்டமானது. இதனால் 18 பேர் சாவடைந்தனர். இடிபாடுகளுக்குள் சுமார் 50 தொழிலாளர்கள் சிக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. 20க்கும் அதிகமானவர்கள் படுகாயங்களுடன் மீட்கப்பட்டனர். 80 சதவீதக் கட்டடப் பணிகள் நிறைவடைந்திருந்த நிலையில் முழுக் கட்டடமும் சில நொடிகளில் நொருங்கி விழுந்து இவ்வாறு தரைமட்டமானமை அங்கு விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.



## மருத்துவமனைக்குப் பின்னால் சாக்குகளில் மனித எலும்புகள்

*இந்தியாவில் சம்பவம்*

இந்தியாவின் பிகார் மாநிலம் முசாபர்பூரில் மூளைக் காய்ச்சலால் நூற்றுக்கும் மேற்பட்ட குழந்தைகள் சாவடைந்த ஸ்ரீ கிருஷ்ணா மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் பின்புறமாக மனித எலும்புக் கூடுகள் பல நேற்று முன்தினம் கண்டெடுக்கப்பட்டன.

இந்த எலும்புக்கூடுகள் குறித்து அறிக்கை அளிக்குமாறு அந்த மாவட்டத்தின் ஆட்சியர் அலோக் ரஞ்சன் குறித்த மருத்துவமனை நிர்வாகத்துக்கு உத்தரவிட்டார். இது குறித்து விசாரணை நடத்துவதற்கு மாநில சுகாதாரத் துறையும் உத்தரவிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இது குறித்து மேலும் தெரியவருவதாவது:

பீகார் பிரதேசத்தில் பரவிவரும் மூளைக் காய்ச்சலால் குறித்த மருத்துவமனையில் இதுவரை 128 குழந்தைகள் சாவடைந்துள்ளனர். அங்கு பொலிஸார் சோதனை செய்யச் சென்றனர். அவர்களுடன் மருத்துவமனை நிர்வாகிக ளும் சென்றனர்.

மருத்துவமனையின் பின்னால் இருந்த காட்டுப் பகுதியில் கிடைத்த சாக்குகளில் பல எலும்புக்கூடுகள் இருந்தன. அங்கு அவர்களால் கண்டெடுக்கப்பட்ட இரண்டு உடல்கள் கருகிய நிலையில் இருந்தன. பொறுப்பு ஏற்பதற்கு உறவினர்கள் இல்லாத இறந்தவர்களின் உடல்கள் அங்கு எரிக்கப்பட்டதாக முதல்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

## எங்கள் மீது ஒரு குண்டு பாய்ந்தால்கூட அமெரிக்க உடைமைகள் அழிக்கப்படும்

*ஈரான் எச்சரிக்கை*



தெஹ்ரான், ஜூன் 24

எங்கள் நாட்டின் மீது ஒரு குண்டு பாய்ந்தால்கூட மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள அமெரிக்கா மற்றும் அதன் நட்பு நாடுகளுக்குச் சொந்தமான உடைமைகள் தீக்கி ரையாகும் என ஈரான் இராணுவம் எச்சரித்தது.

ஈரான் - அமெரிக்கா இடையே மோதல் போக்கு அதிகரித்து வரும் நிலையில் ஈரானின் தென் பகுதியில் உள்ள ஹோர்மஸ்கான் பிரதேசத்துக்குள் புகுந்த அமெரிக்காவின் ஆளில்லா உளவு வானூர்தியைச் சுட்டு வீழ்த்தியதாக ஈரான் தெரிவித்தது. அந்த வானூர்தி பன்னாட்டு எல்லையில் தான் பறந்தது என்று தெரிவித்தது அமெரிக்கா. தொடர்ந்து அமெரிக்க அதிபர் ட்ரம்ப் ஈரான் மீது தாக்குதல் நடத்த உத்தரவிட்டு அந்த உத்தரவைக் கடைசி நிமிடத்தில் கைவிட்டார்.

இந்த நிலையில்தான் எங்கள் நாட்டின் மீது ஒரு குண்டு பாய்ந்தால்கூட மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள அமெரிக்கா மற்றும் நட்பு நாடுகளுக்குச் சொந்தமான உடைமைகள் தீக்கிரையாகும் என ஈரான் நாட்டின் இராணுவத் தளபதியின் செய்தித் தொடர்பாளர் பிரிகேடியர் ஜெனரல் அபோல்பஸல் ஷேகர்ச்சி எச்சரித்தார்.



ரஷ்யாவில் நகரம் ஒன்றுக்குள் புகுந்து அந்த நகரம் முழுதும் சுற்றித் திரிகின்ற பனிக்கரடி அங்குள்ள குப்பைத் திடல் ஒன்றுக்குள் உணவு தேடுகிறது. பருவ நிலை மாற்றத்தால் ஏற்பட்ட நிலை இதுவெனச் சூழலியவாளர்கள் கண்டனம் தெரிவிக்கின்றனர்.

# அமெ.வின் பிரபல பெண் எழுத்தாளர் ட்ரம்ப் மீது வன்புணர்வு முறைப்பாடு



வோஷிங்டன், ஜூன் 24

அமெரிக்க அதிபர் ட்ரம்ப் (வயது 73), மிகப்பெரிய வர்த்தகர் பணக்காரர். 2016ஆம் ஆண்டு அமெரிக்க அதிபர் தேர்தலில் போட்டியிட்டபோது அவர்மீது அடுக்கடுக்காகப் பாலியல் முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டன. 12க்கு மேற்பட்ட பெண்கள் ட்ரம்புக்கு எதிராக முறைப்பாடளித்தனர்.

அவற்றை மறுத்த ட்ரம்ப் அந்தத் தேர்தலில் வெற்றி பெற்று அமெரிக்க அதிபர் ஆனார். அடுத்த ஆண்டு நடக்கவிருக்கின்ற அதிபர் தேர்தலில் இரண்டாவது தடவையாகவும் தான் போட்டியிடப்போவதாக ட்ரம்ப் சில தினங்களுக்கு முன்னர் புளோரிடா மாகாணத்தில் நடந்த பிரமாண்ட பொதுக்கூட்டத்தில் அறிவித்தார். தனது பரப்புரையைய்யும் ஆரம்பித்து வைத்தார். இந்த நிலையில், ட்ரம்ப் மீது பெண் எழுத்தாளரும், பத்திரிகையாளருமான ஒருவர் வன்புணர்வு முறைப்பாட்டை முன்வைத்தார்.

ஜீன் கேரல் (வயது 75) என்ற அந்தப் பெண் எழுத்தாளர் இதுபற்றி 'நியூயோர்க்' பத்திரிகையில் கட்டுரை ஒன்றை எழுதி வெளியிட்டுள்ளார். இவரது குற்றச்சாட்டு அமெரிக்காவில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. ஆனால் இந்தக் குற்றச்சாட்டையும் ட்ரம்ப் மறுத்தார்.

இதுபற்றி அவர் கூறும்போது,


"என் வாழ்நாளில் நான் இந்தப் பெண்ணைச் சந்தித்ததே இல்லை. இந்தப் பெண் புதிய புத்தகம் ஒன்றை விற்க முயற்சிக்கிறாள்.

அதுதான் அவளது நோக்கம். இது கற்பனைக் கதைப் பிரிவில் வைத்து விற்க வேண்டியதாகும்" எனக் குறிப்பிட்டார்

எதியோப்பியாவில் பதற்றம்

# இராணுவத் தளபதியும் ஆளுநரும் சுட்டுக் கொலை






அடிஸ் அபாபா,ஜூன் 24
எதியோப்பியாவின் இராணுவத் தளபதியும் அம்ஹாரா மாகாணத்தின் ஆளுநரும் சுட்டுக்கொல்லப்பட்டனர். எதியோப்பியாவின் தலைமை அமைச்சராக அபிய் அஹமத் கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் பதவியேற்றார். இதையடுத்து அங்குள்ள அம்ஹாரா உள்ளிட்ட சில பகுதிகளில் வன்முறை அதிகரித்தது. ஆட்சியைக் கவிழ்க்கும் முயற்சியிலும் சிலர் ஈடுபட்டுள்ளனர். இந்த நிலையில் அங்கு நேற்று அபிய் அஹமத் தலைமையிலான அரசுக்கு எதிராகப் போராட்டம் நடைபெற்றது. இதில் வன்முறை வெடித்தது. இதையடுத்த சிலமணி நேரத்தில் எதியோப்பியாவின் இராணுவத் தளபதி மேகொன்னேன், அவரது வீட்டில் மெய்க் காப்பாளரால் சுட்டுக்கொல்லப்பட்டார். இதேபோல், அம்ஹாரா மாகாண ஆளுநரும் சுட்டுக்கொல்லப்பட்டார். இதனால் எதியோப்பியாவைப் பதற்றம் சூழ்ந்துள்ளது. இதற்கு முன்னாள் இராணுவத் தளபதி தான் காரணம் என ஆளும்கட்சியினர் குற்றம் சாட்டியுள்ளனர்.





# மகாராஷ்டிராவில் 12ஆயிரம் விவசாயிகள் உயிர்மாய்ப்பு!

இந்தியாவின் மகாராஷ்டிரா மாநிலத்தில் 2015ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டுவரையான காலப்பகுதியில் 12 ஆயிரத்து 21 விவசாயிகள் தமது உயிரை மாய்த்து இறந்து கொண்டுள்ளதாக அந்த மாநிலத்தின் அரசு தெரிவித்தது.

அங்கு நடந்த சட்டப்பேரவைக் கூட்டத்தொடரில் கேள்வி ஒன்றுக்குப் பதில் அளித்த சீரமைப்பு மற்றும் மறுவாழ்வுத்துறை அமைச்சர் சுபாஷ் தேஷ்முக் இவ்வாறு குறிப்பிட்டார்.

கடந்த 3 ஆண்டுகளில் மகாராஷ்டிரா மாநிலத்தில் 12 ஆயிரத்து 21 விவசாயிகள் தவறான முடிவை எடுத்துத் தமது உயிரை மாய்த்துள்ளனர்.




இந்த ஆண்டின் முதல் 3 மாதங்களில் மட்டும் 610 விவசாயிகள் உயிரை மாய்த்துள்ளனர் என்று அவர் இதுகுறித்து மேலும் குறிப்பிட்டார்.

மகாராஷ்டிரா மாநிலத்தில் தொடர்ந்து ஆட்சியமைக்கின்ற பா.ஜ.க. தலைமையிலான அரசின் முதல்வராக தேவேந்திர பட்நாவிஸ் இருந்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஈரான் விவகாரம் அமெ. –சவூதி ஆலோசனை

வோஷிங்டன்,ஜூன் 24
ஈரான் விவகாரம் தொடர்பாக அமெரிக்க அதிபர் ட்ரம்ப்பும் சவூதி அரேபியாவின் இளவரசர் முகமது பின் சல்மானும் தொலைபேசியில் உரையாடியதாகச் செய்தி வெளியானது. ஈரானுடனான சமீபத்திய பிரச்சினை, மத்திய கிழக்கு நாடுகளில் ஸ்திரத் தன்மையை ஏற்படுத்துவதற்குச் சவூதியின் பங்கு மற்றும் உலக அளவில் எண்ணெய்ச் சந்தை என்பன குறித்து இந்த உரையாடல் அமைந்ததாகப் பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. அமெரிக்காவின் ஆளில்லா வானூர்தியை ஈரான் சுட்டு வீழ்த்தியதால், அமெரிக்கா -ஈரான் இடையே பதற்றம் அதிகரித்துள்ள நிலையில் இந்த உரையாடல் நிகழ்ந்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.





# மனிதர்களை விண்ணுக்கு அனுப்பவிருக்கிறது இஸ்ரோ

2022ஆம் ஆண்டு ஒகஸ்ட் 15ஆம் திகதியன்று ககன்யான் விண்கலம் மூலம் மனிதன் விண்ணுக்கு அனுப்பப்படுவான் என இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிலையமான இஸ்ரோவின் தலைவர் சிவன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்தாதவது:

“ககன்யான் விண்கலத்தில் மனிதனை விண்ணுக்கு அனுப்பும் பணிகள் நடந்து வருகின்றன. தலைமை அமைச்சரின் அறிவிப்பின்படி 2022ஆம் ஆண்டில் விண்ணுக்கு மனிதன் அனுப்பப்படுவான்" -என்றார்.



# இன்றைய நாள்

**மேடம்:** பின்விளைவு உணர்ந்து பேசுவது நல்லது. நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைப்பதில் தாமதம் ஏற்படும். தொழில், வியாபாரத்தில் முன்னேற்றம் பெற கூடுதல் உழைப்பு அவசியம். பணச்செலவு அதிகரிக்கும்.

**இடபம்:** சிறிய பணி கூட பலமடங்கு நன்மையை தரும். கடந்த காலத்தில் தொழில், வியாபாரத்தில் இருந்த இடையூறு விலகும் .பணம் கொடுக்கல், வாங்கல் சீராகும். தாயின் தேவையை நிறைவேற்றி அன்பு, ஆசி பெறுவீர்கள்.

**மிதுனம்:** வாழ்வில் மனச்சாட்சிப்படி நடந்து கொள்வீர்கள்.தொழில், வியாபாரத்தில் வருகிற குளறுபடியை சரி செய்ய முயல்வீர்கள். லாபம் சுமார். வெளியூர் பயணம் செல்ல நேரிடும்.

**கடகம்:** பிறர் கருத்துக்கு முக்கியத்துவம். தருவதால் நற்பெயர் ஏற்படும். தொழில், வியாபாரம் சீர்பெற புதிய மாற்றங்களை செய்ய வேண்டும். அளவான பணவரவு கிடைக்கும். உணவு ஒவ்வாமையால் அஜீரணம் ஏற்படலாம்; கவனம் தேவை.

**சிம்மம்:** முன்யோசனையுடன் செயல்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் அனுகூலம் ஒருசேர கிடைக்கும். பணவரவும், நன்மையும் அதிகரிக்கும் .

**கன்னி:** உங்களுக்கு உதவுவது போல் சிலர் பாசாங்கு செய்வர். தொழில், வியாபாரம் செழிக்க நிதான அணுகுமுறை பின்பற்ற வேண்டும். செலவுக்கு சேமிப்பு பணம் பயன்படுத்துவீர்கள். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும்.

**துலாம்:** எளிதான பணி கூட சுமை போல தோன்றும். தொழில், வியாபாரம் சார்ந்த எவரிடமும் சச்சரவு கூடாது. நிலுவைப் பணம் வசூலிப்பதில் நிதான அணுகுமுறை பின்பற்றுங்கள். மனம் இலகுவாகும்.

**விருச்சிகம்:** உறவினர் அதிக பாசம் கொள்வர். எதிர்காலவாழ்வில் நம்பிக்கை வளரும். தொழில், வியா பாரம் செழிக்க தகுந்த பணிபுரிவீர்கள். வீட்டு உபயோகப் பொருள் வாங்குவீர்கள். .

**தனுசு:** சில நிகழ்வுகள் இனியதாக அமைந்து உற்சாகம் தரும். எந்த செயலையும் நேர்த்தியுடன் செய்வீர்கள். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட வளர்ச்சி இலக்கு பூர்த்தியாகும்.

**மகரம்:** .மனதில் கூடுதல் நம்பிக்கை வளர்ப்பது அவசியம். தொழில், வியாபார நடைமுறை சுமாரான அளவில் இருக்கும். பணவரவை விட செலவு அதிகரிக்கும்.

**கும்பம்:** வெற்றி பெற எளிதான வழி பிறக்கும். நண்பர் தேவையான உதவியை வழங்குவார். தொழில், வியாபாரத் தொடர்பு பலம் பெறும்.

**மீனம்:** சந்தோஷ முகத்துடன் காணப்படுவீர்கள். சமூகப் பணி ஆற்றுவதில் ஆர்வம் வளரும். தொழில், வியாபாரத்தில் உருவாகிற வளர்ச்சி புதிய அனுகூலம் தரும்.



# இமையாணன் மத்தி இறுதிக்குத் தகுதி

யாழ்ப்பாணம், ஜுன் 24
வடமராட்சி கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் அணிக்கு 9 பேர் பங்கு பற்றும் வே.நகுலன் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில் இமையாணன் மத்திய விளையாட்டுக் கழக அணி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.
வதிரி டயமன்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற அரையிறுதியாட்டத்தில் இமையாணன் மத்திய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பலாலி விண்மீன் அணி மோதியது. இதில் 1:0 என்ற கோல் கணக்கில் இமையாணன் மத்திய விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. ஆட்டநாயகனாக சதுர்சன் தெரிவு செய்யப்பட்டார். (23)

## றோயல், கலைவாணி அணிகள் வெற்றி

யாழ்ப்பாணம்,ஜுன் 24
யாழ்.கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கால்பந்தாட்ட கழகங்களுக்கு இடையில் நடத்தும் எவ்.ஏ கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது.
அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம் பெற்ற ஆட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உரும்பிராய் சென்.மைக்கல் அணி மோதியது. இதில் நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களில் இரண்டு அணிகளும் தலா 2 கோல்களை பதிவு செய்ததால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக சமநிலை தகர்ப்பு உதை வழங்கப்பட்டது. இதில் 5:3 என்ற கோல் கணக்கில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது. (23)

*** *** ***

யாழ்ப்பாணம்.ஜுன்24
இன்னுமொரு போட்டியில் நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது. நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து போதானா வைத்தியசாலை அணி மோதியது. இதில் நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக்கழக அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (23)




## கிளி. கோணாவில் ம.வி. மாகாண சம்பியனாகியது

பரபரப்பாக இடம்பெற்ற ஆட்டத்தில் பலம்பொருந்திய கிளிநொச்சி சிவநகர் அ.த.க. பாடசாலையை வீழ்த்தி மாகாணச் சம்பியனாகியது கிளிநொச்சி கோணாவில் மகாவித்தியாலயம்.
வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான மாகாண மட்ட கபடிப்போட்டி நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது. இதில் 17 வயது ஆண்களுக்கான இறுதிப்போட்டியில் கோணாவில் மகா வித்தியாலயத்தை எதிர்த்து கிளிநொச்சி சிவநகர் அ.த.க பாடசாலை மோதியது.
பரபரப்பாக இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் இரு அணியினரும் 28:28 என்ற கணக்கில் புள்ளிகளைப் பெற்றதால் சமநிலையானது. இதனையடுத்து வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக மேலதிக நேரத்தில் கோணாவில் 8 புள்ளிகளையும் சிவநகர் 6 புள்ளிகளையும் பெற 36:34 என்ற புள்ளிகளைப் பெற்று கோணாவில் மகா வித்தியாலயம் மாகாணச் சம்பியனாகியது. இந்தப் பிரிவில் மூன்றாமிடத்தை மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம் பெற்றது. (108)



## மாகாணச் சம்பியனாகியது கிளிநொச்சி இந்துக்கல்லூரி

கரணவாய், ஜுன் 24
வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான 20 வயதுப் பெண்களுக்கான கபடிப்போட்டியில் மாகாணச் சம்பியனாகியது கிளிநொச்சி இந்துக்கல்லூரி.
இந்தப் போட்டியின் இறுதியாட்டம் நேற்று நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது. இதில் கிளிநொச்சி இந்துக்கல்லூரி அணியை எதிர்த்து நெல்லியடி மத்திய கல்லூரி அணி மோதியது. பலத்த எதிர்பார்ப்புக்களுக்கு மத்தியில் இடம்பெற்ற இந்தப் போட்டியில் ஆரம்பம் முதல் இறுதிவரை ஆதிக்கம் செலுத்திய கிளிநொச்சி இந்துக்கல்லூரி 40:12 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று மாகாண சம்பியனாகியது. (108)


கபடிப் போட்டியில்

## நெல்லியடி மத்திய கல்லூரி கிண்ணத்தை சுவீகரித்தது

கரணவாய், ஜுன் 23
வடமாகாணப் பாடசாலைகளுக்கான 20 வயது ஆண்களுக்கான கபடிப்போட்டியில் சம்பியனாகியது நெல்லியடி மத்திய கல்லூரி அணி.
வடமாகாணப் பாடசாலைகளுக்கான கபடிப்போட்டியின் இறுதியாட்டம் நேற்று நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது. இதில் நெல்லியடி மத்திய கல்லூரி அணியை எதிர்த்து சாவகச்சேரி இந்துக்கல்லூரி அணி மோதின. இதில் அபாரமாக விளையாடிய நெல்லியடி மத்திய கல்லூரி அணி 52:21 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று சம்பியனாகியது. இதில் மூன்றாமிடத்தை இளவாலை ஹென்றியரசர் கல்லூரி பெற்றது. (108)

## மெய்வல்லுநர் தொழில் நுட்ப அலுவலர் 9 அலுவலர் சித்தி

இலங்கை மெய்வல்லுநர் சங்கத்தால் நடத்தப்பட்ட மெய்வல்லுநர் தொழில் நுட்ப அலுவலர் தரம் 1 இக்கான பரீட்சையில் யாழ். மாவட்ட மெய்வல்லுநர் தொழில்நுட்ப அலுவலர் சங்கத்தின் 9 அலுவலர்கள் சித்தியடைந்துள்ளனர். கொழும்பு டொறிங்டனில் அமைந்துள்ள தேசிய விளையாட்டு விஞ்ஞான அலகில் கடந்த மே மாதம் 4ஆம், 5ஆம், 25ஆம், 26 ஆம் திகதிகளில் ஆங்கில மொழிமூலம் மேற்படி பரீட்சை நடைபெற்றது. இதில் சி.கோபிநாத் 87 புள்ளிகளையும், ஜ.சசிகுமார் 86 புள்ளிகளையும், ந.சுகந்தன் 86 புள்ளிகளையும், பா.தணிகைவேல்85 புள்ளிகளையும், இ.முகுந்தன் 85 புள்ளிகளையும், திருமதி எம். என். கரிகரன் 84 புள்ளிகளையும், பு.கலாபன் 82 புள்ளிகளையும்,மா.இளம்பிறையன் 81 புள்ளிகளையும், சி.உதயணன் 80 புள்ளிகளையும் பெற்றனர். (23)



## கோக்லிக்கு தண்டம்

நடப்பு உலகக் கிண்ணத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற போட்டியில் இந்தியா - ஆப்கானிஸ்தான் ஆட்டம் இடம்பெற்றது. 29ஆவது பந்துப்பரிமாற்றத்தை பும்ரா வீசினார். முதல் பந்தை ரஹ்மத் எதிர்கொண்டார். பும்ரா வீசிய பந்து துடுப்பு மட்டையில் படாமல் ரஹ்மத்தின் காலை தாக்கியது. பும்ரா உட்பட இந்திய அணி வீரர்கள் ஆட்டமிழப்பைக் கோரினர். ஆனால், நடுவர் ஆட்டமிழப்பு கொடுக்க மறுத்து விட்டார்.

இதனால் ஆத்திரமடைந்த அணித்தலைவர் கோக்லி வழக்கத்துக்கு மாறாக நீண்ட நேரம் கத்தினார். இது குறித்து பன்னாட்டு கிரிக்கெட் சபை போட்டி நடுவரிடம் புகார் அளிக்கப்பட்டது. கோக்லியும் தனது தவறை ஒத்துக் கொண்டார். இதனால் போட்டியின் ஊதியத்திலிருந்து 25 சதவீதம் தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.




## டோனியின் ஆலோசனையில் சமி 'ஹட்ரிக்'



நடப்பு உலகக் கிண்ணத்தில் இந்தியா -ஆப்கான் அணிகளுக்கிடையில் இடம்பெற்ற இந்திய அணி வீரர் முகமட் சமி 'ஹட்ரிக்' சாதனையைப் படைத்தார்.

அவர் இறுதிப் பந்துப்பரிமாற்றத்தின் 4,5ஆவது பந்தில் அடுத்தடுத்து இலக்குகளை எடுத்து அடுத்த பந்தை வீச முதல் டோனியின் ஆலோசனை பெற்ற பின்னர் பந்தை வீசி அடுத்த இலக்கையும் கைப்பற்றினார்.

இது குறித்து சமி தெரிவிக்கையில்;

டோனி என்னிடம், உங்களுடைய திட்டத்தில் எந்தவித மாற்றமும் செய்ய முயற்சிக்க வேண்டாம். ஹட்ரிக் சாதனை படைக்க வாய்ப்புள்ளது. இதுபோன்ற வாய்ப்புகள் கிடைப்பது மிகவும் அரிதானது-என்றார்.

# தென்னாபிரிக்காவை வீழ்த்தி பாகிஸ்தான் அபார வெற்றி




பாகிஸ்தான் அணியின் பந்து வீச்சுக்கு முகம் கொடுக்க முடியாமல் தென்னாபிரிக்கா அணி சரணடைந்தது. தென்னாபிரிக்கா அணி கடந்த போட்டியில் ஏற்பட்ட தோல்வியுடனேயே நடப்பு உலகக் கிண்ணத் தொடரில் இருந்து வெளியேறியிருந்தது.

நடப்பு உலகக் கிண்ணத்தில் நேற்று இடம்பெற்ற போட்டியில் தென்னாபிரிக்கா பாகிஸ்தான் அணிகள் மோதின. இதில் பாகிஸ்தான் அணி 49 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் அணிக்கு நல்லதொரு இணைப்பாட்டத்தை வழங்கி அணியின் ஏனைய வீரர்களுக்கு உற்சாகமூட்டினர். ஒவ்வொரு துடுப்பாட்ட வீரர்களும் பந்துகளை வீணடித்தாலும் நிதானமாக ஆடி ஓட்டங்களைச் சேர்த்தனர். இதில் ஹரிஸ் சோகில் அதிரடியாக ஆடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை அதிரடியாக உயர்த்தினார். அவர் 59 பந்துகளில் 89 ஓட்டங்களைப் பெற்றார். அவருடன் பாபர் அசமும் அரைச்சதம் கடந்து அசத்தினார். பாகிஸ்தான் அணி கடந்த போட்டியில் ஏற்பட்ட தோல்விக்கு பதிலடி கொடுத்தனர். அணி நிர்ணயிக்கப்பட்ட 50 பந்துப்பரிமாற்றங்களில் 7 இலக்குகளை இழந்து 308 ஓட்டங்களைப் பெற்றது.

பந்து வீச்சில் நிகிடி, தாஹீர் சிறப்பித்தனர்.

பதிலுக்குக் களமிறங்கிய தென்னாபிரிக்கா அணிக்கு அமீர் அதிர்ச்சி கொடுத்தார். அணித் தலைவர் பிளாசிஸ் மட்டும் பொறுப்புடன் ஆடி அரைச் சதம் கடந்து பொறுப்புடன் ஆடினார். இறுதியில் பெலுக்குவே அதிரடியாக ஆடி ஆட்டமிழக்காது 32 பந்துகளில் 46 ஓட்டங்களைப் பெற்றார். ஏனைய வீரர்கள் பந்துகளை வீணடித்தனர். அந்தளவுக்கு பாகிஸ்தான் அணியின் பந்து வீச்சு காணப்பட்டது. சடப்கான், வகாப் ரஷ், அமீர் ஆகியோர் தென்னாபிரிக்க துடுப்பாட்ட வீரர்களை நிலைகுலையச் செய்தனர். அணி 50 பந்துப்பரிமாற்றங்களில் 9 இலக்குகளை இழந்து 49 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது. தொடர் தோல்விகளால் தென்னாபிரிக்கா அணி துவண்டு போகின்றது. ஆட்டநாயகனாக பாகிஸ்தான் அணி வீரர் ஹிரிஸ் சோகில் தெரிவு செய்யப்பட்டார்.

# நியூசி. அணி திரில் வெற்றி

நியூசிலாந்து அணியின் அபார பந்து வீச்சால் மேற்கிந்தியத்தீவுகளை வெற்றி கொண்டு அந்த அணி தொடர்ந்தும் முதலிடத்தில் நீடிக்கின்றது.

நடப்பு உலகக் கிண்ணத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற போட்டியில் மேற்கிந்தியத்தீவுகள் - நியூசிலாந்து அணிகள் மோதின. இதில் நியூசிலாந்து அணி 5 ஓட்டங்களால் திரில் வெற்றி பெற்றது.



நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மேற்கிந்தியத்தீவுகள் அணி முதலில் நியூசிலாந்து அணியைத் துடுப்பெடுத்தாடுமாறு பணித்தது. நியூசிலாந்து அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் இருவரும் வந்த வேகத்திலேயே எந்தவொரு ஓட்டத்தையும் பெறாது ஆட்டமிழந்து வெளியேறினர். தொடர்ந்து களமிறங்கிய அணித் தலைவர் வில்லியம்சன் அணியின் நிலையை உணர்ந்து பொறுப்புடனும், நிதானமாகவும் ஆடினார். அவருடன் ரெயிலரும் கைகொடுத்தார். இருவருக்குமான இணைப்பாட்டமாக 165 ஓட்டங்கள் பகிரப்பட்டன. வில்லியம்சன் சதம் கடந்து அசத்தினார். இது இந்த உலகக் கிண்ணத்தில் அவர் பெற்ற இரண்டாவது சதம் ஆகும். அவர் 14 நான்கு ஓட்டங்கள், ஓர் ஆறு ஓட்டங்கள் அடங்கலாக 148 ஓட்டங்களைக் குவித்தார். அணி நிர்ணயிக்கப்பட்ட 50 பந்துப்பரிமாற்றங்களில் 8 இலக்குகளை இழந்து 291 ஓட்டங்களைப் பெற்றது.

பந்து வீச்சில் மேற்கிந்திய வீரர் கொட்ரோல் சிறப்பாக பந்து வீசி 4 இலக்குகளைச் சாய்த்தார். அவருக்கு பிரித்வைட்டும் 2 இலக்குகளை எடுத்து கைகொடுத்தார்.

பதிலுக்குக் களமிறங்கிய மேற்கிந்தியத்தீவுகள் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் கிறிஸ் கெய்ல் நிதானமான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். அவர் 6 ஆறு ஓட்டங்கள் 8 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 87 ஓட்டங்களைப் பெற்றார். கிட்மெயரும் அரைச் சதம் கடந்து அசத்தினார். அடுத்து வந்த வீரர்கள் எவரும் அணியின் பொறுப்புணர்ந்து ஆடவில்லை. மத்தியதர வீரர் பிரித்வைட் தனியொருவராகப் போராட ஆரம்பித்தார். மறுமுனையில் நியூசிலாந்தின் பந்து வீச்சாளர்கள் இலக்குகளைச் சாய்ப்பதில் குறிக்கோளாக நின்றனர். பிரித்வைட் சதம் கடந்து அதிரடியாக துடுப்பெடுத்தாடினார். 48.9 ஆவது பந்துப்பரிமாற்றத்தில் அவர் ஆட்டமிழக்க அணி சகல இலக்குகளையும் இழந்து 5 ஓட்டங்களால் வெற்றியைத் தவற விட்டது.

பந்து வீச்சில் போல்ட் அபாரமாக பந்து வீசி முக்கிய 4 இலக்குகளைக் கைப்பற்றி அணியின் வெற்றிக்கு பெரிதும் பங்களிப்பு செய்தார். அவருடன் பெர்குசன் 3 இலக்குகளையும் கைப்பற்றியிருந்தார். ஆட்டநாயகனாக நியூசிலாந்து அணி வீரர் வில்லியம்சன் தெரிவு செய்யப்பட்டார்.

## வெனிசூவெலா வெற்றி

கோபா அமெரிக்கா கால்பந்து போட்டித் தொடர் பிரேசிலின் பல்வேறு நகரங்களில் நடைபெற்று வருகின்றது. நேற்று இடம்பெற்ற போட்டியொன்றில் வெனிசூவெலா - பொலிவியா அணிகள் மோதின. இதில் வெனிசூவெலா அணி 3:1 என்ற கணக்கில் வெற்றி பெற்றது.

முதல் பாதி ஆட்டம் ஆரம்பித்து 2ஆவது நிமிடத்தில் வெனிசூவெலா வீரர் டார்வின் மசீஸ் சிறப்பான கோல் ஒன்றைப் போட்டார். முதல் பாதி ஆட்டத்தில் வெனிசூவெலா அணி 1:0 என்ற கணக்கில் முன்னிலையிலிருந்தது.

இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பித்தது மீளவும் வெனிசூவெலா வீரர் டார்வின் மசீஸ் ஆட்டத்தின் 55 ஆவது நிமிடத்தில் ஒரு கோலைப் போட்டார். பொலிவியா அணி வீரர்கள் கோல்கள் போடுவதற்கு பல முறை முயற்சித்த போதிலும் அது கைகூடமால் ஏமாற்றமடைந்தனர். ஆனால் அதிக நேரம் பந்துகளை அவர்களே தங்களது கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர். ஆட்டத்தின் 82ஆவது நிமிடத்தில் பொலிவியா அணி வீரர் ஆராஸ் எதிர்பாராத விதமாக சிறப்பான கோல் ஒன்றைப் பதிவு செய்தார். பதிலுக்கு 86ஆவது நிமிடத்தில் வெனிசூவெலா அணி வீரர் மார்டீன்ஸ் ஒரு கோலைப் போட ஆட்டத்தின் இறுதியில் வெனிசூவெலா அணி 3:1 என்ற கணக்கில் பொலிவியாவை வீழ்த்தி வெற்றி பெற்றது.

24 மணி நேரமும் உடனுக்குடன்
செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 648
வர்ணம் : இளநீலம்
சீட்டிழுப்பு திகதி: 2019.06.23
இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 62,660,075/-
வெற்றி இலக்கங்கள்
02 08 27 67 I
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>AK என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 992
சீட்டிழுப்பு திகதி 2019.06.22 சனிக்கிழமை
E 20 41 42 69
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
ஊதா, பச்சை, நீலம், சிவப்பு நிற டிக்கட்டுகள் முறையே திங்கட்கிழமை, வியாழக்கிழமை, சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றிபெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

கோடிபதி ஷனிதா
சீட்டிழுப்பு வாரம்: 458 சீட்டிழுப்பு திகதி: 2019.06.21
வர்ணம்: செம்மஞ்சள் வெள்ளிக்கிழமை
S 40 41 53 76
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>KS என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
பச்சை, இளஞ்சிவப்பு, செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள் முறையே ஞாயிற்றுக்கிழமை, செவ்வாய்க்கிழமை மற்றும் வெள்ளிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றிபெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி அதிர்ஷ்டம்
திகதி 23.06.2019 வெற்றி வாரம் 2545 வர்ணம் ஊதா
கும்பம்
வெற்றி இலக்கங்கள் 14 28 35 53
செவ்வாய்க் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2,807,194 /=
25.06.2019ம் திகதி செவ்வாய்க் கிழமை சிகப்பு நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919



கோபா அமெரிக்கா கால்பந்து தொடர்;

# பெருவை வீழ்த்தி பிரேசில் அபாரம்

கோபா அமெரிக்கா கால்பந்து போட்டித் தொடர் பிரேசிலின் பல்வேறு நகரங்களில் நடைபெற்று வருகின்றது. நேற்று இடம்பெற்ற போட்டியொன்றில் பிரேசில் - பெரு அணிகள் மோதின. இதில் பிரேசில் அணி 5:0 என்ற கணக்கில் அபார வெற்றி பெற்றது.

முதல் பாதி ஆட்டம் ஆரம்பித்ததும் பிரேசில் அணி வீரர்கள் மாறி மாறி கோல்களைப் போட ஆரம்பித்தனர். ஆட்டத்தின் 12,19,32 ஆவது நிமிடங்களில் பிரேசில் அணி வீரர்கள் போட்டி போட்டுக் கொண்டு கோல்களைப் போட்டனர். முதல் பாதி ஆட்டத்தில் பிரேசில் அணி 3:0 என்ற கணக்கில் முன்னிலையிலிருந்தது.

இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பித்து 8ஆவது நிமிடத்தில் பிரேசில் அணி வீரர் டானி அல்விஸ் ஒரு கோலைப் போட பெரு அணி வீரர்கள் சோர்வடைந்தனர். தொடர்ந்து பிரேசில் அணி வீரர்கள் மாறி மாறி கோல்களைப் போட பெரு அணியால் அதனைக் கட்டுப்படுத்த முடியாமல் போனது. இருந்தும் பெரு அணியினர் பிரேசில் அணியின் கோல் கம்பங்களை நோக்கி 8 தடவைகள் பந்தை அடித்தும் அது அதில் ஒன்றுகூட கோலாக மாறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஆட்டத்தின் இறுதி நிமிடத்திலும் பிரேசில் அணி வீரர் வில்லயன் ஒரு கோலைப் போட பிரேசில் அணி 5:0 என்ற கணக்கில் பெரு அணியை வீழ்த்தி அபார வெற்றி பெற்றது. இந்த வெற்றியோடு பிரேசில் அணி 7 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளது.

## கிண்டல்களுக்கு சர்பிராஸ் பதிலடி



நடப்பு உலகக் கிண்ணத் தொடரில் இந்தியா - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையில் இடம்பெற்ற போட்டியில் இந்திய அணி வெற்றி பெற்றது. இதனால் பாகிஸ்தான் அணி மீது ரசிகர்கள் கடும் விமர்சனம் செய்து வந்தனர். குறிப்பாக போட்டியின்போது கொட்டாவி விட்ட பாகிஸ்தான் அணித் தலைவர் சர்பிராஸ் அகமதுவை அதிக அளவில் கிண்டல் செய்து வருகின்றனர்.

இதுகுறித்து சர்பிராஸ் தெரிவிக்கையில்;

கொட்டாவி விடுவது இயல்பானதுதான். நான் அந்த விடயத்தை சுற்றியே இருக்க விரும்பவில்லை. எனது கொட்டாவியில் மக்களுக்கு பணம் கிடைக்கும் என்றால், அது நல்ல விடயம்தான் - என்றார்.



கோபா அமெரிக்கா கால்பந்து தொடரில் இடம்பெற்ற போட்டியொன்றின் போது ரசிகர் ஒருவர் தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்திய போது.

## மரண அறிவித்தல்

### திருமதி சண்முகம் மகாலட்சுமி



வேலணை மேற்கு சிற்பனையைப் பிறப்பிடமாகவும், நல்லூர் செட்டித்தெரு ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சண்முகம் மகாலட்சுமி 22.06.2019 சனிக்கிழமை இறைபதம் எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா - பாக்கியலட்சுமி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான செல்லையா - கண்மணி தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சண்முகத்தின் அன்பு மனைவியும், சாந்தினி, சகுந்தலா, உஷாராணி, விஜயகுமார், உதயகுமார், விஜிதா ஆகியோரின் பாசமிகு தாயாரும், சொர்ணகாந்தன், ஜெயகாந்தன், ஜெகதீசன், காலஞ்சென்ற ரீனா மற்றும் ராதிகா, முரளிதரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இல.10, செட்டித்தெரு ஒழுங்கை,
நல்லூர்.

(CS/26240)(11.17)

தகவல்:
குடும்பத்தினர்.

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை

- அதி விரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
- கடலுணவு, இறைச்சி, எண்ணெய் வகை, மருந்துப் பொருள்கள், பழ வகைகள், பால் மா வகைகள் என்பவற்றையும் அனுப்பி கொள்ள முடியும்.
- நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.

20 வருடகால அசைக்க முடியாத நம்பிக்கையை வென்ற நாம்

அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்

1, பிறவுண் வீதி, நாவலர் சந்தி, யாழ்ப்பாணம்.
021 222 6113

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 24.06.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.